ஜினோதயமலர்

மார்ச் 1957

JL
M211,N52,SV
N57.10.5
134052

# சர்வோதயம்

மலர் 10] மார்ச் 1957 [இதழ் 5

துன்முகி மாசி-மீ

972

OFFICE OF THE REGISTRAR
4-MAR 1957
MADRAS

1042
1-57



ஆச்சார்ய விநோபா

சர்வோதயப் பிரசுராலயம்

# வினோபாஜியின் கீதைப் பேருரைகள்

மலிவுப் பதிப்பு : 320 பக்கம் : விலை ரூபாய் ஒன்று

சுமார் 25 வருஷங்களுக்கு முன்னால் சிறையில் தன் அரசியல் சகாக்களுக்கு கீதையைப்பற்றி வினோபாஜி நடத்திய பேருரைகள் இன்று மக்களின் நூலாக பல பாஷைகளில் 6 லட்சம் பிரதிகளுக்கு அதிகமாக பரவியிருக்கின்றன. சத்திய தர்சனத்திற்கும் சர்வோதய வாழ்விற்கும் இதை ஓர் வரப்ரசாதமாக வினோபாஜியின் கையொற்த்திட்டு மக்கள் பக்தியுடன் தினம் வாங்கிச் செல்லுகிறார்கள்.



இதுவரையில் தமிழில் ஆறு பதிப்புகளில் 68,000 பிரதிகள் வெளியிட்டோம். ஏழாம் பதிப்பாக 32,000 பிரதிகள் இப்பொழுது வெளிவந்துவிட்டன. இத்துடன் ஒரு லட்சம் பூர்த்தியாகிவிட்டது.

ஒவ்வொரு ஊரிலும் வீடு வீடாக வாழ்க்கையின் சாஸ்திரமாகக் கருதப்படும் இந்த அரிய நூலைப் பரப்பும் பக்தர்கள் தேவை. முன்பணத்துடன் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு கீழ்க்கண்டபடி சலுகை கொடுக்கப்படும்.

10 முதல் 50 வரை —20 சதம் கமிஷன்
50-க்குமேல் —25 ,,

விற்பனை வரி, பாக்கிங், ரயில் கட்டணம் முதலிய செலவுகள் வாங்குகிறவர்களைச் சேர்ந்தது. ஆர்டருடன் முழு தொகையையும் மணியார்டர் அல்லது பாங்கி டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டும்.

சர்வோதய பிரசுராலயம், சீனிவாசபுரம், தஞ்சாவூர்


Complimentary Copy

மலர் 10 ★ சர்வோதயம் ★ இதழ் 5

தொடர் | பொருளடக்கம். | தொ. 113


கிராம ஸ்வராஜ்யத்திற்கு கிராமதானம் ... 258
தஞ்சை ஜில்லாவில் வினோபாஜி யாத்திரை .... 259
அறந்தாங்கியில் வினோபாஜியின் உடல் நிலை .... 260
கிராமதானத்தின் கடன் பிரச்சனை ... 261
தமிழ்நாடு சர்வோதய மண்டல் ... 263
வினோபாஜியின் பிரசங்கங்கள் :
மகாத்மா அருளிய படிப்பினை—சர்வோதய தினத்தில் வினோபாஜியின் அருள்மொழி ... 265
நெல்லை ஜில்லாவில் வினோபாஜியின் நம்பிக்கை .... 271
தமிழ்நாட்டில் வினோபாஜியின் யாத்திரை .... 272
தஞ்சையில் வினோபாஜியின் பிரசங்கம்—(முன் இதழ் தொடர்ச்சி) ... 273
திருக்குறளில் ஆதாரக்கல்வி .... 276
கிராமதானத்தில் திருமணமும் மருமகனும் ... 280
எந்த எதிர்ப்பும் இல்லாத இயக்கம் ... 284
கல்வியை பணத்திலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் விடுவிக்க வேண்டும் ... 289
இரண்டு தவறான கருத்துக்கள் : கடவுள் காரியம் கோவிலிலும் — சமூகக் காரியம் அரசாங்கத்திலும் .... 301
திராவிட நாட்டின் விசேஷ பக்தி—(கல்லணை) ... 307
காலத்திற்கேற்ப பக்தி வழிபாடு .... 311
பிறருக்குக் கொடுக்கவே கைகள் : பிறரிடமிருந்து பிடுங்கவல்ல .... 315
புலர்ந்தது காலை புனிதன் அருளால் —ச. மு. சொக்கலிங்கம், குருகுலம், கீனூர் ... 320
தமிழ்நாட்டில் சர்வோதய மேளா ... 321
இலங்கையில் சர்வோதய தினம் ... 324


வருஷ சந்தா ரூ. 3. | மலேயாவிற்கு வருட சந்தா ரூ. 5 | தனிப் பிரதி அணா 4.

134452

# சர்வோதயம்

## கிராம ஸ்வராஜ்யத்திற்கு கிராமதானம்

பூதான இயக்கம் கிராமதானமாக மலர்ந்துவிட்டது. இது இறுதி லக்ஷியமாகிய கிராமராஜ்யத்திற்கு அண்மையில் கொண்டு போகக்கூடியது. நிலமிருப்பவர்களிடமிருந்து ஒரு பாகநிலத்தை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க இதுவரை கேட்டுவந்தோம். ஆனால் இதற்கிடையில் கிராம மக்களே நிலத்தின்பேரில் உள்ள தனி உடைமையை உதறித் தள்ளி கிராம சமுதாயத்திற்கு அர்ப்பணம் செய்ய முன்வந்தது உலக சரித்திரத்திலே ஓர் புதுமை. ஒரிஸ்ஸாவில் இரண்டாயிரத்திற்கதிகமான கிராமங்களில் மக்கள் இத்தகைய சமுதாய வாழ்க்கைக்குத் தயாராகிவிட்டார்கள்.

1951-ல் பூதானம் தேசமெங்கும் பரவியதுபோல் இன்று தேசமெங்கும் கிராமதானம் பரவி வருகிறது மகாராஷ்டிரத்தில் 52 கிராமம் கொண்ட பிர்க்காதானம் பூர்த்தியாகிவிட்டது. தமிழ்நாட்டில் எந்த தேசிய இயக்கத்திற்கும் முன்னணியில் நிற்கும் பெருமை மதுரை ஜில்லாவைச் சார்ந்தது. மதுரை ஜில்லாவில் இதுவரை 200 கிராமங்கள் கிராமதானமாகக் கிடைத்துவிட்டன. திருமங்கலம் தாலுக்கா தானத்திற்கு 400 கிராமத் தலைவர்கள் சங்கற்பம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்திற்குள் திருமங்கலம் கிராமதானம் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடும் இதர மாகாணங்களும் மதுரை ஜில்லாவில் நடக்கும் விசேஷ முயற்சியை எதிர்பார்க்கின்றன.

“கிராமதானக் கருத்து மிகவும் சுலபமானது. இன்று கிராம ஜனங்களின் தனியுடைமையின் அஸ்திவாரத்தில் நடத்தும் வாழ்வு மிகவும் கஷ்டமானது. சொத்துக்குத் தனி உடைமை கொண்டாடினால் அது ஊரல்ல, காடு. கிராமத்தினரைத் தாக்க வரும் வட்டிக்காரர், வக்கீல், வியாபாரி முதலியவர்களிடமிருந்து தப்புவதற்கு ஒரே வழி கிராமதானமே” என்று வினோபாஜி கருங்காலக்குடியில் சொன்னார். இதை கிராம மக்கள் புரிந்து கொள்ளும்படி கருத்தைப் பரப்பும் உத்தம ஊழியர்களே இப்பொழுது தேவை.

☆

## தஞ்சை ஜில்லாவில் வினோபாஜி யாத்திரை:

தஞ்சை ஜில்லாவில் 20–1–57ல் கல்லணையில் ஆரம்பமான வினோபாஜியின் பூதான கால்நடை யாத்திரை 12–2–57ல் மாணிக்கவாசகர் க்ஷேத்திரமாகிய ஆவடையார் கோவிலில் முடிவுற்றது. வினோபாஜி சென்ற இடங்களில் எல்லாம் ஆண்களும் பெண்களும் வழியில் தரிசனம் செய்தார்கள். கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கானவர்கள் வந்து அமைதியாகக் கேட்டனர். தஞ்சை, பட்டுக்கோட்டை முதலிய இடங்களில் வந்ததுபோல் இவ்வளவு பெண்கள் இதுவரையில் பொதுக்கூட்டங்களுக்கு வந்திருக்கமாட்டார்கள்.

பணத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இன்று தாசராக இருக்கும் கல்வியை விடுவிக்க முன்வரவேண்டும் என்று கும்பகோண அறிவாளிகளுக்கு விடுத்த அறைகூவல் ஒப்பற்றது. பூதான இயக்கம் ஒரு பக்தி இயக்கம் என்பதை எங்கும் மக்கள் மனதில் படும்படி பேசிய பொன்மொழிகளில் சிலவற்றை இந்த இதழில் காணலாம். இந்த இதழ் முழுதுமே வினோபாஜியின் தஞ்சை ஜில்லாவின் சில பிரசங்கங்களைக்கொண்டு புத்தக வடிவத்தில் அமைந்துள்ளது.

12–2–57ல் சர்வோதய மேளாவில் ஆவடையார்கோவிலில் ஊழியர்கள் நூற்று பிரார்த்தனை செய்தார்கள். மாலை ஜில்லா ஊழியர்கள் கூட்டத்தில் 25 தினத்தில் வினோபாஜி யாத்திரையில் நடந்த வேலை அறிக்கையை ஸ்ரீ மு. நடராஜன் படித்தார்.

வினோபாஜி 230 மைல் நடந்து 25 இடங்களில் தங்கினார். இப்பொழுது கிடைத்த நிலம் 635 ஏகரா 36 செண்டு. இதற்கு முன்னமே கிடைத்த நிலம் 1472–26½. முன்னமே மூன்று வருஷம் முன்பு ஸ்ரீ V. S. தியாகராஜ முதலியார் வாக்களித்த 250 ஏகராவை செட்டிபயம் என்ற ஒரு கிராமத்தின் பகுதியை கிராமதானமாக மாற்றிக் கொடுத்தார். ஸ்ரீ R. வேதாந்தம் அவர்கள் தனக்குள்ள 62 ஏகரா நிலத்தை ஒரு கிராமத்தின் பகுதியை சம்பத் நகர் என்று கிராமதானமாகக் கொடுத்துத் தானும் ஜீவன்தானியாக ஆனார். எந்த யாத்திரையிலும் இலக்கிய விற்பனைக்கு வினோபாஜி தனி மகத்துவம் அளித்துவருகிறார். ஒவ்வொரு கூட்டத்திலும் முடிவில் “இந்தக் கருத்துக்கள் கொண்ட இலக்கியம் இங்கு உள்ளன. படிக்கத் தெரிந்தவர்கள் வாங்கிக்கொள்ள வேண்டும்” என்று கூற மறப்பதில்லை. இந்த 25 தினத்தில் விற்ற இலக்கியம் ரூ. 9,964. இதில் கீதைப் பேருரைகள் மட்டும் ரூ. 8,460.

இந்த ஜில்லாவில் பூரண கிராமதானம் கிடைக்கவில்லை என்பது பெரிய குறை. நடந்த வேலையும் குறைவு என்பதை ஊழியர்கள் மிகுந்த துக்கத்துடன் ஆவுடையார்கோவிலில் நடந்த பிரிவுக்கூட்டத்தில் விநோபாஜிக்கு முன்னால் ஒப்புக்கொண்டார்கள். இனிமேல் ஊக்கத்துடன் தொடர்ந்து கிராமதானத்திற்காக பாடுபட்டு விநோபாஜி வேறு ஜில்லாவில் இருக்கும்பொழுதும் கிராமதானம் கிடைத்த செய்தியை தெரிவிப்பதாக சங்கல்பமும் செய்துகொண்டார்கள்.

விநோபாஜியின் "மாலைக்கூட்டம் கோவிற்குள் நடந்தது. சுக்ரீவன் போன்று பிரதிக்ஞை செய்கிறவர்கள் வேண்டாம். ஹநுமான், லக்ஷ்மணன் போன்ற ஊழியர்களே வேண்டும். பூதான ஒளி கிடைத்தவுடன் இடைவிடாது தான் யாத்திரை செய்து வருவது போல உழைக்கும் ஊழியர்களே வேண்டும்" என்று விநோபாஜி சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது. இதை நாம் மனதில் இறுத்திக்கொண்டு உழைத்தால் பிர்க்கா தானமல்ல, தாலுக்கா தானமல்ல, விநோபாஜி கரியாப்பட்டிணத்தில் சொன்னதுபோல ஜில்லா தானமே சாத்தியமாகும். யாத்திரை பூர்த்தி பெற ஜில்லா லோக சேவக் ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யர், ஸ்ரீ மு. நடராஜன், சர்வ சேவா சங்க ஊழியர்கள், மாணவர்கள், சகோதரிகள், இதரர்கள் எல்லோரும் மிகப் பாடுபட்டார்கள்.

## அறந்தாங்கியில் விநோபாஜியின் உடல் நிலை:

11—2—57ல் அறந்தாங்கியில் மாலை விநோபாஜியின் உடல் நிலை எல்லோருக்கும் கவலைக்கிடமாயிருந்தது. அன்று மாலை 5 மணிக்கு வழக்கம்போல் கூட்டத்தில் விநோபாஜி பேச ஆரம்பித்தார். அன்று ஆரம்பித்த விஷயம் பெரியது. அதை முடிப்பதற்கு ஒரு மணி நேரமாயிருக்கலாம். ஆனால் 15 நிமிஷத்தில் பேச்சை முடித்து விட்டு இருப்பிடத்திற்குப் போய் விட்டார். அங்கு சில கீதைப் பேருரைகளில் கையொப்பமிட்டார். பிறகு அதையும் நிறுத்திவிட்டார். கையெழுத்திற்காக காத்திருந்த பலர் ஏமாந்து திரும்பினார்கள். விநோபாஜிக்கு கடுமையான வயிற்று வலி. வயிற்றைப் பிடித்துக்கொண்டு வலியால் துடிதுடித்துக் கொண்டிருந்தார். உள்ளூர் டாக்டர் வந்து எனிமா கொடுத்தார். வலி ஒன்றும் குறையவில்லை.

பிறகு ஸ்ரீ. டி. கே. சீனிவாசன் தஞ்சை கலெக்டருக்கு போன் செய்து ஜில்லா மெடிகல் ஆபீசரை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். அதற்குள்ளாக விநோபாஜி வாந்தி எடுத்தார். அதனால் சிறிது வலிகுறைந்தது. பக்கத்தில் கவலையுடன் அழுது



கொண்டிருந்த ஸ்ரீ டி. கே. சீனிவாசன் அவர்களை அருகில் கூப்பிட்டு 'நாளை மாணிக்கவாசகர் தானே' என்றார். ஆம், நாளை 'மாணிக்கவாசகர் ஸ்தலம்' என்று சொன்னார். அதற்குள்ளாக திருவாசகத்திலிருந்து கீழ்க்கண்ட பாடலை

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற்கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே."

என்று சொல்லிக்கொண்டே நித்திரைக்குப் போய்விட்டார். நித்திரைக்குப் போனவுடன் எல்லோருடைய கவலை சிறிது நீங்கிற்று.

காலை 3–30 மணிக்கு விநோபாஜி எழுந்தார். வழக்கம் போல் பிரார்த்தனை நடந்தது. இரவே ஜில்லா மெடிகல் ஆபீசர் வந்து விட்டார்; அவர் பரிசோதனை செய்தார். ஒரு தினம் ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னார். ஆனால் டாக்டர் பேச்சை விநோபாஜி கேட்கவில்லை. சரியாக 4–30 மணிக்குப் புறப்பட்டு விட்டார்.

ஆவுடையார் கோவில் வந்த பொழுது களைப்பாக இருந்தார். எப்படி இவ்வளவு தூரம் நடந்து வந்தார் என்பது எல்லோருக்கும் ஆச்சரியம். "ஆண்டவன் கிருபை இருந்தால் முடவனும் மலை ஏறலாம்; ஊமையும் பேசுவான்" என்று அன்று மாலைக் கூட்டத்தில் விநோபாஜி குறிப்பிட்டார். ஆண்டவனின் கருணையால் அன்று மிக கவலைக்கிடமான கட்டத்திலிருந்து விநோபாஜி காப்பாற்றப்பட்ட சம்பவம் மறக்க முடியாதது.

## கிராம தானத்தின் கடன் பிரச்சனை:

கிராம தானத்தில் தனிப்பட்டவர்களின் கடன் என்ன ஆகும்? கடனை யார் ஏற்பார்கள்? நிலத்தின் பேரிலுள்ள தனி உடமையை விட்ட பிறகு வைத்தியம், படிப்பு, நல்லது, பொல்லாதது இதற்கெல்லாம் எதை நம்பி நமக்கு யார் கடன் கொடுப்பார்கள்? என்று இம்மாதிரியான பல கேள்விகள் கேட்கப்படுகின்றன. கிராமதானம் செய்த இடங்களில் கடன் பிரச்சனையைத்தீர்ப்பது பெரிய பிரச்சனை. இதைப்பற்றி திருப்பத்தூரில் நடந்த சர்வோதய மண்டல் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. சர்ச்சை நடந்தது. எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த விநோபாஜி கடைசியில் எல்லா கடனுக்கும் ஒரே ஒரு அஹிம்சா குண்டு போட்டு தீர்த்து விட்டதை நினைத்தாலே, நம்மை ஒரு புதிய உலகத்திற்கே கொண்டு போவது போலத் தோன்றும். விநோபாஜி சொன்னதின் சாரத்தை சற்று விஸ்தாரமாக விளக்கத்துடன் இங்கு கூறுகிறேன்.

இங்கு நடந்த சர்ச்சை எல்லாம் கேட்டேன். இதெல்லாம் புதியதல்ல. முன்னமே இதற்கு பல முறை பதில் சொல்லியுள்ளேன்.

1. "கடன்" என்று எண்ணுகிறோமே, அது என்ன? ரூபாய் அளவில் நாம் எண்ணுவதால் கடன் பெரிதாகத் தோன்றுகிறது. ஒரு தாய் தனது பையனுக்குச் செய்யும் சேவை எல்லாவற்றிற்கும் ரூபாயில் கணக்கு எழுதிவைத்து அவன் வயது வந்தவுடன், "அப்பா, நீ எனக்கு இவ்வளவு தொகை கொடுக்க வேண்டும்" என்றால் பையன் என்ன சொல்வான்? "தாயே, என் ஜீவன் உள்ளவரை நான் உங்களுக்கு சேவை செய்து வருவேன்". இம்மாதிரி தாய் தன் சேவையை ரூபாய் கணக்கில் எப்பொழுதாவது சொல்லுவாளா?

2. எழுதாத கடனின் மதிப்பை யார் நிர்ணயிக்க முடியும்? நான் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு ரூ. 200 வேண்டும். ஒரு நண்பர் கொடுத்து உதவுகிறார். நான் வாங்கியது ரூ. 200 தான். ஆனாலும் அதை ஒரு லக்ஷமாக மதிக்கிறேன். எழுதிய கடனை விட எழுதாத கடனை எப்படித் தீர்ப்பது?

3. சரி, என் விவாகத்திற்கு உதவியவர், நான் நோயாக இருக்கும் பொழுது சிகிச்சைக்கும் அவரே உதவ மாட்டாரா? என்னை கைவிட்டு விடுவாரா? இந்த பயமும், அவநம்பிக்கையும் சரியா?

4. கடன்கள் கிராமத்தில் மட்டுந்தானா உள்ளது? பிர்க்கா தானம், தாலுக்கா தானம், ஜில்லா தானமாக இந்தியா முழுவதும் தானமயமாக மாறிவிடுகிறது என்று வைத்துக் கொண்டால் இந்தக் கடன்களை எல்லாம் யார் தீர்ப்பது? யாராலும் தீர்க்க முடியுமா? இதில் யார் கடன்காரர்? யார் கடன் கொடுத்தவர்?

5. நாம் கிராமதானத்தில் நிலப் பிரச்னை மட்டுமா தீர்க்கிறோம்? புரட்சிகரமான மன மாறுதலால், ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்த எண்ணுகிறோம். இந்தமாதிரி உடைமையைப்பற்றி மனமாற்றப் புரட்சி ஏற்படும்பொழுது கடன் கொடுத்தவர்கள் மட்டும் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள், என்பது நாம் அவர்களுக்குச் செய்யும் அநியாயமாகும். நிலம் உடையவன் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு கையை விரித்தவுடன் கடன் கொடுத்தவன் மனமும் மாறி, அப்பா—என் கடனுக்காக கஷ்டப்படாதே. நானும் எனது சம்பத்துதானமாக என் கடனை விட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்லமாட்டானா? வேறுவிதமாக எண்ணுவது அவனுக்கு நாம் இழைத்த அநியாயமாகும்.



6. நம் இயக்கத்தில் கொடுக்காதவர்கள் என்றே இல்லை என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். இன்று கொடுக்காதவர் நாளையோ மறுநாளோ கொடுக்கிறவர். யாரும் கொடுக்கமாட்டார் என்று எண்ணுவது நம் கொள்கைக்கே விரோதமாயிற்றே.

7. இன்னொருவிதத்தில் பார்க்கலாம். விவசாயியோ இது வரை வேலைசெய்து கொடுத்துக்கொண்டே வந்திருக்கிறான். அவன் கொடுத்ததை எவ்வளவு என்று யார் கணக்கிட முடியும்? அவனுக்குக் கணக்கு வைத்துக்கொள்ளத் தெரியாது. எழுதப் படிக்கக்கூடத் தெரியாதே. ஆனால் பணம் கொடுத்தவன் கணக்குத் தெரிந்தவன். சும்மா வேலை செய்யாமல் சாப்பிட்டவன். கணக்கு எழுதிவைத்துக்கொள்வதில் சாமர்த்தியசாலி. அவன் எழுதி வைத்திருப்பதுதான் கடனா? விவசாயி எழுதிவைக்காமல் ஆதிமுதல் தன் உழைப்பின் ரூபத்தில் கொடுத்துவந்தானே, அது கடன் இல்லையா?

8. ஒவ்வொருவனுக்கும் மூன்றுவித கடன்கள் உண்டு. அதாவது உற்றார்களுக்கு, பிதிர்களுக்கு, தேவதைகளுக்கு கடன் பட்டிருக்கிறான். ஆனால் அவன் "நான்," "எனது" என்ற அகங்காரத்தை விட்டு சந்நியாசம் வாங்கிக்கொள்ளும்பொழுது மூன்று கடன்களும் தீர்ந்துவிடுகின்றன. அதுபோல தனிப்பட்ட உடைமையை ஒருவன் விட்டுவிட்டவுடன் எல்லா கடன் பந்தங்களும் தீர்ந்துவிடுகின்றன என்று சொல்லுகிறேன்.

9. கிராமதானம் கிடைத்த இடங்களில் அரசாங்கமே சிறிது சாமர்த்தியமாயிருந்தால் உடனே அங்குவந்து பல பிரச்சனைகளை தீர்க்க முன்வர வேண்டும்.

## தமிழ்நாடு சர்வோதய மண்டல் :

தமிழ்நாடு சர்வோதய மண்டல் சென்ற டிசம்பர் 31௳ மதுரையில் விநோபாஜியின் ஆலோசனைப்படி உருவானது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இது ஒரு பதவியும், அதிகாரமும், நிதியும், நிர்வாகப் பொறுப்பும் இல்லாத ஒரு சிறு திருக்கூட்டம். அடிக்கடி கூடி முக்கியமாக கிராமதான வேலையைப் பற்றியும், நிர்மாண வேலைகளின் தத்துவ சம்பந்தமானவைகளைப் பற்றியும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவார்கள். இந்தக்குழுவில் உள்ளவர்களின் தார்மீக சக்தியைப் பொறுத்திருக்கிறது அதன் செல்வாக்கு.

இந்த மண்டலின் இரண்டாம் கூட்டம் திருப்பத்தூரில் விநோபாஜி அவர்களின் முகாமில் 17–2–57௳ நடந்தது. திருமங்கலத்தில் தாலுக்கா தானத்திற்காக பெரிய முயற்சி நடந்து

வருகிறது. இதில் உள்ள மூன்று சிரமங்களை நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதாவது கடன்கள் விஷயமாக கிராமத்து ஜனங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களும் கஷ்டமும்; தேர்தலினால் ஏற்பட்ட சூழ்நிலை; தொண்டர்களின் குறைவு. வினோபாஜி இவைகளுக்கு வெகு உயர்ந்த முறையில் பதில் சொன்னார்.

கிராமதானம் சம்பந்தமாக இருவித வேலைகள். ஒன்று முன்னணி வேலை; அல்லது புரட்சி வேலை. அதாவது கிராம தானத்தின் லட்சியத்தைப்பற்றிச் சொல்லி கிராமதானம் பெறுதல். இரண்டாவது பின்னணி வேலை; அல்லது தொடர்ந்த நிர்மாண வேலை. இரண்டு வேலைக்கும் தனித்தனி திறமை வேண்டும். முன்னணி வேலையில் சிலர்தான் வெற்றிபெற முடியும். அதற்குத் தகுந்த ஊழியர்களை ஒவ்வொரு ஸ்தாபனமும் தேர்ந்தெடுத்து ஒருமாத காலத்திற்காவது திருமங்கலம் வட்டாரத்திற்கு அனுப்பவேண்டும் என்பது மண்டலின் அபிப்ராயம். சர்வ சேவா சங்கம், கஸ்தூரிபா நிதி, காந்திகிராமம், தமிழ்நாடு காந்தி நிதி முதலிய ஸ்தாபனங்களிலிருந்து பலர் மார்ச்சு மாதம் முழுவதும் திருமங்கலம் வட்டாரத்தில் தீவிரமாக வேலை செய்து தாலுக்கா தானத்தை ஏப்ரல் மாதத்திற்குள்ளாக பூர்த்தி செய்வார்கள். இது நிறைவேறினால் தாலுக்கா தானம் சாத்தியமானது என்று அகில இந்தியாவிற்கும் காட்டும் பெருமை தமிழ்நாட்டைச் சார்ந்ததாகும்.

தேர்தல்தான் நமக்கு தக்க சமயம் என்று வினோபாஜி எடுத்துக் காட்டினார். சென்ற தேர்தலில் 1952-ல் உத்திரபிரதேசத்தில் வினோபாஜி யாத்திரை செய்துகொண்டிருந்தார். பூதான யாத்திரை தடைபடாமல் உற்சாகமாக நடந்துவந்தது. தேர்தல் சமயத்தில் மக்களின் சிந்தனை சக்தியும் உணர்ச்சியும் தூண்டப்படுகிறது. நாம் ஏன் தேர்தலில் சம்பந்தப்படவில்லையென்றும், சர்வோதய லட்சியத்தையும் கிராமதானம், தாலுக்கா தானம், கிராம ராஜ்யம் முதலியவைகளைப்பற்றியும் எடுத்து மக்களுக்குச் சொல்லத் தேர்தல் காலம் மிகவும் நல்ல சந்தர்ப்பமாகும் என்று வினோபாஜி தெளிவாக்கினார், தேர்தலை இடையூறாக எண்ணுவதைவிட நமக்கு நல்ல சந்தர்ப்பமாகக்கொண்டு அதி தீவிரமாக வேலை செய்யவேண்டும் என்பதை யார் மறுக்க முடியும்?

★

# மகாத்மா அருளிய படிப்பினை

## சர்வோதய தினத்தில் வினோபாஜியின் அருள்மொழி

*சர்வோதய தினத்தன்று வினோபாஜி தமிழ் நாட்டில் இருப்பது இது தான் முதல் முறை. திருவாரூர் தியாகராஜர் சன்னதியில் தனது குருநாதர் மகாத்மா காந்தி அடிகளைப்பற்றி வினோபாஜி பேசக் கேட்டது நமது பாக்யம். காந்திஜியைப்பற்றி சொன்னபொழுது வினோபாஜிக்கு நாவெழவில்லை. கண்களில் நீர் ததும்பியது. முன்னால் காந்திஜியைக் காண்கிறேன் என்றார். அன்று ஆத்ம சோதனை தினம் என்று சொல்லி ரத்தினச் சுருக்கமாகப் பேசி தனது பிரதிக்ஞையுடன் முடித்துக் கொண்டார்.*

---

### ஆத்ம சோதனைத் தினம்

இன்றைய நாள் உபதேசம் செய்யும் நாளல்ல. இது எனக்கு ஆத்ம பரிசோதனை தினம். இப்படி பார்க்கப்போனால் ஒவ்வொரு நாளும் ஆத்ம பரிசோதனை செய்து கொண்டே இருக்கவேண்டும் இப்படித் தொடர்ந்து ஆத்ம பரிசோதனை செய்துகொண்டே இருந்தால் தான் மனிதனுக்கு தன் கடமை உணர்வு புலப்படுகிறது. ஆனால் சில குறிப்பிட்ட நாட்கள் ஆத்ம பரிசோதனை செய்வதற்கென்றே உள்ளன. இன்று காந்தி அடிகளின் புண்ணிய திதி என்று உங்களனைவருக்கும் தெரியும். இன்றைய இதே நாள் இதே சமயம் தான் அவர் பிரார்த்தனைக்கு போய்க் கொண்டிருந்தபோது நின்றவாறே ஆண்டவனை அடைந்தார். அவருடைய விருப்பமும், காரிய முயற்சியும், அவருடைய காரியமும் சதா ஆண்டவனை ஸ்மரித்துக்கொண்டே இருக்கவேண்டுமென்பதே. கடைசியில் ஆண்டவன் ஸ்மரணையிலேயே ஆண்டவன் அடியினை சேர நினைத்தாரோ அதேபோல் பிரார்த்தனை எண்ணம் இருக்கும்போதே இறைவன் அவரைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டார்.

### இயேசுவைப் போலவே

அவர் இக்காரியத்தில் அதிக கட்டுப்பாடு உடையவர். ஆனால் சர்தாருடன் (திரு. வல்லபாய் படேல்) பேசிக்கொண்டிருந்ததால் சிறிது காலதாமதமாகிவிட்டது. ஆகவே அவர் முற்றிலும் தன்மயமாகி பிரார்த்தனைக்குப் போய்க்கொண்டிருந்தார். பிரார்த்தனையில் அவருடைய உள்ளம் ஈடுபட்டிருந்த அந்நிலையிலேயே ஆண்டவன் அவரை விடுவித்துவிட்டார். எந்த நாட்டுக்கு இறுதிவரை சேவை செய்ய முயன்றாரோ எந்த நாட்டின் சேவை தன் வாழ்வின் லட்சியமென்று தன் வாழ்வை அதற்காக அர்ப்பணித்தாரோ அதே நாட்டான் ஒருவன் அன்று அவரைச் சுட்டான். இயேசுநாதரின் நிலைமையும் இத்தகையதே. அவர் யாருக்கு சேவை செய்ய விரும்பினாரோ அவர்களாலேயே சிலுவையில் அறையப்பட்டார். ஆகவே அவ

ருக்கு இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு அதே நிலைமை சரித்திரத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவருடைய நினைவு நாளான இன்று நாம் பிரார்த்தனைக்காக கூடி இருக்கிறோம். பாரத நாட்டின்மேல் ஆண்டவன் செய்து இருக்கும் கிருபை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. கணக்கற்ற சான்றோர்களின் மழையை ஆண்டவன் இங்கு தொடர்ந்து வர்ஷிக்கிறார்.

### “வானாகி, மண்ணாகி”

இன்று இங்கு நான் கோவிலுக்கு கூட்டிப்போகப்பட்டேன். அங்கு நான் கண்டது என்ன? ஆண்டவன் தரிசனத்துக்காக கோவிலுக்குப்போகத் தேவையில்லை. “ஆகாசம் சரீரம் பிர்மம்” என்று கூறப்படுகிறது. ஆண்டவனுக்கு ஆகாசமே சிறந்த சரீரமென்று சொல்லப்படுகிறது. மாணிக்கவாசகரும் எங்கும் நிறைந்த பரம்பொருளை வார்த்தைகளால் வர்ணிக்கப் புகும்போது ‘வானாகி, மண்ணாகி’ என்று வானுக்கே முதலிடம் தந்திருக்கிறார். (இங்கு பாபாவின் கண்களில், நீர் ததும்பியது. அவருடைய வாயிலிருந்து வார்த்தை வெளி வரவில்லை. சிறிது நேரம் கழித்து மீண்டும் பேசத் தொடங்கினார்.) இவ்வாறு சர்வவியாபியான பரமேஸ்வரனை பார்க்க வேண்டும் என்று போக நினைக்கும்போதே அவருடைய தரிசனம் கிடைத்துவிடுகிறது.

### என் கால் மண்ணிலும், சிந்தை விண்ணிலும்

நீங்கள் ஆகாரம் மிகவும் குறைவாக சாப்பிடுகிறீர்களே, உங்கள் உடல் எப்படி சரியாக நடக்கிறது என்று என்னை கேட்கிறார்கள். இதற்கு நான் என்ன பதில் சொல்வது? நான் கூறுவதாவது: நான் சாப்பிடுவதற்கு ஆகாசம் அதிகமாக கிடைக்கிறது. ஆகவே எனக்கு மண்ணின் தேவை அதிகம் இல்லை. ஆகையால்தான் மண்ணை (உணவை) குறைவாக சாப்பிடுகிறேன். உலகத்துக்கோ மண் அதிகமாக தேவையாயிருக்கிறது. ஆகையால்தான் உலகத் தேவைக்காக பூதானம் கேட்கிறேன். கால்கள் மண்ணிலும், மனம் விண்ணிலும், இருக்கிறது. இந்த உருவில் ஆண்டவனை விடாது நான் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். ‘ஊனாகி, உயிராகி’ என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். ஆண்டவன் கோயிலிலும் இருக்கிறார். ஆனால் கோயிலில் மட்டும்தான் ஆண்டவன் இருக்கிறார் என்று எனக்கு அனுபவப்பூர்வமாக ஏற்பட்டதில்லை. கோயிலில் சென்றபோது நான் யாரைக் கண்டேன். முதன்முதலாக நான் நால்வரைக் கண்டேன். பிறகு அறுபத்துமூவரைக் கண்டேன். இத்தகைய பக்தர்கள் வந்து சேர்ந்ததால்தான் இந்த இடத்திற்கு இவ்வளவு சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. நான் சொல்ல வந்தது நான்கு பேரையோ அல்லது 63 பேரையோ மட்டுமல்ல. பாரதத்தில் ஆயிரக்கணக்கானவர் இவ்வாறு ஏற்பட்டிருக்கிறார்கள் என்பதை சொல்லவே வந்தேன். இது ஆண்டவனின் மிகச் சிறந்த கிருபையாகும். இங்கே என்னதான் இல்லை. கங்கை, யமுனை காவிரி போன்ற புண்ணிய நதிகளும் இமயம் வேங்கடம்



போன்ற மலைகளும் கணக்கற்ற மூலிகைகளும் விருட்சங்களும் தானியங்களும், மலர்களும், காய் கனிகளும், கிடைக்கின்றன. இது பாரதத்தின் சிறப்பேயாகும். ஆயினும் இச் சிறப்புக்கள் வேறிடங்களிலும் உண்டு.

### சமத்துவ நிலை

ஆனால் இதன் விசேட சிறப்பு சான்றோர் பலர் இங்குத் தோன்றியிருக்கிறார் என்பதே. ஒருவர் பின் ஒருவராக பெருமக்கள் பலர் இங்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். நாட்டில் உயர்ந்த நிலையிலும் அத்தகையோர் ஏற்பட்டுள்ளனர். தாழ் நிலையிலும் இவ்வாறே காண்கிறீர்கள். நாடு உச்ச நிலையிலிருந்தபோது சான்றோர்களின் வைராக்கிய போதனை நமக்குக் கிடைத்திருக்கிறது. சமூகம் சீரும், செல்வமும் நிறைந்து சிறப்புற்றிருந்த காலத்திலும் பற்றற்று வாழ்நிலையை அவர்கள் கற்பித்து இருக்கிறார்கள். வீழ்ச்சி நிலையிலும்கூட நாம் தைரியம் இழக்காது இடையறாது முயன்று உழைக்க வேண்டும் என்று அவர்கள் போதித்து இருக்கிறார்கள். இன்பத்தின்போதும் ஆபத்தே, துன்பத்திலும் ஆபத்தே. இந்த இருவகையிலுமே ஆபத்தானவைதான். இவற்றிலிருந்து விடுபட்டு நாம் சமத்துவ புத்தியுடன் இருக்கும்போதுதான் நம்மை காப்பாற்றிக்கொள்ள இயலும். வண்டிக்காரனானவன் வண்டியோட்டி செல்லுகிறான். ஒரு மேடு வருகிறது. வண்டி மேலே ஏறவேண்டும். மாடுகளால் மேட்டின்மீது இழுக்கமுடியவில்லை. வண்டி ஆபத்திலிருக்கிறது. இப்போது மாடுகள் விரட்டி வண்டியை முன்னேற்ற வேண்டியிருக்கிறது. வண்டி கீழே இறங்கிவிட்டால் ஆபத்தே. மாடுகள் பின்னோக்கி ஓட விரும்புகின்றன. ஆனால் அவற்றின் போக்கில் விட்டால் ஆபத்தே. மற்றோரிடத்தில் பள்ளம் ஒன்று வருகிறது. இவ்விடத்தில் மாடுகள் கீழ்நோக்கி ஓட விரும்புகின்றன. இந்த இடத்திலும் மாடுகளை அடக்கி நம் வசம் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மாடுகளின் போக்கின்படி ஓடவிட்டால் வண்டி நொறுங்கி நாசமேற்படும். ஆகவே உயரமும் தாழ்வும் இல்லாத சமமான இடத்திலேயே வண்டி ஆபத்தின்றி சமமாக போகமுடியும். இந்நிலையில் வண்டிக்காரன் தூங்கவும் தூங்கலாம். வண்டி தானேபோகும்.

மனிதனுக்கு இன்பநிலை என்பது வண்டி இறக்கத்தில் போகும் நிலையாகும். இந்நிலையில் நாற்புறமும் இன்பங்கள் சூழ்ந்திருப்பதால் இந்திரியங்கள் சீக்கிரமாக ஓட ஆரம்பிக்கின்றன. இந்த இறக்கத்தில் இந்திரிய மாடுகளை இழுத்து நிறுத்தாவிட்டால் வண்டி குப்புற விழும், நாசமாக வேண்டியதே. இதைவிட மனிதனுக்கு துன்பநிலையே ஒருவகையில் மேலானது எனக் கூறலாம். துன்பங்கள் சூழ்ந்துள்ளபோது இந்திரியங்கள் மேலே செல்வதில்லை. கால்கள் முன்னேறுவதில்லை. அப்போது மேலே செல்வதற்கான துணிவும் ஊக்கமும் வேண்டும். ஆயினும் இதில் முன்னேறிவிட்டாலும் பள்ளத்தில் விழுந்து நொறுங்கும். பயங்கர

நிலைமை இல்லை. ஆகவேதான் இறக்க நிலையைவிட இது உயர்ந்தது எனக் கூறினேன்.

## இன்பத்தில் அடக்கமும் துன்பத்தில் தைரியமும்

சமூகம் துன்பத்தில் துயருறும் நிலையும், இன்பத்தில் மகிழும் நிலையும் உண்டு. ஆகவேதான் இன்பத்தில் அடக்கவும் துன்பத்தில் துணிவும் கொள்ளுமாறு சான்றோர்கள் கூறினார்கள். அத்தகைய மகா புருஷர்களுள் ஆபத்தில் தைரியமும் துன்பத்திலிருந்து காத்துக் கொள்ள சக்தியும் தந்த காந்தியடிகள் நம்மை விட்டு போய்விட்டார். (பாபா இப்போது சிறிது நேரம் பேச முடியாது கண் கலங்குகிறார்) அவர் கொடுத்த படிப்பினையின்படி நாம் நடக்கிறோமா என்பதை சிந்திக்க வேண்டிய தினம் இது. இன்றும்கூட நாம் ஆபத்திலிருந்து முழுதும் தப்பிவிடவில்லை. பாரதநாடு ஆபத்திலேயே காலந்தள்ளி வருகிறது. உலகம் எப்போது சண்டையால் அழியுமென்று யாரும் எதுவும் கூற முடியாது. உலகில் சண்டை சச்சரவுகள் பல ஏற்பட்டு வருகின்றன. ஆயுத தளவாடங்கள் மூலமும் ஹிம்சையின் மூலமும் இவற்றை தீர்க்க முடியாது. ஆகவே உலகம் ஆட்டம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

## மகாத்மாவின் படிப்பினை

இந்த வேளையில் மகாத்மாவின் படிப்பினையின்படி நாம் நடக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். மகாத்மாக்களின் படிப்பினை எப்போதுமே நமக்கு உதவுகிறது. ஆனால் குறிப்பிட்ட சில சமயங்களில் அவர்களுடைய படிப்பினைகள் நமக்கு அதிகமாகத் தேவையாகின்றன. இப்போது தேர்தல் வந்திருக்கிறது. சுமார் ஒன்று அல்லது ஒன்றரை மாதம் வரை மக்கள் உள்ளம் போட்டி பொறாமையால் நிறைந்திருக்கும். இந்த சாதனங்கள் மக்களின் சக்தியை வளர்ப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அப்படியில்லை. இது வெறும் குழப்பமே ஆகும். தேர்தல், ஆட்சி முறை, ராணுவம், விஞ்ஞானம் இவைகளினால் உலகைக் காக்க முடியாது. விஞ்ஞானம் மக்கள் வாழ்வுக்கு ஒரு சிறிது உதவுகிறது என்பது உண்மையே. ஆனால் கருணை ஏற்படும்போதுதான் உலகை காக்க முடியும். பக்தி மார்க்கத்தில் இறைவன் கருணைக்கடல் என்று கூறப்படுகிறார். அவருக்குப் பல குணங்கள் உண்டு. அவற்றுள் நமக்கு மிகவும் தேவையானது கருணை குணமே. அந்த கருணை என்பதை என் சிற்றறிவுக்கொண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் பரப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அந்தக் கருணையில் எவ்வளவு வளர்ச்சி ஏற்படுகிறது என்பதை பரிசோதித்து வருகிறேன்.

பாபா தன்னை தனிப்பட்ட மனிதனாக எண்ணுவதே இல்லை. தனக்கு முக்தி வேண்டுமென அவர் ஒருபோதும் நினைத்ததில்லை. முக்தியைத் தவிர வேறு எதுவும் தனக்கு இல்லையென்பது அவருக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகவேதான் அதைப்பற்றி கவலை அவருக்கு இல்லை. ஆனால் ஆண்டவனின் கருணை எல்லா இடங்களிலும் எப்படி பரவ முடியும் என்பதே அவரது கவலை.



## தனி உடைமை அழிந்த கிராமதானம்

பூதான, கிராமதான கருத்துக்களின்மூலம் கிட்டத்தட்ட 2,000 கிராமங்களில் தனியுடைமை அழிந்திருக்கிறது என்பதைச் சொல்ல நான் விரும்புகிறேன். இந்த 2,000 கிராமங்களிலும் பலாத்காரத்தின் மூலம் நிலம் பிடுங்கப்பட்டிருந்தால் அச்செய்தி உலகம் முழுவதும் பரவியிருக்கும். ஆனால் மக்கள் தாங்களே மனமுவந்து தங்கள் உடைமையை விட்டிருப்பதால் இதன் சிறப்பை அதிகமாக குறிப்பிடவில்லை. நேற்றைய செய்தியில் 52 கிராமங்கள் கொண்ட பிர்க்கா தானம் மகாராஷ்டிரத்தில் கிடைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த செய்தி மிகவும் சிறிய எழுத்தில் எங்கோ ஒரு மூலையில் காணப்படுகிறது. ஆனால் கொலைபற்றிய செய்திகளும் பெரிய எழுத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதைப்பற்றி குறைகூற நான் விரும்பவில்லை. இன்றைய சமூக நிலை இத்தகையது என்பதை நானறிவேன்.

## ஆண்டவன் கருணையே இதன் ஆதாரம்

ஆண்டவன் கருணையை யாசிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சுமார் 6 வருட காலமாக பாபாவின் யாத்திரை நடைபெற்று வருகிறது. ஆண்டவன் கருணையின்றி இக்காரியம் நடைபெற முடியாது. பாபா நல்ல காரியம்தான் செய்கிறார். ஆனால் இதில் ஆண்டவன் பெயர் எதற்கு என்று ஒரு சகோதரர் என்னிடம் கேட்கிறார். பொருளாதார சாஸ்திரத்தினால் 6 வருடம் சுற்றும் துணிபு பாபாவுக்கு ஏற்பட்டிராது. ஆண்டவன் கருணையே இக்காரியத்தின் அடிப்படியாக உள்ளது. இதன் காரணமாகவே பாபா சிறிதும் பயமின்றி ஊர் சுற்றுகிறார், விஷயங்களை சொல்லுகிறார். கிராமதானம் பற்றி யார்தான் நினைத்து இருக்கமுடியும். ஏதோ சில கிராமங்கள் கிடைத்தால் போதும், ஆயிரக்கணக்கில் கிராமங்கள் கிடைக்க முடியுமென்று யார் நினைக்க முடியும். ஏதோ காட்டு பிரதேசத்தில் ஒரிஸ்ஸாவில் இது கிடைத்திருப்பது சரிதான். ஆனால் சீர்திருந்திய, பண்புடைய மதுரையில் நல்ல இடத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இவ்வளவு சுலபமாக கிடைக்குமென்று எப்படிச் சொல்ல முடியும்.

## கருணை வெள்ளமே கிராமதானம்

வெள்ளம் வந்துகொண்டிருக்கிறது. "மாறில்லாத மா கருணை வெள்ளமே" என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். அந்த கருணை வெள்ளமே இப்போது கிராமதானத்தின் மூலம் வெளிப்படுகிறது. இதைச் சொல்லும்போது என் மனக்கண் முன் பாபுஜியின் உருவம் தென்படுகிறது. நான் அவரைச் சேர்ந்த பொழுது சிறுபையனாக இருந்தேன். நான் என் வாழ்வை அவர் பாதங்களில் அர்ப்பணித்தேன். அப்போதிருந்து இறுதிவரை அவருக்கு சேவை

செய்யும் எண்ணத்தையே இறைவன் எனக்குக் கொடுத்திருந்தான். இன்று அவருக்குப் பிறகு அவருடைய சேவையைத் தவிர வேறு எதுவுமே எனக்குப் புலப்படவில்லை. அவர் ஆசீர்வாதம் என் தலைமேலும் என் அகமும், புறமும் எங்கும் நிறைந்திருக்கிறது. நாம் நடைமுறையில் பல தவறுகள் செய்து வருகிறோம். அதற்காக நாம் பச்சாதாபப் படுவதில்லை. ஏனெனில் எனது சக்தியைக் கொண்டு அதிகமாக என்னை அடக்கிவைத்துக் கொள்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. தவறுகள் அனைத்தையும் அவருக்கே சமர்ப்பித்து விடுகிறேன். அவருடைய சேவையில் இந்த உடல் தீரவேண்டுமென்ற ஒரே ஆசை வைத்திருக்கிறேன்.

### எனது பிரதிக்ஞை

இந்த புண்ணிய ஸ்தலத்திலே மாணிக்கவாசகரும், மற்ற சான்றோர்களும் வந்து சேர்ந்த இந்த புனித இடத்தில் மகாத்மா காந்தியின் சேவை என்ற காரணத்திலேயே என் உடலீடுபடுமென்று பிரதிக்ஞை செய்கிறேன். இந்த உடலினாலே தர்மத்திற்கே சேவை நடக்குமென்று நான் இந்த நால்வர் சந்நதியிலும், மகாத்மா காந்தியிடத்திலும், மகான்களின் சந்நதியிலும் பிரதிக்ஞை செய்துகொள்ளுகிறேன். இதைவிட அதிகமாக பேசும் சக்தி எனக்கு இன்று இல்லை.

★

## பூதான பிரசாரர்களுக்கு இலக்கியம்.

★ பூதான கமிட்டியும் ஸ்தாபனமும் கலைக்கப்பட்டபிறகு பூதான பிரசாரர்களுக்கு விற்பனைக்கு சமயத்தில் இலக்கியம் கிடைக்கவில்லை என்று அறிகிறோம்.

★ எல்லா காதி வஸ்திராலயங்களிலும் இலக்கியம் கிடைக்கும். குறைந்தது ரூ. 10-க்கு ரொக்கம் கொடுத்து வாங்கும் பிரசாரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் 20 சதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

★ தஞ்சை பிரசுராலயத்திலிருந்து அனுப்பினால் 25 சதம் கமிஷன் கொடுக்கப்படும். ஆனால் இதில் சுமார் 5 சதம் பாக்கிங், ரயில் சார்ஜ் முதலிய வகையில் ஆகும் செலவை ஆர்டர் கொடுக்கிறவர்களைச் சாரும்.

இதர விபரங்களுக்கு:

**சர்வோதய பிரசுராலயம், சீனிவாசபுரம், தஞ்சாவூர்.**

## நெல்லை ஜில்லாவில்
### வினோபாஜியின் நம்பிக்கை

நெல்லை ஜில்லாவில் வினோபாஜியின் பாத யாத்திரை சம்பந்தமாகவும், ஜில்லாவில் கிராமதான இயக்கத்தைத் தீவிரப்படுத்துவது விஷயமாகவும் நெல்லை ஜில்லா பூதான ஊழியர்களான ஸ்ரீ V. பொன்னையா, ஸ்ரீ V. R. சங்கரசுப்பு, ஸ்ரீ ஜான் காற்றூர் ஆகியவர்கள் பாவேஜியைக் கடந்த 11–2–57ல் தஞ்சை ஜில்லா அறந்தாங்கியில் கண்டு ஆலோசனை கேட்டார்கள். நெல்லை ஜில்லாவில் இதுவரை கிடைத்துள்ள 3 கிராமங்களை பாவோஜியிடம் அளித்து அவருடைய ஆசியையும் கோறினார்கள்.

அப்பொழுது பாவேஜி கூறியதாவது:

" தமிழ் நாட்டில் எந்த ஜில்லாவிற்கும் அமையாத இயற்கை அமைப்பு நெல்லை ஜில்லாவிற்கு அமைந்திருக்கிறது. ஒரு பக்கம் கடலும், மற்றொருபக்கம் மலைகளும் சூழ்ந்து இயற்கைஅமைப்பை அழகுபடுத்துவதுபோல் அங்கு வசிக்கும் மக்களின் இதயமும் கருணை நிறைந்ததாகவே இருக்கும். நான் இதுவரை நெல்லை ஜில்லாவிற்கு வராமலிருந்தாலும் என்னுடைய மனம் நெல்லை ஜில்லாவை நோக்கித்தான் இருக்கிறது. ஊழியர்கள் பக்தி சிரத்தையுடன் வேலையில் ஈடுபட வேண்டும். இப்பொழுது எங்கும் தேர்தல் சூழ் நிலை பரவியுள்ளது. இந்தநேரத்தில் தான் பூதான ஊழியர்களின் சேவையை மக்கள் நன்கு மதிப்பிடமுடியும். தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் சகல வற்றையும் துறந்து மாணிக்கவாசகர் அன்பு நெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பொழுது மக்கள் அவருக்கு அமோக ஆதரவளித்தார்கள். அதுபோல் ஊழியர்களாகிய நீங்களும் தியாக மனப்பான்மையுடன் வேலையிலீடுபடவேண்டும். மாணிக்கவாசகருடைய வழிதான் நம்முடைய வழியாக இருக்கவேண்டும்.

மதுரை ஜில்லாவில் நூற்றுக்கணக்கான கிராம தானங்கள் கிடைத்தன. இந்தத் தீப்பொறி மகா ராஷ்டிரத்தில் பரவி விட்டது. அங்கு ஒரு பிர்க்காவே தானமாகக் கிடைத்துள்ளதாக எனக்குச்செய்தி வந்துள்ளது இம்பொழுது மதுரை ஜில்லாவில் தாலுக்கா தானமளிப்பதற்கு முயற்சிகள் நடந்துவருகின்றன. நெல்லை ஜில்லா வாசிகளாகிய நீங்கள் ஜில்லா தானமளிப்பதற்கு உறுதி யெடுத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய அன்பும் ஆசியும் உங்களுக்கு எப்பொழும் உண்டு."

வினோபாஜி அவர்கள் நெல்லை ஜில்லாவில் பிரவேசிக்கும்பொழுது குறைந்தது 101 கிராமங்கள் தானமாகக் கொடுத்து வரவேற்கிறோம் என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்கள்.

வி. ஆர். சங்கரசுப்பு,
பூதான ஊழியர்.

# தமிழ்நாட்டில் விநோபாஜியின் கால்நடை யாத்திரை

**1957 பிப்ரவரி-மீ**

### தஞ்சை ஜில்லா

| தேதி. | முகாம். |
|---|---|
| பிப்ரவரி '57 | |
| 1 | திருத்துறைப்பூண்டி |
| 2 | கரியாப்பட்டிணம் |
| 3 | வேதாரண்யம் |
| 4 | வாய்மேடு |
| 5 | தில்லைவிளாகம் |
| 6 | தம்பிக்கோட்டை |
| 7 | பட்டுக்கோட்டை |
| 8 | திருச்சிற்றம்பலம் |
| 9 | ரோமங்கலம் |
| 10 | பூவத்தக்குடி |
| 11 | அறந்தாங்கி |
| 12 | ஆவுடையார்கோவில் |
| **ராமநாதபுரம் ஜில்லா** | |
| 13 | எம்பல் |
| 14 | சாக்கோட்டை |
| 15 | காரைக்குடி |
| 16 | குன்றக்குடி |
| 17 | திருப்பத்தூர் |
| 18 | நெற்குப்பை |
| 19 | சதுர்வேதமங்கலம் |
| **மதுரை ஜில்லா** | |
| 20 | பன்னப்பட்டி |
| 21 | கருங்காலப்பட்டி |
| 22 | குன்னாரம்பட்டி |
| 23 | சிறுகுடி |
| 24 | குட்டுப்பட்டி |
| 25 | நத்தம் |
| 26 | பரளி |
| 27 | பாலமேடு |
| 28 | புதுப்பட்டி |

★

# மதுரை ஜில்லாவில் மீண்டும் விநோபாஜி

விநோபாஜி இரண்டாம் முறையாக மதுரை ஜில்லாவில் மேலூரிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள பள்ளப்பட்டி கிராமத்தில் 20-2-57 தேதி பிரவேசித்தார். அன்று கீழ்க்கண்ட 25 கிராமங்கள் கிராமதானமாக அளிக்கப்பட்டன.

(1) கணவாய்ப்பட்டி
(2) குருக்கன்பட்டி
(3) சடயன்பட்டி
(4) கொக்குடயன் பட்டி
(5) முத்துப்பாண்டி பட்டி
(6) மேலப்பட்டி
(7) குளத்துப்பட்டி
(8) செட்டியப் பட்டி
(9) கட்டளைமாயன் பட்டி
(10) நடுகோட்டை
(11) பொன்னப்பட்டி
(12) கரிசாலப்பட்டி
(13) M. தாயனேரி
(14) N. தாயனேரி
(15) கீழக்கோட்டை
(16) மருத்தான்குடி
(17) வலையப்பட்டி
(18) வால்நாயக்கன் பட்டி
(19) பொட்டல் பட்டி
(20) S. P. நத்தம்
(21) ஆலம்பட்டி
(22) மணப்பாச்சேரி
(23) சிலம்பதோணப்பட்டி
(24) புதூர்
(25) குமரப்பட்டி

வரதன்,
லோக சேவக், மதுரை ஜில்லா.

# தஞ்சையில் விநோபாஜியின் பிரசங்கம்

(முன் இதழின் தொடர்ச்சி)

### தேர்தலில் ஆத்ம ஸ்துதி: பரநிந்தா

ஆத்ம ஸ்துதி பரநிந்தா, மித்யா வாசம்'' இதுவே தேர்தலின் காரியத்திட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் வேற்றுமை வளர்க்கப்படுகிறது. தன்னைப் புகழ்ந்து பிறரை நிந்திப்பதே தேர்தலின் காரியத்திட்டமாக இருக்கிறது. 5 பேர் ஒன்று சேர்ந்தால் அங்கு பரமேஸ்வரனைக் காணலாம். இதில் 4 பேர் ஆதரித்து ஒருவர் ஒருவரை எதிர்த்தாலோ அல்லது மூன்று பேர் ஆதரித்து இருவர் உடன்படாவிட்டாலோ அங்கு பரமனைக் காண முடியாது. இது மேற்கேயிருந்து கிடைத்த வித்யாச வித்தை. ஆனால் 5 பேரின் ஏகோபித்த தீர்ப்பே நமது முறை. அங்கு 7 பேரின் பேச்சும் பரமேஸ்வரனுடையது. மூன்று பேரின் பேச்சும் பரமேஸ்வரனுடையது. இதன் பலன் சண்டையே. இன்று நாம் பலவித வேற்றுமைகளைக் காண்கிறோம். ஹரிஜன், ஹரிஜனல்லாதார், பிராமணன், பிராமணரல்லாதார், ஆரியர், திராவிடர், ஹிந்து, முஸ்லீம், காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட், காங்கிரஸுக்குள்ளேயே சீர்திருத்தக் காங்கிரஸ் இவ்வாறு நம்முள் வேற்றுமை பெருகி நாம் பல சிறு சிறு துண்டுகளாக சிதறிக் கிடக்கிறோம். இது நாட்டிற்கு நலன் தருவதல்ல. நம் நாடு மிகப் பெரிய நாடு. இங்கே பிரச்னைகள் அதிகம். இங்கிலையில் கருத்து வேற்றுமை இயற்கையே. இதற்கு என்ன செய்வது? வெவ்வேறு கட்சிகளில்கூட தமக்குள்ளேயே கருத்துக் காணப்படுகிறது. இதற்கு மாறாக எல்லாக் கட்சிகளுக்கும், உடன்பாடான சில கருத்துக்கள் உள்ளன. உதாரணமாக நாடு முழுதும் குப்பை கூளங்கள் அகற்றுதல், ஜாதி வித்தியாசத்தை ஒழித்தல், மக்களின் வறுமையைப் போக்குதல் இவை அனைவருக்கும் ஒத்த வேலைத் திட்டமே. இத்தகைய கருத்துக்களை மக்களும் அரசாங்கமும் ஏற்று அமுல் நடத்த வேண்டும். இதை தேசிய வேலைத் திட்டமாக்கி அனைவரும் ஒத்துழைத்து செயலாற்றவேண்டும்.

சங்கரர், ஜீவனிடத்தில் எந்தவிதமான வேற்றுமையும் கூடாது என்றும், ராமானுஜரும் இதே கூறியுள்ளார். ஆனால் ராமானுஜரின் தத்துவப்படி ஜீவர்களுக்கும் கடவுளுக்கும் சிறிது வித்தியாசம். மத்வரின் கொள்கையோ ஜீவர்களுக்கும் இறைவனுக்கும் சிறிது அதிக வித்யாசத்தைக் காண்கிறது. ஒருவரும் பொய் பேசக்கூடாது. மதுபானம் கூடாது. பசுவதை கூடாது. தினந்தோறும் குளித்தல், நாவையும், மனதையும் கட்டுப்படுத்துதல். அனைவரும் ஒப்பிய தர்மமாயிருந்தது. ஆகவே தர்மம் நிலைத்தது. மக்கள் தர்ம வழியில் நடந்தனர். இப்படி உடன்பாடான முறையில் தொடர்ந்து நடந்து இருந்தால் இப்போதுள்ள முறை இருந்திராது. சில விஷயங்களில் எப்போதுமே

அறிவாளிகளிடம் வேற்றுமை காணப்படும். ஆனால் மக்களிடம் வேற்றுமை காணப்படுவதே கூடாது. மக்களுக்கு உடன்பாடான ஒரு காரியத்திட்டம் வேண்டும். இவ்வாறு இருந்தால் ஒன்று இரண்டாகவும், இரண்டு நான்காகவும் ஆகாது.

## கிராமதேவியின் பிரசாதம்

இதற்கு மாறாக நான்கு இரண்டாகவும், இரண்டு ஒன்றாகவும் இணையும். இதுவே கிராமதான காரியத்திட்டம். இதில் காங்கிரஸ், சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் ஆகிய எல்லாக் கட்சிகளும் இணைந்து வேலை செய்யலாம். சமூக நலத் திட்டமும், 5 ஆண்டுத் திட்டமும் ஆகிய அரசாங்கத்திட்டங்களும் இதனால் கெடுவதில்லை. மிராசுதார்களுக்கும் இதனால் நன்மையே. கங்கை சமுத்திரத்தில் சேர்வதால் கெடுதல் இல்லை. சிறிய வாய்க்கால்களும் ஆற்றில் கலப்பதால் தீமை இல்லை. ஆகவே சிறிய பெரிய நிலச்சுவான்தார்கள் கிராமதானத்தின் மூலம் ஒன்றாக இணைவதால் அவர்களுக்கு ஆபத்தில்லை. பாரத நாட்டிற்கு இதைவிடப் பெரியக் காரியத்திட்டம் இருக்க முடியாது. ஆகையால் இதை ஏற்பது அனைவரின் கடமையாகும். பாபாவின் காரியத்திட்டத்தில் அனைவருக்கும் நன்மையே. நாம் சமையல் செய்கிறோம். அதை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோம். அர்ப்பணித்து அந்த உணவையே இறைவனின் பிரசாதமாக ஏற்கிறோம். நாம் அர்ப்பணித்த உணவை இறைவன் ஏற்றுக்கொண்டு நம்மை பட்டினி போடுவதில்லை. இதற்கு மாறாக இறைவனுக்கு நாம் அர்ப்பணித்த உணவு இறைவன் அருள் கலந்த பிரசாதமாக நமக்குக் கிடைக்கிறது. இவ்வாறே கிராமத்திற்குப் பொதுவாக்கப்பட்ட நம் நிலம் கிராமதேவைக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. கிராமதேவதையின் சார்பில் அதே நிலம் மீண்டும் நமக்குப் பிரசாதமாகக் கிடைக்கிறது. கிராமத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான அளவு இந்தப் பிரசாதம் கிட்டுகிறது.

"தனக்கென சமைத்து உண்பவன் பாபத்தை உண்கிறான்". இது கீதையில் வருகிறது. மற்ற தர்மங்களிலும் இதே கருத்து காணப்படுகிறது. நம் சொத்தை பாங்கில் போட்டு வைத்தால் அழிந்துவிடுகிறது. ஆனால் சமூகமாகிய பாங்கில் போட்டு வைப்பதால் அது நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு அனைவருக்கும் மிகவும் லாபத்தைத் தருகிறது.

## பொருள் சேமிப்பில் உள்ள ஆபத்து

ஓடம் ஓடுவதற்கு நீர் தேவையே. நீரின்றி ஓடமில்லை. ஆனால் ஓடத்திற்கு ஆதாரமான நீர் ஓடத்திற்கு வெளியில் இருக்க வேண்டுமேயன்றி உள்ளே இல்லை. சமூகத்தின் செல்வமும் இத்தகையதே. செல்வம் ஒவ்வொரு வீட்டின் உள்ளே புகுந்து விடாமல் சமூக ஓடத்திற்கு வெளியில் அது மிதப்பதற்கு ஆதாரமாய் அமைய வேண்டும். தனிமனிதர்கள் பணத்தைச் சேர்ப்பதால்தான் திருடன் அதைத் திருடுவதற்குரிய வாய்ப்பு கிடைக்கிறது. திருடனுக்கு ஒரு செல்லாக் காசும் கிடைக்கக்கூடாது. வீட்டுக்கு வீடு பசு இருக்க வேண்டும். அதிலிருந்து பால், வெண்ணெய், கிடைக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் தோட்டமும், அதிலிருந்து காய்கறி, பழங்களும் உற்பத்தியாக வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஏராளமாக தானியம் இருக்க வேண்டும். இவ்வாறு செல்வம் தாண்டவம் ஆடும் இடத்தில் அனைவருக்கும் அன்பு தோய்ந்த வரவேற்புக் கிடைக்கும். வெளியிலிருந்து வருவோர்க்கு உழைக்க வாய்ப்பும் உண்ண உணவும் கிடைக்கும். ஆனால் தக்ஷிணைக்கு காசு கிடைக்காது. காசு சேர்ந்தால் ஆபத்தே. ஆகவே இத்தகைய கிராமத்தில் திருட்டுக்கு இடமே இராது. லட்டு இனிப்பான பொருளே. ஆனால் அதை வாய் தனக்குள்ளே வைத்துக் கொண்டால் அந்த லட்டு உப்பி அதனால் வாய்க்கு தொந்தரவு ஏற்படும். அதற்கு மாறாக வாய் அதை நன்றாக மென்று சுவைத்து வயிற்றுக்கு அனுப்பினால் வயிறு ஜீரணித்து உடல் முழுவதற்கும் அனுப்பி வைக்கும். அவ்வாறின்றி வயறு அதை தனக்குள்ளேயே வைத்துக் கொண்டால் வயிற்றுக்கு ஆபத்து ஏற்படும். வயிற்றைக் கிழிக்க வேண்டி நேரும். ஆகவே கைக்கு கிடைத்தது வாய்க்கும், வாய்க்குக் கிடைத்தது வயிற்றுக்கும் வயற்றுக்குக் கிடைத்தது உடல் முழுவதும் கிடைக்க வேண்டியதே. இயற்கை நியதி, இதற்கு மாறாக எங்காவது பொருள்கள் தேங்க நேரிட்டால் அங்கு அழிவே ஏற்படும். இவ்வாறு பொருள் சேகரிப்பில் மிகப் பெரிய ஆபத்து இருக்கிறது. திருடுவது பாபமே. ஆனால் அதை ஏற்படுத்துவது யார்? ஒருவன் சேர்த்து வைத்த சொத்தை இன்னொருவன் அதைத் திருடுகிறான். சேர்த்தது இருக்கும்வரை திருட்டும் இருக்கும். ஆகவே திருட்டை போக்க வேண்டுமானால் சேர்த்து வைத்தலையும் போக்க வேண்டும். என்னிடம் பணம், காசு இருக்குமானால் எனக்கு இரவில் உறக்கம் வராது. பணமிருக்குமிடத்தில் பயம்தான் இருக்கும். அன்பும், அமைதியும் இராது. ஒரு இடத்தில் அதிகமாக உள்ள பொருளை எடுத்து இல்லாத இடத்தைச் சரி செய்வதே கிராமதானம். இன்று கோவை ஜில்லாவிலிருந்து 3 கிராமங்களைப்பற்றிய செய்தி தந்தி மூலம் கிடைத்திருக்கிறது. மகாராஷ்டிரத்திலும் நூற்றுக்கணக்கான கிராமதானங்கள் கிடைத்து வருகின்றன. இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? இது தான் காலத்தின் கோரிக்கை.

(23—1—'57)



சர்வோதய பூதான

இலக்கியப் பத்திரிக்கை

# திருக்குறளில் ஆதாரக்கல்வி

ஆச்சார்ய விநோபா

ஆதாரக்கல்வியே வாழ்க்கையின் ஆதாரமாகும். வாழ்க்கையை எந்த வகையில் அமைத்துக்கொள்வது என்பதே அதன் அடிப்படை. வாழ்க்கையில் எந்த உடல் உழைப்பும் தேவையில்லை, எழுதப் படிக்கத் தெரிந்தால் சர்ச்சை செய்யத் தெரிந்தால் போதும் என்ற மனோபாவமே தற்காலக் கல்வி முறையில் காணப்படுகிறது. முற்காலக் கல்வி முறையில் நன்றாக, எழுதப் படிக்கவும் 1000, 500 சுலோகங்களைப் பொருளுடன் மனப்பாடம் செய்யவும், கணக்கும் கணிதமும் கற்பிக்கப்பட்டது. அத்துடன் குதிரைச் சவாரி. நீச்சல், மரமேறும் கலை இவ்வளவும் கிடைத்தது. இதுவே ஆதாரக்கல்வியாகவும் அமைந்தது. இது சமீபகாலத்திய பழைய முறையாகும். மேலும் ஏகாதசி, சிவராத்திரி, குரு, பரணி, அசுவனி ஆகியவற்றைப்பற்றிய அறிவும் கிடைக்கும். ஆனால் இந்த விசேஷ அறிவு அனைவருக்கும் தேவையில்லை. ஒரு சிலருக்கு கிடைத்தால் போதும். கணக்கும் கூட அனைவருக்கும் தேவையில்லை. ஒரு சிலருக்கு மட்டும் நல்ல கணிதப் பயிற்சி இருந்தால் போதும். அதிக கணக்குத் தெரிந்தவர்கள் கணக்கப் பிள்ளையாவார். இதற்கிடையில் ஆரம்பப் பாடசாலை. அதில் எழுதல், படித்தல், கணக்கு, சரித்திரம், பூகோளம் முதலியவை கற்பிக்கப் படுகின்றன, , ஆனால் தொழிற் பயிற்சி இல்லை. இதன் பலன் பாரதநாடு இரு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1., வேலை செய்வோர். 2. வித்வான்.

வித்வான்களின் கையில் கலை, தொழில், வேலை செய்யும் ஆசை இல்லை. ஆகவே இரு சாரார்க்கும் சண்டை ஏற்படுகிறது. சில ஜாதியினர் சீக்கிரமாகப் படித்து வருகின்றனர். வேறு சிலர் பின்னணியில் தங்கிவிடுகின்றனர். ஆகையால் ஜாதிபற்றிய விரோதமும் பொறாமையும் ஏற்படுகின்றது. இன்றைய நிலையில் ஒரு சிலருக்கு வாழ்க்கைக்குப் பயன்படாத கல்வியும் மற்றோருக்குக் கல்வியே இல்லாத நிலைமையும் ஏற்பட்டுவிடுகிறது. மற்றவர்கள் தொழில் செய்தும் அவர்களுக்கு உத்தியோக ஆசைவிடுவதில்லை. தமிழ்மொழியில் உத்தியோகம் என்ற சொல்லுக்கு ஏவல் வேலை செய்வது என்ற பொருள் இருக்கிறது. ஆனால் அதற்குள்ளே உண்மைப்பொருள் உயர்ந்த நிலை அடைதல் என்பதாகும். உத்தியோகம் செய்வோர் நிழலில் வாழ்க்கை நடத்துகின்றனர். மற்றவர்களோ வெய்யலில் உழைத்துப் பிழைக்கின்றனர். வெய்யலில் உழைப்போர் நிழலில் சுகிப்போரைப் பார்த்துப் பொறாமையும் பகையும் கொள்கின்றனர். இத்துடன் ஜாதி வேற்றுமையும் சேர்ந்து நிலைமையை பின்னும் மோசமாக்குகின்றது. இதற்கு ஒரே பரிகாரம். நாடு முழுவதும் இன்றுள்ள கல்வி முறையை மாற்றியமைத்து வாழ்க்கைக்கான கல்வி அனைவருக்கும் செய்வதே ஆகும்.



இறைவன் கொடுத்த கைகள் செயல்புரியவேயாகும். ஒவ்வொருவருக்குமுள்ள தலைகள் அவரவரும் தனித்தனியே சிந்திக்க வேண்டுமென்பதற்கே. வயறு பிறர் உழைப்பைத் தின்பதற்கல்ல. ஆகவே ஒவ்வொருவரும் இறைவன் கொடுத்த கைகளையும், மூளையையும் பயன்படுத்தி வாழ்வை நிறைவுடையதாக்க வேண்டும். ஒரு சிலரிடம் உடலுழைப்பு சக்தி அதிகமாகவும் வேறு சிலரிடம் மூளை உழைப்பு சக்தி அதிகமாகவும் இருப்பது சரியே. ஆனால் கொடுக்கப்படும் கல்விப் பயிற்சி அனைவரும் உடலைக் கொண்டு உழைக்கவும், மூளையைக் கொண்டு சிந்திக்கவும் பயிற்சிபெற வேண்டுமென்பதே நம் நோக்கம்.

“ அகர முதல எழுத்தெல்லாம்” முதலில் அகரத்தைக் கற்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. அடுத்து வரும் குறளில் “ கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின் ”, என்று கல்வியின் பயன் குறிப்பிடப்படுகிறது. ஆகவே இறைவனுக்குத் தலை வணங்குவதே கல்வியின் குறிக்கோளாக அமைகிறது. ஆகவே கல்வியின் இறுதிப்பயன் பணிவே. “ வித்யா விநய சம்பத் ” என்பதில் பணிவுடன்கூடிய கல்வியே குறிப்பிடப்படுகிறது.

குறளின் 2-வது அதிகாரத்தில் மழையைப்பற்றி கூறப்படுகிறது. கல்வியின் முதல் நோக்கம் கடவுளையறிதலும் இரண்டாவது நோக்கம் மழை, வெய்யிலில் வயலில் இறங்கி செயலாற்றுவதுமேயாகும். உடலுணர்வைத் துறந்து மழையையும், வெய்யிலையும் பாராமல் சமூக நன்மைக்காக வயலில் இறங்கி உழைப்பதே தவம் ஆகும். இத்தகைய தவத்தின்மூலமே வேளாண்மை அதிகரித்து தானம் ஏற்பட முடியும்.

“ தானம் தவமிரண்டும் தங்கா
வியனுலகம்
வானம் வழங்காதெனின் ”

வயலில் போய் உழைக்காமல் மழை பெய்தால்கூட ஒன்றும் விளையாது. ஆகவே திருக்குறளின் 2-வது அதிகாரத்திலேயே ஆதாரக் கல்வி காணப்படுகிறது. முதல் அதிகாரத்தில் வித்தை விநயத்தையும், 2-வது அதிகாரத்தில் மழையைப் பயன்படுத்தி உழைத்து அதன் பயனை தானம் செய்ய வேண்டுமென்று கூறுவதின்மூலம் ஆதாரக் கல்வியை முதலிரண்டு அதிகாரங்களில் திருவள்ளுவர் அடக்கிவிட்டார்.

ஆதாரக்கல்வி வாழ்க்கைக்கு ஆதாரமாகும். ஆனால் கிராம தானமோ ஆதாரக்கல்விக்கே ஆதாரமாகும். கிராமதானம் ஏற்பட்டால் கிராமத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்க்கை வசதி ஏற்படும். அதன்பின்னரே அவர்களுக்குக் கல்வி போதிக்க முடியும். இன்றுள்ள நிலையில் கட்டாயக் கல்வி

யினால் பயனேதும் ஏற்பட முடியாது. ஒரு ஏழைக் குடும்பம். தகப்பன் கூலி வேலை செய்கிறான். தாய் கூலி வேலைக்காக வெளியில் செல்கிறாள் அல்லது வீட்டு வேலைகளைக் கவனிக்கிறாள். அவர்களுடைய 6-வது பையனோ எருமை மேய்க்கச் செல்கிறான். இந்நிலையில் அரசாங்கத்தின் கட்டாயக் கல்வியால் என்ன நடக்கும்? பையன் எருமை மேய்ப்பதிலிருந்து தடுக்கப்படுவான். இதுவரை எருமையின்மூலம் அவனுடைய குடும்பத்துக்குக் கிடைத்துவந்த பால், மோர், வெண்ணெய் முதலியன இனி கிடைக்காது. கட்டாயக்கல்வி என்றால் ஏழைகளிடமிருந்து கட்டாயமாக அவர்களது பால், மோர், வெண்ணெயைப் பிடுங்கிக்கொள்வது என்றாகிறது. ஆகையால் கிராமத்தின் அத்தனை ஏழைப் பிள்ளைகளுக்கும் அவர்களுடைய வாழ்வைக் கெடுக்காத கல்வித் திட்டம் தேவை. ஆகையால்தான் கிராமதானத்தின் மூலம் ஆதாரக்கல்வி வந்திருக்கிறது என்றேன்.

இன்றுள்ள நிலைமையில் கிராமத்தில் கல்வி பெற்ற பையன்கள் தங்குவதில்லை. அவர்கள் வெளியே ஓடிவிடுகிறார்கள். இதனால் கிராமம் பையன்களை இழக்கிறது. இந்த உதவாக்கரை கல்வி தன் பையனுக்குக் கிடைத்து அவன் கிராமத்திலிருந்து வெளியேறுவதையே விவசாயியும் விரும்புகிறான். இது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலைமையே.

குறளில் விவசாயத்துக்குக் கொடுக்கப்படும் மதிப்பு வாழ்க்கையில் நடைமுறையில் இல்லை. ஒரு தமிழ் அன்பர் "தமிழில் விவசாயத் தொழிலுக்குக் கொடுக்கப்படும் பெருமை வேறு மொழியில் இல்லை" என்று பெருமையுடன் கூறிக்கொண்டார். ஆனால் அவர் நிலைமை என்ன? அவர் ஒரு ஆலை முதலாளி. விவசாயத்தின் பெருமையைப்பற்றி புத்தகங்களில் படித்திருக்கிறார். ஆனால் அவருக்கு ஏர் பிடிக்கத் தெரியாது. வயலின் சேற்றில் இறங்கி அறியார். உழைப்பவர்களுக்கு உழைக்காதவர்கள் மதிப்பு கொடுப்பதில்லை. உழைப்பவர்களும்கூடத் தங்கள் உழைப்புக்குத் தாங்களே மதிப்பு தருவதில்லை. சமூக மதிப்பு மட்டுமல்ல, பண மதிப்பும்கூட இல்லை! ஆத்மீக மதிப்பும் கிடையாது. ஆத்மீகத் துறையில் ஈடுபட்டோர் கையால் வேலையைத் தொடுவதில்லை. அத்தகையோர் உயர்ந்தவர்களாய் அடிகளாய்விடுவர். இப்படி இருக்கும் வரை நாடு கீழ்நோக்கிப்போகுமே தவிர முன்னேறாது.

### கிராமப் பஞ்சாயத்தினரும், கிராமதானமும்

இக்கூட்டத்தில் ஆசிரியர்களைத் தவிர கிராமப் பஞ்சாயத்தார்களும் வந்திருப்பதாகக் கூறினார்கள். ஆதாரக்கல்வி வாழ்க்கைக்கும், கிராமதானம் ஆதாரக்கல்விக்கும் ஆதாரமாகும்.

மதுரையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. அங்கு கிராமப் பஞ்சாயத்தினர், ஆதாரக்கல்வி



ஆசிரியர்கள், அரசியல் ஸ்தாபன ஊழியர்கள் அனைவரும் ஒரே குரலில் கிராமதானம் ஏற்படவேண்டுமென்றார்கள். மக்கள் சிந்தித்துக் கொடுத்தார்கள். வெறும் பிரசங்கத்தால் இது நடைபெறவில்லை. கிராம முக்கியஸ்தர்கள் இது நல்லது என்று நினைத்தார்கள். ஆகவே கொடுத்தார்கள். கிராமப் பஞ்சாயத்தினர் தங்களுடையதைக் கொடுத்து மற்றவர்களிடமும் வாங்கிக் கொடுப்பார்கள். கிராமத்தில் 5 வித மக்களின் பிரதிநிதிகள் சேர்ந்து செய்யும் தீர்மானமே பஞ்சாயத்தினரின் தீர்ப்பு ஆகும். கிராமத்தில் ஒவ்வொருவருக்கும் படிப்பும் ஒவ்வொருவருக்கும் உழைப்பும், ஒவ்வொருவருக்கும் உணவும் கிடைக்க வழி செய்ய வேண்டும். இது கிராமதானத்தின் மூலமே சாத்தியமாகும். இதற்கான உங்கள் பங்கைக் கொடுத்து இச்செய்தியை கிராமம் கிராமமாகப் பரப்புவீர்களாக".

(23—1—'57 தஞ்சையில் ஆசிரியர்கள், பஞ்சாயத்துபோர்டு தலைவர்கள் கூட்டத்தில் பேசியது.)

## வினோபாஜியின் மதுரை ஜில்லா யாத்திரை

மதுரை ஜில்லாவில் யாத்திரை சென்ற ஜனவரி௴ 10௳ முடிவடைந்தது. சென்ற இதழில் 1-1-57௳ முதல் 9-9-57௳ வரை யாத்திரை விபரம் வழக்கம்போல கொடுக்க விட்டுப்போயிற்று. அதை இங்கு காணலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1௳ | குமாரம் | ஜனவரி | 6௳ | மேலூர் |
| ,, | 2௳ | வாவிடமருதூர் | ,, | 7௳ | வஞ்சிநகரம் |
| ,, | 3௳ | கள்ளந்திரி | ,, | 8௳ | கொட்டாய்பட்டி |
| ,, | 4௳ | சிட்டாம்பட்டி | | | |
| ,, | 5௳ | திருவாதவூர் | ,, | 9௳ | புழுதிப்பட்டி |

★

# கிராமதானத்தில் திருமணமும் மருமகனும்

ஆச்சார்ய விநோபா

தமிழ்நாட்டின் ஆன்மா விழித்துக்கொண்டிருக்கிறது. நேற்று தஞ்சையில் ஒரு அற்புதமான கூட்டத்தைக் கண்டேன். அதில் ஆண்களைவிட பெண்கள் குறைவாக இல்லை. சில பெண்கள் குழந்தைகளை சுமந்தும் வந்திருந்தனர். சிலருக்கு உட்கார இடமின்றி நின்றுகொண்டிருந்தனர். ஆயினும் கூட்டம் கலவரமின்றி முற்றிலும் அமைதியாக நடந்தது. கூட்டம் முடிந்தபின்னரும் கீதையில் கையெழுத்து பெறுவதற்காக மக்கள் சுமார் $1\frac{1}{4}$ மணிநேரம் நின்றனர்.

## நான் ராமபக்தன்

தஞ்சை சூழ்நிலை முழுவதும் கிராமதான காற்று நிறைந்திருந்தது. நேற்று 3 கிராமதானங்கள் கோவையிலிருந்து தந்தி மூலம் கிடைத்தன. அவைகளில் ஒன்று 1000 ஏக்கர் உடையது. அங்குள்ள மக்கள் நிலத்தின்மீது தங்களுக்குள்ள தனியுடைமையை அழித்துவிட்டனர். அங்குள்ள நிலம் முழுவதும் கிராமத்திற்குப் பொதுவாகிவிட்டது. இன்றும் கூட மதுரையிலிருந்து 4 கிராமதானங்கள் கிடைத்திருப்பதாக தந்தி வந்திருக்கிறது. தஞ்சை ஓர் பெரிய ஊர். ஆகவே நேற்று அங்கு கிராமதானம் கிடைப்பதைப்பற்றி எதிர்பார்த்தேன். ஆனால் இன்றோ அவ்வாறு எதிர்பார்க்கவில்லை. ஆயினும் கிடைத்திருக்கிறது. காற்று மாறிக்கொண்டிருக்கிறது. கிராமதானச் செய்தி அங்கும் பரவுகிறது. இதை நான் பரப்புவதில்லை. ஆண்டவன் நிமித்தமாக யாரோ ஒருவர் இதைச் செய்கிறார். இதற்காகவே சுமார் 6 ஆண்டுகளாக நான் சுற்றிவருகிறேன். இன்னும் கூட சுற்றவேண்டி நேரிடலாம். நான் ராமபக்தன். ராமர் 14 வருடங்கள் காட்டில் அலைந்தார். ஆகவே பக்தன் 6 ஆண்டுகள் சுற்றுவது பெரிய காரியம் அல்ல. அவரைப்போலவே நானும் 14 ஆண்டுகளோ இன்னும் அதிகமாகவோ சுற்றவேண்டி நேரிடலாம்.

நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் யார்? என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளார். இதுவே என் நிலைமையும் ஆகும். இன்று நாம் மாணிக்கவாசகரைப்பற்றி நினைக்கிறோம், அன்று அவர் பாண்டிய மன்னனின் முக்கிய மந்திரியாக இருந்தார். அவருக்கு ஒரு முக்கியமான இடமிருந்தது. ஆனால் அதிலிருந்து மக்களுக்குத் தொண்டு செய்ய முடியாது எனக் கண்டார். தனது பதவியின் மூலம் மக்களிடம் மனமாறுதலை ஏற்படுத்த முடியாதென்று அறிந்தார். ஆகவே அவர் அந்த இடத்தை



விட்டு வெளியேறி மக்களுக்குத் தொண்டுசெய்யத் தொடங்கினார். பதவியை வீசி எறிந்து கிராமம் கிராமமாகச் சுற்றி அலைந்து ஆண்டவனைப்பற்றிய அழகானப் பாடல்களைப் பாடியிருக்கிறார். இன்றைய மக்கள்கூட விரும்பக்கூடிய அழகானப் பாடல்கள். ஆகவே அவருக்கு அன்றும் பெருமை, இன்றும் பெருமை. அப்படியிருந்தும் அவர் நான் யார் என்று பணிவுடன் தன்னைக் கேட்டுக்கொள்கிறார்.

## கிராமதானத்தின் மருமகன்

இவ்வளவு நடப்பதும் என் பொறுப்பில் அல்ல. இவை ஆண்டவனின் சங்கல்பமே. "ஆண்டவனே உன் பல உறுதிகள் ஏற்பட்டிருக்கலாம், ஆயினும் உன் முதல் உறுதி நான் சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறேன்". என்று வேதமந்திரம் கூறுகிறது. இந்த முதல் சங்கல்பம் எது? அனைவருக்கும் கருணை என்பது இந்த முதல் சங்கல்பமாகும். பல சங்கற்பங்களுக்கும் முதல் சங்கற்பத்தை ஏற்று நடத்துகிறேன் என்கிறார் ரிஷி. அந்த முதல் சங்கற்பத்திலிருந்தே கிராமதானம் தோன்றியது. கிராமத்துக்கு 50 ஏக்கர் கொடுத்து அதில் 5, 6 ஏக்கர் எடுத்துக்கொள்வோம். மற்றவர்களில் நாமும் ஒருவர் ஆவோம். இத்தகைய அன்பும் அறிவுமே நிலம் படைத்தவருக்குத் தேவை. இன்றைய நிலைமை என்ன? நிலம் வைத்திருப்போரின் மேற்பார்வை குறைந்தால் ஆட்கள் சரியாக வேலை செய்வது இல்லை. சண்டை சச்சரவு ஏற்படுகிறது. நிலம் அதிகமாக வைத்திருப்பவர்களின் கடன் ஓட்டை வெளியில் தெரிவதில்லை. அதை மறைப்பதற்காக அவர்கள் பலவகையிலும் வேஷம்போட வேண்டியிருக்கிறது. அது அவசியமும் ஆகிவிட்டது. ஆனால் கிராமதானமானபிறகு அவருடைய நிலை என்ன? இதுவரையில்—போல் கல்யாணத்துக்காக அவர் ஆயிரக்கணக்கில் பணம் செலவழிக்க தேவையிராது. அவருடைய வீட்டின் கல்யாணம் கிராமக் கல்யாணமாகி கிராமத்தின் பொதுச்செலவில் நடைபெறும். கல்யாணத்தில் வேஷம் போட்டுக் காட்டவேண்டிய அவசியமில்லை. ஆகவே கல்யாணத்துக்காக கடன் வாங்கவேண்டிய நிலைமையும் இல்லை. இன்றைய நிலையில் அவருடைய மருமகப்பிள்ளை அவருக்கு மட்டுமே மருமகனாக இருப்பார். அவருடைய வீட்டில் மட்டுமே அவருக்கு விருந்து கிடைக்கும். ஆனால் அவரோ எந்தவிதத்திலும் மாமனாருக்கு உழைக்கமாட்டார். இதற்கு மாறாக 5 கிராமதானம் ஆனபிறகு அவருடைய மருமகன் ஊர் முழுவதற்கும் மருமகனாக இருப்பார். அவருக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலும் விருந்து கிடைக்கும். அவர் தன் மாமனாருக்காக வயலில் உதவி செய்வார். ஊரில் மற்றவர்களுக்காகவும் உழைப்பார். இனி கிராமத்தில் இரவில் காவல் தேவையில்லை. ஒருவருடைய மாடு இன்னொருவருடைய விளைச்சலில் மேயுமென்ற பயம் இல்லை. ஒவ்வொருவரும் ஊரின் சொத்தை அக்கறையுடன் பாதுகாப்பார்கள்.

ஆகவே நிலச் சொந்தக்காரரும், பிறரும் கவலையின்றி நன்றாக உறங்கலாம்.

## நான் செய்வது அபாய எச்சரிக்கையே

ஒரு நல்ல பஞ்சு மெத்தை விரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் அதில் படுக்க வருகிறார். அதில் பாம்பு இருப்பதால் உறங்குவதற்கு சுகமாயிருப்பினும் நான் அவரை தடுக்கிறேன். கீழே விரித்துள்ள கம்பளியைக் காட்டுகிறேன். அவரும் விஷயத்தைப் புரிந்து கொள்கிறார். பாம்பு வாசம் செய்யும் மிருதுவான இனிய பஞ்சு மெத்தையைவிட சிறிது கரடுமுரடான கம்பளிப் படுக்கையே மேல் என்பதை அவர் அறிந்து கொள்ளுகிறார். தனியுடைமையாகிய கிராமதான கம்பளிப் படுக்கையே சிறந்தது என நான் கூறுகிறேன். கிராமதானம் ஏற்பட்ட பின்னர் அரசாங்கத்தில் உரிமையுடன் கடன் வாங்கலாம். எல்லாக் கிராமங்களுமே கிராமதானம் ஆனால் அரசாங்கம் தான் எதற்கு? மதுரை ஜில்லாவில் 125 கிராமங்கள் கிராமதானமான பிறகு அரசாங்கத்தார் அவைகளுக்குத் தனி அதிகாரிகளை நியமித்து அவைகளுக்கு உதவ முன் வந்துள்ளனர். ஆனால் நாமோ இந்த உதவியை எதிர் பார்த்து காரியம் செய்யவில்லை. கிராமதானத்தால் கிராமத்தின் கட்டுக்கோப்பே மாறுகிறது. ஆகவே நிலம் படைத்தோரும் அரசாங்கத்தினரும் விழித்துக் கொள்ளுகின்றனர். கிராமதான கிராமத்தில் சண்டை சச்சரவு இராது. இருந்தாலும் உள்ளூரிலேயே வழக்குகள் தீர்க்கப்பட்டு விடும். ஆகவே போலீஸ் பாதுகாப்பு, நீதி நிர்வாகம் ஆகியவற்றிற்கு அவசியம் இராது. ஆகவே அவைகளுக்காக செலவாகும் தொகை அரசாங்கத்துக்கு மீதமாகும். மீதமான பணத்தை பாபா கேட்பார். அதைக்கொண்டு கிராமத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்யலாம். இதுவரையில் நிலம் படைத்தவர் தங்கள் சொத்துடைமையை விட்டுவிட விரும்பாததால் அவர்கள் பூதானச் செய்தியை மக்களிடம் எடுத்துச் சொல்ல முடியவில்லை. ஆனால் இன்றோ நிலமுடையவர்கள் உடைமையை உதறித்தள்ள முன்வருகிறார்கள். ஆகவே அவர்கள் தைரியத்துடன் மக்களிடம் சென்று இதைப்பற்றி கூற முடியும். மக்களோ இதுவரையில் நீங்கள் ஏன் இந்த விஷயத்தைச் சொல்ல எங்கள் முன் வரவில்லை என்பார்கள். இப்போது எப்படி நீங்கள் வந்தீர்கள் என்று கேட்டால் பாபாவின் புதிய மந்திரம் எங்களை வரச்செய்தது என்பார்கள். சுயராஜ்யம் கிடைத்ததின் பலனாக லண்டன் அரசாங்கம் போய் டில்லி, சென்னை அரசாங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் பலன் என்ன? முன்னர் ஆடு வெட்ட ஷெபீல்ட் கத்தியை உபயோகித்தோம். ஷெபீல்ட் கத்திக்குப் பதிலாக அலிகார் கத்தியினால் உன்னை வெட்டுகிறோம் என்று ஆட்டினிடம் கூறுகிறோம். சுதேசி கத்தியினால் தான் வெட்டப்படுவதைக் குறித்து ஆட்டிற்கு மகிழ்ச்சி ஏற்பட முடியுமா?



அதற்கு எல்லாக் கத்தியும் ஒன்றே. எந்தக் கத்தியாக இருந்தாலும் அதன் உயிரைப் போக்குவது என்ற ஒரே காரியம்தான் நடைபெறும். ஆகவே ஆட்டைப் பொறுத்தவரையில் அதற்கு சுதேசிக் கத்திக்கும், விதேசிக் கத்திக்கும் எந்தவித வேற்றுமையும் இருப்பதற்கில்லை. நமது கிராமங்களின் நிலைமையும் இத்தகையதே.

## கிராம ராஜ்யமே உண்மை ஸ்வராஜ்யம்

கிராமராஜ்யம் ஏற்படாத வரையில் சுயராஜ்யத்தினால் அவைகளுக்கு நன்மை எதுவுமில்லை. சுயராஜ்யம் வந்ததால் வெளிநாட்டு சுமை இறங்கியது. ஊழியர்கள் மக்களை அணுகி அவர்களுக்கு உண்மையை எடுத்துக்கூற முடியும். முன்போ பேச்சு சுதந்திரமில்லை, இன்றோ அரசாங்கம் விரும்பாத கருத்தைக்கூட மக்களிடம் சொல்ல உரிமையுண்டு. இதுவே சுயராஜ்யத்தின் மூலம் ஏற்பட்ட பெரிய பலன். முன்பு கிராமதான பேச்சுக்கே இடமில்லை. டெல்லி, சென்னை ஆட்சியில் மக்களுக்குக் கிராம ராஜ்ய அமைப்பு கிடைத்துள்ளது. மக்கள் நம்மை வரவேற்று நாம் வந்த காரியத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். நீங்கள் கிராமத்திற்குப் போய் வெல்லம் சாப்பிடச் சொன்னால் மக்கள் சாப்பிட மாட்டார்களா? நன்றாய்ச் சாப்பிடுவார்கள். ஆனால் நீங்கள் பீடி, சிகரெட்டை விட்டுவிடுங்கள். நாங்களும் ஆலை சர்க்கரையை விட்டுவிடுகிறோம் என்பார்கள். ஊழியர்களோ "நாங்கள் பீடி, சிகரெட்டை மட்டுமல்ல ஆலை சர்க்கரையையும் கூட விட்டுவிட்டோம்" என்பார்கள். "எவ்வளவு அழகான இனிப்பு வெல்லத்தை— அன்பு வெல்லத்தைச் சாப்பிட்டேன்" என்று கபீர்தாசர் பாடுகிறார். இது என்னுடையதல்ல. நம்முடையது என்ற பாவனையில் இனிப்பு இருக்கிறது. குரு நமக்கு இந்த இனிப்பு வெல்லத்தைக் கொடுத்திருக்கிறார். ஸ்ரீரங்கம் கோவிலில், சிதம்பரம் அம்பலத்தில் காசு கொடுத்து கடவுளைப் பார்த்தோம். கிராமத்தில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆண்டவன் இருப்பதை அறிவோம். இறைவன் "வானாகி மண்ணாகி" எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். கிராமதானத்தின் இன்பத்தை நுகர்வோம். பாரத நாட்டில் மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுவோம். நீங்களும் கிராமதானம் செய்து அடுத்த கிராமத்தையும் செய்விப்பீர்களாக".

(பூண்டி 24—1—'57)


பூதான வாரச்செய்திக்கு

★ கிராமோதயம் ★

வாரப்பத்திரிக்கை

வருஷ சந்தா ரூ. 3

தனிப்பிரதி அணா 1

★

சர்வ சேவா சங்கம்,

காந்திநகர், திருப்பூர்

# எந்த எதிர்ப்பும் இல்லாத இயக்கம்

ஆச்சார்ய விநோபா

## இங்கு ஒருவேலையும் நடக்கவில்லையே

இந்தக் கிராமத்திற்கு ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் 3 வருடங்களுக்கு முன் வந்திருக்கிறார்கள். அவரிடம் சிறிது நிலம் கொடுக்கப்பட்டு அது விநியோகமும் ஆகியிருக்கிறது. அதற்குப்பின் இதுவரை இங்கு தொடர்ந்து வேறு வேலை எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இப்போது நான் ஐந்தேமுக்கால் வருடங்களாக யாத்திரை செய்து இங்கு வந்திருக்கிறேன். இங்கிருந்து வேறு மாகாணத்திற்குப் போனால் மீண்டும் இங்கு எப்போது வருவேனென்று சொல்ல முடியாது. சங்கர்ராவ் தேவ் இங்கு வந்து போய் 3 வருடங்களுக்குப் பிறகு வேறு வேலை ஏதும் நடக்கவில்லை. நான் வந்து போனபிறகும் அதே நிலைமைதான் ஏற்படுமென்றால் இங்கு எனது வருகையால் என்ன பயன்? ஒரு சின்ன செடி நட்டால் அதற்கும் சேவை தேவைப்படுகிறது. அதை நீர் ஊற்றி பாதுகாத்து வளர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே பூமிதானத்தைப்போன்ற பெரிய காரியத்திற்கு சேவை பதின்மடங்கு அதிகமாகத் தேவையாம். பூமிதானம் நிலமில்லாதவர்களுக்கு சிறிது நிலம் கொடுத்து புண்ணியம் பெறும் இயக்கமல்ல. இது கருணையின் காரியம். கருணை நிறைந்தவர்கள் இக்காரியம் செய்யாது சும்மா இருக்கமுடியாது. கருணை யாருடைய உள்ளத்தை வீடாக ஆக்கிக்கொண்டிருக்கிறதோ அது அவர்களைச் சும்மா இருக்கவிடாது. சான்றோர்கள் முற்காலத்தில் தங்கள் வீடுவாசல்களை விட்டு நாடெங்கும் சுற்றி தர்மப் பிரசாரம் செய்திருக்கின்றனர். இதை அவர்கள் எப்படிச் செய்ய முடிந்தது? அவர்கள் இதயத்தெழுந்த கருணையின் தூண்டுதலே இதற்குக் காரணம். அவர்களோ மிகவும் பெரியவர்கள். ஆகவே அவர்கள் தங்கள் வீடு வாசல்களைத் துறந்து தர்ம காரியம் செய்வது சாத்தியம். ஆனால் நாமோ சிறியவர்களாகையால் அவ்வாறு செய்ய முடியாது என்று கூறப்படுகிறது. நான் யாரையும் வீட்டைத் துறக்கச் சொல்லவில்லை. அதற்கு மாறாக உங்கள் வீட்டுப் பொறுப்புகளுடன் கிராமப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் கூறுகிறேன். இவ்வாறு கிராமம் வளர்ந்து கிராம காரியம் நாட்டின் காரியமாக உருவாகி நாடு முன்னேறும். தர்மம் வளரும். ஆகவே கிராமதானத்தில் இத்தனை காரியங்களும் இணைந்திருக்கின்றன.

## கடவுளின் கருணையே என்னை இப்பணியில் தூண்டுகிறது

தனிப்பட்ட சொத்துடைமை அழியாதவரையில் அனைவருக்கும் நிலம் கிடைக்காதவரையில் இக்



காரியத்தை தொடர்ந்து நடத்தியே ஆகவேண்டும். மதுரையில் இதுவரை 130 கிராமங்கள் கிராமதானமாகக் கிடைத்திருக்கின்றன. இன்று கல்லுப்பட்டியில் 250 கிராமத்தின் பிரதிநிதிகள் கூடிப் பேசுகிறார்கள். என் பிரதிநிதிகளும் சிலர் சென்றிருக்கிறார்கள். தாலூகா தானத்தைப்பற்றிய தீர்மானம் அங்கு உருவாகப் போகிறது. ஊழியர்கள் அங்கு உற்சாகமாக வேலை செய்கின்றனர். ஆனால் தொடக்கத்திலோ ஊழியர்களுக்கு அங்கு தாலூகா தானத்தைப்பற்றி சந்தேகமாகவே இருந்தது. ஆனால் மக்களிடையே சென்று வேலை செய்தபோது இக்கருத்துக்கு மக்களிடம் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை அவர்கள் கண்டார்கள். அதன்பின்னர் அவர்களுக்கு இதில் பூரணமான நம்பிக்கை ஏற்பட்டு மும்முரமாக வேலை செய்கிறார்கள். இதில் ஆண்டவன் கை வேலை செய்வதாகக் கூறப்படுகிறது. இறைவனின் கை உதவவில்லையென்றால் பாபாவுக்கு இவ்வளவு சக்தி எங்கிருக்கும்? பாபா எப்பொழுதோ வீழ்ந்திருப்பார். ஆகவே கடவுளின் கருணையே என்னை இக்காரியத்தில் தூண்டுகிறது. ஆகவே யாத்திரையில் பூமிதானம் கிராமதானத்தைப்பற்றிக்கூட எனக்கு அவ்வளவு அக்கறையிருப்பதில்லை. ஊழியர்களை பெறுவதில்தான் எனக்கு மிகுந்த அக்கறை. ஆயிரக் கணக்கான ஊழியர்கள் முனைந்து வேலை செய்தால் இது ஒரு நொடியில் தீர்ந்துவிடும். ஆகவே முக்கியமானப் பிரச்சனை ஊழியர்களேயாவர். ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஊழியர்கள் கிளம்பினால் பாரத நாடு முழுதும் 2,000 முதல் 4,000 வரை ஊழியர்கள் கிடைப்பார்கள். நடுத்தர வகுப்பிலிருந்தே பெரும்பாலும் ஊழியர்கள் கிடைக்கக்கூடும். அவர்களுக்குந்தான் இதற்கான ஓய்வும், வாய்ப்பும் கிடைக்கக்கூடும். மற்ற வகுப்பினரிலும் நூற்றுக் கணக்கானவர்கள் கிடைப்பார்கள். ஏனெனில் இக்காரியத்திட்டம் மேல், மத்திய வகுப்பினரின் அளவுக்குகீழ் மக்களும் உயர வேண்டுமென்பதே. ஒவ்வொருவரிடமும் இதனால் இயக்கத்தைப்பற்றிய தொடர்பு ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் தானம் கொடுத்து மற்றவர்களுக்கும் கொடுக்கும்படி சொல்லி அவர்களிடமிருந்து தானம் வாங்கக்கூடும். கீழ்வகுப்பினரோ கிடைத்த தானத்தைக் கொண்டு தங்கள் உழைப்பைக்கொண்டே சர்வோதய சமுதாயம் உருவாவதற்கு துணை செய்யலாம். நில விநியோகம் அரசியல் சம்பந்தமானது. ஆகவே அரசியல் கட்சிகளின் சம்பந்தமும் இதற்குக் கிடைக்கும். ஜாதி வித்தியாசம் நீக்கப்படுவதால் இதற்கு தார்மீக சம்பந்தமும் கிட்டுகிறது. மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதால் இது சமூக சீர்திருத்தத்திற்கும் ஒத்ததாக இருக்கிறது. ஆகவே இதில் ஒவ்வொரு நிலையினரும் கிளையினரும் தொடர்பு கொள்ளலாம்.

தஞ்சையில் ஆயிரக் கணக்கானவர்கள் என் கூட்டத்திற்கு வந்திருந்

தனர். இதில் ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் பெண்களின் அதிக வருகையே. உட்கார இடமில்லாத நிலையிலும் குழந்தைகளை இடுப்பில் சுமந்த வண்ணம் நின்றிருந்தனர். அந்தக் கூட்டத்தை நேரில் பார்த்தவர்கள் மக்களுக்கு இந்த இயக்கத்திலுள்ள அக்கறையை உணர்வார்கள். சுயராஜ்யம் கிடைத்த பிறகு இந்த விஷயத்தில் ஏற்பட்டிருப்பது போல வேறு எதிலும் மக்களுக்கு ஆர்வம் ஏற்பட்டதில்லை. உலகத்திலுள்ள இதர நாட்டினருக்கும் அன்பும் கருணையும் தேவையாயிருக்கின்றன. ஆகவே அவர்களும் இங்கு வந்து இதைக் கவனிக்கின்றனர்.

## சட்டத்தால் பகைமையே வளருகிறது

உலகில் இதுவரை நிலப்புரட்சியின் பெயரால் ரத்தப் புரட்சியே ஏற்பட்டிருக்கிறது. சட்டமும் இதற்குத் துணை செய்கிறது. இங்கேகூட இப்போது 60க்கு 40 என்ற சட்டம் இருக்கிறது. இருந்தும் பலன் என்ன? சமூகத்தில் பகைமையே அதிகரித்திருக்கிறது. பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தச் சட்டத்தை எப்படி புறக்கணிப்பது என்ற யோசனையிலேயே ஆழ்ந்திருக்கின்றனர். ஆகவே இந்தச் சட்டம் சமூகத்திற்கு உபயோகமானதாகாது. ஆகவே கொலை, சட்டம் என்ற பேச்சுக்களின் பலனாக பகைமையே அதிகரிக்கிறது. சமூகத்தில் சக்தி வளர வேண்டுமானால் சமூகத்தை இணைப்பதற்கான யுக்தி தேவை. இன்று நம்மிடையே ஏற்றத் தாழ்வுகளுக்குக் குறைவே இல்லை. ஜாதி, சமய, மொழி, கட்சி வேற்றுமைகள் எண்ணிடலங்காதவை. தொழிலாளி–முதலாளி, விவசாயி–ஜமீன்தார் மாணவர்கள்–ஆசிரியர்கள் ஆகியோரின் தனித்தனிச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சங்கங்களின் முக்கியமான காரியம் சமூகத்தைத் துண்டாடுவது. ஒரு சிலர் சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வெளியில் உள்ள மற்றவர்களே அவர்களுக்கு வேறுபட்டவர்களாக தனித்து நிற்கின்றனர். இந்த வேற்றுமை அனைத்தையும் ஒழித்து வெற்றி கண்டால்தான் நாடும், உலகமும் தப்ப இயலும்.

## யாரும் ஆட்சேபிக்காத இயக்கம்

இந்த 5, 6 வருட அனுபவத்தில் நான் கண்டது என்னவென்றால் இந்த இயக்கத்தில் யாருக்கும் எதிர்ப்பு இல்லையென்பதே. சாதாரணமாக எந்தக் காரியத்திற்கும் எதிர்ப்பு இருப்பது இயற்கை. அதிலும் நிலப்பிரச்சனை போன்ற அபிப்பிராய பேதத்திற்கு இடமான விஷயத்தில் எதிர்ப்பு நிச்சயமாக இருக்கவேண்டும். விவசாய சாஸ்திரிகள் இதில் அபிப்பிராய பேதம் கொள்வது சரியே. சிலருக்கு இதனால் ஏற்படக்கூடிய பலனிலேயே அபிப்பிராயபேதம் காணப்படுகிறது. சிலருக்கு இதற்கான காரணத்திலேயே சந்தேகம் தோன்றுகிறது. எனது தெலுங்கானா யாத்திரையில் சிலர் என்னை பணக்காரர்களின் ஏஜெண்ட் என்று சொன்னார்கள். என்னிடம் எச்சரிக்கையாயிருக்குமாறு மக்களிடம் பிரச்சாரம் செய்தார்கள்.



நான் ஆபத்தான மனிதனென்றும் கூறப்பட்டது. அது சரியே. அது இயக்கத்தின் தொடக்கம். ஆனால் 5 வருடங்களுக்கும் பின்னரோ வெற்றி பெறுமா, பெறாதா என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. டில்லி செல்வதற்காக ரஸ்தா போடப்பட்டுள்ளது. அங்கே எப்படிப் போய்ச் சேருவது? எப்போது போய்ச் சேருவது என்று கேட்கப்படுகிறது. ரஸ்தா இருந்தாலும் அதன் வழியே நடந்தால்தான் டெல்லி போய்ச்சேரமுடியும். அவ்வாறின்றி உட்கார்ந்த இடத்திலிருந்தே ரஸ்தாவின் பயனாக டில்லி போய்ச்சேர நினைப்பது தவறாகும். இத்தகையோரைப் பற்றி என்ன சொல்வது? ரஸ்தா நமது கையைப் பிடித்து டில்லிக்கு இழுத்துச் செல்லாது. இறைவன் கொடுத்த கால்களைக்கொண்டு நடக்க வேண்டியவர்கள் நாமே தான். அவ்வாறு நடக்க முடியாவிட்டால் வீட்டிலேயே இருக்க வேண்டியதுதான். ரஸ்தாவைப் பற்றி குறைகூற நமக்கு உரிமையில்லை. ரஸ்தா டில்லி செல்கிறதா, இலங்கைக்குச் செல்கிறதா என்று தெளிவடைய வேண்டியது சரியே. ஆனால் டெல்லிக்குச் செல்கிறதென்று தெரிந்த பின்னர் டெல்லிக்குச் செல்லும் தேவை ஏற்பட்ட பிறகும் வீட்டிலேயே உட்கார்ந்திருப்பது நமது குறையேயன்றி ரஸ்தாவின் குறையன்று. அது நமது சோம்பேறித்தனமே. எந்த சிறந்த காரியத்திற்கும் கடின உழைப்புத் தேவை. பூதானத்தைப்போன்ற ஒரு மாபெரும் இயக்கம் அதற்கான உழைப்பின்றி நிறைவேற முடியாது. ஆகவே அனைவரும் இதில் முழு மூச்சுடன் முனைந்து நின்று பாடுபட்ட பிறகு இதன் குறையைப்பற்றி பேசுவதே பொருத்தமாயிருக்கும்.

## மதுரையில் தாலுகா தான முயற்சி

இதைப்பற்றி மதுரைக்காரர்கள் அனுபவப் பூர்வமாக அறிந்திருக்கிறார்கள். நாம் முதலில் பரிசோதனை செய்கிறோம். அதன் பலனாக அனுபவம் ஏற்படுகிறது. இப்படித்தான் கிராமதான விஷயத்திலும் மதுரைக்காரர்கள் பரிசோதித்து அனுபவம் அடைந்தார்கள். அது பெருத்த அளவில் வெற்றி பெற்றால் நாடு முழுதும் அனுஷ்டிக்க இயலும். பெரிய அளவில் காரியம் செய்வதற்காக சிறிய அளவில் நாம் இப்போது சோதனையைத் தொடங்கியிருக்கிறோம். கம்யூனிஸ்ட் போன்ற இதர கட்சிகளையும் நாம் இதே சோதனையில் ஈடுபடச் சொல்கிறோம். ஆனால் மற்றவர்களோ எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது என்று கூறுகிறார்கள். ஊரில் நெருப்புப் பற்றினால் வேலையில்லாத சோம்பேரிகள் மட்டுமா அதை அணைக்கப் போவார்கள்? வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை அணைக்கமாட்டார்களா? பார்க்குமிடத்து வேலையில் ஈடுபட்டிருப்பவர்தான் எவ்வளவு முக்கியமான காரியம் இருந்தாலும் அதை ஒதுக்கி வைத்துவிட்டு ஊரின் நெருப்பை அணைக்க விரைந்தோடுவார்கள். சோம்பேறிகள் எப்போதுமே சோம்பேறிகளாகத்தான் இருப்பார்கள். ஆகையால் இந்தக் காரியத்திற்கு வேறு வேலை இருப்ப

தாக சாக்குச் சொல்வது பொருந்தாது. பாரதநாடு முழுதும் நெருப்பை அணைக்கும் காரியம். ஆகவே மற்றவைகளைவிட இதற்கு முதலிடம் கொடுத்தாக வேண்டும். ஆகையால்தான் மற்ற காரியங்களை ஒதுக்கிவைத்து இதை முதலில் மேற்கொள்ள வேண்டுமென்று கூறுகிறேன். ஆனால் அவர்களின் அபிப்பிராயமோ இதற்கு நேர்மாறாயிருக்கிறது. தேர்தலை முடித்த பின்னர் இக்காரியத்தைப் பார்த்துக் கொள்ளலாமென்கின்றனர். தேர்தலுக்காக காவேரியின் ஓட்டம் காத்து நிற்பதில்லை. அதுபோல் அனைவரின் நன்மையையும் கருத்தில் கொண்டுள்ள இந்த இயக்கம் தேர்தலுக்காக தடைபட்டு நிற்க முடியாது. தேர்தலை முன்னிட்டு நீங்கள் குளிக்கவில்லையென்பதற்காக காவேரி காத்து நிற்காது. நீங்கள் வேண்டுமானால் தேர்தலுக்குப் பிறகு குளிக்காத நாட்களுக்கும் சேர்த்து இரண்டு, மூன்று முழுக்குகள் போடலாம். இதற்கு மாறாக தேர்தலுக்காக காவேரி காத்திருந்தால் அதன் நீர் தேக்கமடைந்து காவேரியின் பெருமை குறைவதுடன் மக்களும் அதனால் தீமையடைவார்கள். இதற்கு மாறாக தேர்தல் காலத்திலும் பாபாவும் அவருடைய ஊழியர்களும் பூதானத்திற்காக தொடர்ந்து வேலை செய்வதென்றால் மக்களிடம் அவர்களுக்கு நல்ல ஆதரவு இருக்கும். தேர்தல் காலத்தில் நம் இயக்கம் நன்கு வளர முடியும். இதனால் சமூகத்திலுள்ள தீமைகளை மக்களிடம் எடுத்துக் கூறி அவர்களை விழிப்படையச் செய்யலாம்.

### தேர்தலுக்காக இயக்கம் நிற்காது

நான் தினந்தோறும் வேதம் படிக்கும் வழக்கம் உடையவன். நான் படிக்கும்போது புத்தகத்தின் மீது கொசு ஒன்று உட்காருகிறது. அதற்காக வேதப் படிப்பை நான் விடமுடியுமா? அதுபோல் தேர்தலுக்காக இந்த இயக்கத்தை நிறுத்தி வைப்பதென்பது இயலாத காரியம். நேற்றைய தந்தி மூலம் மதுரை ஜில்லாவிலிருந்து நாலு கிராமதானங்கள் கிடைத்திருப்பதாக செய்தி கிடைத்தது.

1957ம் ஆண்டு முடியும்வரை முழுமூச்சுடன் இக்காரியத்தில் ஈடுபட்டால் பிறகு செய்யவேண்டியதைப் பற்றி பின்னர் யோசிக்கலாம் என்பதே என் கருத்து. வேலையில் ஒரு சிறிதும் ஈடுபடாதவர்கள் 1957-ம் ஆண்டிற்குப் பிறகு பாபா என்ன செய்யப் போகிறார்? பார்க்கலாம் என்கிறார்கள். இவர்கள் வெறும் பார்வையாளர்கள்தான். கரையில் நின்று வேடிக்கை பார்க்கவே இவர்களுக்குத் தெரியும். காரியம் செய்ய இவர்கள் அறியார். இந்த வழியைக் கடைப்பிடித்து பரிபூரணமாக ஏற்று நடத்தினால்தான் புதிய வழியைப்பற்றி யோசிக்க முடியும். மெட்ரிக் படித்து முடித்தவர்களுக்கு காலேஜ் படிப்பைப்பற்றி கேட்கும் உரிமையுண்டு. மெட்ரிக்கே படிக்காத நிலையில் காலேஜ் படிப்பைப்பற்றி யோசிப்பதில் என்ன பயன்? அஹிம்சை முறையில் சமூகப் புரட்சி இதன் மூலமே ஏற்பட முடியும்.

உக்கடை—25—1—'57

# கல்வியை பணத்திலிருந்தும் அரசாங்கத்திலிருந்தும் விடுவிக்க வேண்டும்

## வினோபாஜியின் அறைகூவல்

*தமிழ்நாட்டில் கும்பகோணம் கலாச்சாரத்திற்குப் பெயர் பெற்றது. தமிழ்நாட்டின் அறிஞர்கள் பலருக்கு கல்விப் பயிற்சி இங்கு கிடைத்திருக்கிறது. இங்கு சங்கராச்சாரியாரின் மடம் ஒன்றும் இருக்கிறது. தமிழ் நாட்டில் இது ஒரு முக்கியமான க்ஷேத்திரம். ஆகவே இங்குள்ள மக்கள் அறிவிலும் பக்தியிலும் சிறந்தவர்கள். இங்கு வினோபாஜி அவர்கள் தமிழ்நாட்டில் அறிஞர் வகுப்பிற்கு ஆற்றவேண்டிய மிகச் சிறந்த சொற்பொழிவைச் செய்திருக்கிறார். இன்றைய கல்வி முறையின் சீர்கேடுகளையும் பூதானத்தின்மூலம் அதற்கான பரிகாரங்களைப்பற்றி பாபா அவர்கள் ஆற்றிய பிரார்த்தனைச் சொற்பொழிவின் விபரம் பின்வருமாறு:*

### கும்பகோணத்தின் சிறப்பு

தமிழ்நாட்டில் என் யாத்திரை 8 மாதங்களுக்கு மேலாக நடைபெறுகிறது. ஆகையால் என்னிடமுள்ள காலம் மிகவும் குறைவே. நம் நாடோ மிகப் பெரியது. ஆகையால் அத்தனை தூரமும் கால்நடையாக யாத்திரை செய்வதென்றால் அதிக காலம் பிடிக்கும். ஆகவே ஒவ்வொரு இடத்திற்கும் அதிக நாட்கள் கொடுக்க முடியவில்லை. இந்த ஜில்லாவிற்கு யாத்திரைத் திட்டம் வகுத்தபோது 19 நாட்களே கொடுத்தேன். இந்த 19 நாள் யாத்திரைத் திட்டத்தில் நான் கும்பகோணம் வருவது கஷ்டமாகக் கூட இருந்தது. ஆகையால் இந்த ஊரை விட்டுவிடலாமா என்றுகூட சிலர் யோசித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் கும்பகோணத்திற்கு அவசியம் போகவேண்டும், அதற்காகவே அதிகமாக நடக்கவேண்டியிருந்தால் அதற்கும் நான் தயார் என்றேன். ஆகவே என் வற்புறுத்தலினாலேயே நான் இங்கு வந்தேன். இங்கு வருவதைப்பற்றி நான் இவ்வளவு வற்புறுத்துவானேன்? ஏனெனில் இது கல்விஸ்தானமென்று எனக்குத் தெரியும். தற்காலத்தில் வித்தை இங்கு எவ்வளவு தூரம் பாக்கியிருக்கிறதென எனக்குத் தெரியாது. வட இந்தியாவில் காசியைப்போல, தென்னிந்தியாவில் கல்விக்கு கும்பகோணம் சிறப்பாகக் கருதப்படுகிறது. தற்காலம் காசியில்கூட வித்தை சிறிது குறைந்துவிட்டது. இங்கும் அவ்வாறே குறைந்திருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சுயராஜ்யத்திற்குப் பிறகு வித்தை அதிகமாகி யிருக்கவேண்டும். அது இல்லாமல் சுயராஜ்யத்திற்கு பெருமை யிருக்கமுடியாது.

### ஆங்கில ஆட்சியில் கல்வியின் நிலை

இந்த நாடு பல நூற்றாண்டு காலமாக நம் கையில் இல்லை. வேறு நாட்டவர் கையில் இருந்தது. ஆகையால் நம் சமூகத்தை உருவாக்கும் வாய்ப்பு நூற்றுக்கணக்கான வருஷங்களாக நமக்குக்

கிடைக்கவில்லை. அந்நிய ஆட்சியின்கீழ் எப்படியோ உயிர் வாழும் நிலையிலிருந்தது. அந்நிலையில் ஆங்கிலக்கல்வி ஒரு சிலருக்குக் கிடைத்தது, சிலருக்குக் கிடைக்காமலும் இருந்தது. அதனால் ஒரு சிலருக்கு நன்மைகளும் ஏற்பட்டன, பலருக்கு தீமைகளும் ஏற்பட்டன. இதன் பயனாக ஒரு சிலருக்கு ஆங்கிலக்கல்வி கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கோ கல்வி என்பதே கொடுக்கப்படவில்லை. ஒரு சிலருக்கு பி. ஏ., எம். ஏ., படித்து தமிழில் பேசத் தெரியாத நிலைமை இருந்தது. பலருக்கோ, பலர் அல்ல கோடி கோடி பேருக்கு அ, ஆ எழுத்துகூடத் தெரியாத நிலை இருந்தது. ஆகவே மொத்தத்தில் அக்கல்வியால் நம் நாட்டில் தீமையே ஏற்பட்டது. ஒருபுறம் பழங்காலக் கல்வியின் மதிப்புக் குன்றியது. மறுபுறமோ கோடிக் கணக்கான மக்களுக்கு சாதாரண கல்விகூட கிடைக்கவில்லை. ஆகவே இரண்டு முக்கிய விஷயங்களை நாம் இழந்துவிட்டோம். (இந்த கட்டத்தில் புகைப்படம் எடுப்பவர் ஒருவர் பாபா அமர்ந்திருந்த உயரமான மேடையின்மீது மிகவும் சிரமப்பட்டு தாவி ஏறி மக்களுக்கும் பாபாவுக்கும் இடையில் நின்று புகைப்படம் எடுக்க முயன்றார். அவரைச் சுட்டிக்காட்டி பாபா பின்வருமாறு பேசலானார்.) இதுதான் புதிய கல்வியின் குறைபாடு. பழங்காலத்தில் மக்களுக்கும் பேசுகிறவருக்கும் இடையில் இத்தகைய செயல் நடந்திருந்தால் இது காட்டுமிராண்டித்தனமாகக் கருதப்படும். ஆனால் இன்றோ இது நாகரீகமாகக் கருதப்படுகிறது. மக்கள் அத்தனை பேரும் கவனம் இழக்கப்பட்டதால் காலம் வீணாயிற்று. அதைப்பற்றி அவருக்குக் கவலையில்லை. ஆனால் இதற்காக அவரை நான் குறைகூறவில்லை. அவர் செய்ததும் சேவையென்றே கருதப்படுகிறது. இப்படிப்பட்ட படங்கள் என் வேலைக்கு உதவி செய்யும் என்ற எண்ணமிருக்கிறது. இதை நான் ஒப்புக்கொள்கிறேன் ஆனால் இது கடைசியில் அல்லது தொடக்கத்தில் செய்யப்பட்டிருந்தால் நன்றாயிருக்கும்.

## பணத்தோடு இணைந்த நற்காலக் கல்வி

நமக்குப் புதிய கல்வி வந்தது. அத்துடன் கல்விக்கும் காசுக்கும் தொடர்பு ஏற்பட்டது. எம். ஏ. பாஸ் செய்தவருக்கு இவ்வளவு சம்பளம், ஆக்ஸ்போர்டு சென்று வந்தவருக்கு இன்னும் அதைவிட அதிகச் சம்பளம். இப்போது அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதால் அவர்களின் மதிப்பு சிறிது குறைந்துவிட்டது.

கல்வியின் உத்தேசமே மாறிவிட்டது. அதிகமாகக் கற்றுமளவுக்கு பணமும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. "ஸா வித்யா யா விமுக்தயே"—முக்திக்காக எந்தக் கல்வி இருக்குமோ அதுவே கல்வி எனப்படும். எவ்வளவுக்கு அதிகமாக வித்வான்களாக இருந்தார்களோ அவ்வளவுக்கு அதிகமாக தியாகிகளாக இருந்தார்கள் என்பதே நம் நாட்டின் கருத்து. மிக உயர்ந்த கல்வி பெற்றவன் மகா தியாகிகளாக இருந்தான். கல்வியின் பயன் தியாகமாயிருந்தது. ஆனால் இன்றோ யார் அதிகக் கல்வி பெற்றவர்களோ அவர்கள் பெரிய போகிகளாக இருக்கிறார்கள். அறிவாளிகளைக்கண்டு மக்கள் அஞ்சுகிறார்கள். அவர்களிடமிருந்து தப்பியோட விரும்புகிறார்கள். போன ஆண்டில் மொழியின் அடிப்படையில் மாகாண அமைப்புப் பிரச்சனை வந்தது. அதில் விசால ஆந்திராவில் தெலுங்கானாவின் ஒரு பகுதியை சேர்ப்பது பற்றிய பேச்சு எழுந்தது. அப்போது தெலுங்கானா மக்கள் விசால ஆந்திராவுடன் இணைய மறுத்தார்கள். விசாலாந்திரத்தைக்கண்டு அஞ்சினார்கள். இருவரின் மொழியும் ஒன்றாகவே இருந்தபோதிலும் தெலுங்கானா மக்களுக்கு இத்தகைய பயம் ஏற்பட காரணமென்ன? விசாலாந்திரர்கள் தெலுங்கானா மக்களைவிட அதிகம் படித்தவர்கள். ஆகவே விசாலாந்திராவுடன் இணைந்தால் அவர்களுடைய பேச்சு எடுக்காதென்பது அவர்களுடைய நலன் பாதிக்கப்பட்டு அவர்கள் சுரண்டப்படுவார்களென்று என்பதே. அறிவாளிகளைக்கண்டு மக்கள் அஞ்சி நடுங்கும் இந்த நிலை வியப்பிற்குரியது. அறிவாளிகளுக்கு மக்களிடம் அன்பு வேண்டும். அறிவாளிகளிடம் அறிவு இருப்பதால் மக்கள் நம்பிக்கையுடன் அவர்களை அணுகி யோசனை கேட்பார்கள். அவர்களிடமிருந்து அறிவைப் பெறுவார்கள். தங்கள் குறைகளைச் சொல்லி உதவி பெறுவார்கள். ஞானத்தின் மகிமை அதை மற்றவர்களுக்கு வழங்குவதிலேயே இருக்கிறது. நாம் மற்றவர்களுக்குக் கொடுப்பதால் நமது அறிவு குறைவதில்லை. இதற்கு மாறாக அதிகமேயாகிறது. அதற்கு பலமும் ஏற்படுகிறது. இந்நிலையில் அறிவை வழங்குவதின் மூலம் அதை ஏற்பதும் லாபம். இப்படி இரண்டு தரப்பிலும் பலன் ஏற்படும் நிலையில் அறிவாளிகள் தங்கள் அறிவை பிறருக்கு வழங்க தயங்குவது ஏன்? அவர்களை அணுக மக்கள் அஞ்சுவது ஏன்? இக்காலத்தில் படிப்பின் தொடர்பு பணத்தோடு இணைந்துள்ளது.

## படிப்பும் வரதட்சணையும்

அத்துடன் படிப்பு கடைத்தெருச் சரக்காக மாறிவிட்டது. பெற்றோர்கள் தங்கள் பையன்களை விலை கூறுகிறார்கள். நம் பையன் எம். ஏ., பாஸ் செய்திருக்கிறான். ஆகவே அவனுக்குக் கலியாணம் செய்யவேண்டும். கல்யாணத்திற்கு பெண் பார்த்தாயிற்று. பெண்ணுக்கும் பையனுக்கும் சம்மதம் தான். ஆனால் திடீரென்று கலியாணத்திற்குத் தடை ஏற்பட்டுவிட்டது. காரணமென்ன? பெண்ணின் தந்தை 1000 ரூபாய் வரதட்சணைக் கொடுப்பதாகக் கூறுகிறார். பையனின் தந்தையோ என் மகன் எம். ஏ., பாஸ் செய்திருக்கிறான். ஆகவே 5,000 ரூபாய்க்குக் குறைவாக இந்த வியாபாரம் நடக்காது என்கிறார். ஒருவன் சந்தையில் காளை மாட்டை விற்க வருகிறான். ஒருவன் அதை விலை பேசுகிறான். அதன் பல்லைப் பார்த்து அது நல்ல மாடு என நிச்சயிக்கிறான்- என்ன விலை என்று கேட்கிறான். மாட்டுக்காரன் 1000 ரூபாய்க்குக் குறை

யாது என்கிறான். "அடே, 500க்கு மேல் என்ன விலை? என்று வாங்குபவன் கேட்கிறான். "தம்பீ! 3 வருஷமாக தீனிபோட்டு கொழு கொழுவென்று வளர்த்திருக்கிறேன். 1000 ரூபாய்க்குச் சம்மதமானால் மாட்டை ஓட்டு. அல்லது பேசாமல் போ" என்று பதில் கூறுகிறான். அதேபோன்றே பையனின் தந்தையும் என் மகனை நான்கு வருடங்கள் படிக்க வைத்திருக்கிறேன். ஆகவேதான் அவனுக்கு இந்த விலை என்று கூறுகிறார். என்ன பரிதாபம்? காளை மாட்டின் நிலைமைக்கு எம். ஏ., படித்தவன் இறங்கிவந்து விட்டானே? (இந்த இடத்தில் கூட்டத்தினர் கொல்லென்று சிரித்தனர்) ஆம்! சிரிக்கவும்தான் வேண்டும். அழவும்தான் வேண்டும். ஆகவேதான் அறிவாளிகளிடம் பயம் ஏற்படுகிறது. அறிவாளிகளாக இருப்பவர்கள் தியாகிகளாக இருந்தால் மக்கள் பயப்படமாட்டார்கள். கும்பகோணம் என்ற பெயருக்கு மக்களை மோசம் செய்தல் என்ற பொருள் கூறப்படுகிறது. இது பழைய கல்வி முறையால் ஏற்பட்டதல்ல. புதிய முறையில் கல்வியைப் பணத்துடன் இணைத்ததின் பலனே இது.

## பணத்திற்கு அடிமை

கல்வி இருவகைப்படும் ஒரு வகைக் கல்வி முன்னுக்குக் கொண்டு வருவதாகும். மற்றதோ அழிவுக்கு இட்டுச் செல்வதாகும். கொள்ளை அடிப்பதற்கு உதவும் இந்தக் கல்வியை வித்தையென்பது தவறு. இது அவித்தையே. மேலநாட்டில் இந்தக் கல்வி அதிகம் பரவியிருக்கிறது. இந்த வித்தையால் அழிவு தரும் அஸ்திரங்கள் ஏற்பட்டுள்ளன, அறிவாளிகள் காசுக்கு அடிமையாக இருப்பதால் அவர்கள் அறிவை விலைகூறுகின்றனர். அரசாங்கம் வெடிகுண்டு வேண்டுமென்கிறது. அதற்குக் காசு தருவதாகக் கூறுகிறது. அறிவாளியோ சரி அப்படியே செய்கிறேன் என்கிறான், இவ்வாறு அறிவாளிகளின்மேல் அரசாங்கத்தின் ஆட்சி நடைபெறுகிறது. அரசாங்கம் நடத்துகிறவர்கள் அறிவாளிகளல்ல. ஆனால் அறிவாளியோ அரசாங்கத்தின் சொற்படி ஆடுகிறான். இது ஏன்? அறிவாளி காசுக்கு அடிமையாயிருப்பதால்தான். ஆகையால் எந்த விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமோ அந்த விஷயங்களைக் கண்டுபிடிக்க இவருடைய அறிவு பயன்படுவதில்லை. அரசாங்கம் எதைக் கண்டுபிடிக்க விரும்புகிறதோ அதைக் கண்டுபிடிக்கவே இவருடைய அறிவு பயன்படுகிறது. நம் நாட்டின் பாரம்பரைப் பழக்கம் அறிவாளியின்முன் அரசன் தலை வணங்குவதேயாகும். ஆனால் இன்றோ அரசனுக்கு அறிவாளி தலை வணங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

விளையதன் ஒரு அரசன். அவன் வசிஷ்டர் ஆசிரமத்திற்கு அறிவு பெற வந்தான். அங்கு அமைதி பெற விரும்பினான். ஆசிரமத்தில் வேலையின்றி யாரும் இருக்க முடியாது. இது ஆசிரமத்தின் நியதி. ஆகவே அரசனுக்கு பசு மேய்க்கும் பணி கொடுக்கப்பட்டது. அவன்



அதை மிகவும் திறமையுடன் செய்துமுடித்தான். அந்த ராஜாவின் பசு தேவையைப்பற்றி ரகு வம்சத்தில் நன்றாக வர்ணிக்கப்படுகிறது. நிழல் மனிதனைப் பின் தொடர்வதுபோல அரசன் பசுவை பின்தொடர்ந்து சென்றான். அது நின்றால் அவன் நிற்பான். அது படுத்தால் தானும் படுப்பான். இவ்வாறு அந்தப் பசுவின் சேவையிலேயே அரசன் கண்ணும் கருத்துமாய் இருந்துவந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வாறு வசிஷ்டருக்கு முன் அரசன் தலை வணங்கினான். ஆனால் இன்றோ வசிஷ்டர் அரசனுக்குத் தலை வணங்குகிறார். இன்று மாணிக்கவாசகர் இருந்திருந்தாலும் அவர் தலையில் 5,000 10,000 ரூபாய்கள் விழுந்திருக்கும். அவர் மாகாணத்தின் முக்கிய மந்திரியாக இருந்தார். அங்கிருப்போர் அனைவரும் அறிவின்பெயரால் மக்களை உறிஞ்சி வாழும் நரிகளே எனக் கண்டார். நரிகளை வைத்துக் கொண்டு என்ன செய்வது? வேலை செய்வதற்கு குதிரையல்லவா வேண்டும்? அறிவைச் செலுத்தி மக்களை உறிஞ்சும் அத்தனை நரிகளையும் பரியாக்குவேனென்று புறப்பட்டார். நரிகளை பரிகளாகவும் ஆக்கினார். அதற்குமேல் தனக்கு அங்கு வேலையில்லை என்பதைக் கண்டார். அரண்மனை வாசத்தையும் பட்டம் பதவியையும் உதறித்தள்ளி மக்களின் சேவைக்காக மக்களிடையே சென்றார். இறைவனைப் பற்றிய அழகிய பாட்டுகளைப் பாடினார். "யான், எனது என்று அவரவரைக் கூத்தாட்டும்" இந்த நிலைமையைக் காசு கொடுத்து அறிவாளிகளை விலைக்கு வாங்கும் இந்த அவல நிலைமையை அவர் வெறுத்தார். இப்படி நான் இருக்கமாட்டேன் என்றார். ஜனசக்தியை உருவாக்கினார். உழைப்புச் சக்தியின் பெருமையை உயர்த்தினார். அறிவை விற்று நரியாய் உட்கார்ந்திருந்தவர்களால் ஒரு காரியமும் நடக்காது என்ற விஷயத்தை நாட்டிற்கு எடுத்துச் சொன்னார்.

## அரசாங்கத்திற்கு பாத சேவை செய்யும் அறிஞர்கள்

ஐரோப்பாவில் இப்படித்தான் நடக்கிறது. பெரிய பெரிய அறிஞர்கள் அரசாங்கத்துக்கு பாத சேவை புரிந்து தலை வணங்குகிறார்கள். விஞ்ஞானிகள் தங்கள் பெருமையை உணர்ந்தால் அவர்கள் பணத்துக்கு அடிமையாக முடியாது. அந்நிலையில் அவர்களால் உலகக் கஷ்டங்கள் நீங்கும். எனக்கு ஒரு மரவுரி மட்டுமே இருந்தால் போதும் என்ற நிலை இருந்தால் அரசனுக்கு அறிஞன் தலைவணங்க வேண்டியிராது.

## அலெக்ஸாண்டரும் பக்கிரியும்

மகாவீரன் அலெக்ஸாண்டர் உலகின் பாதியை ஜெயித்து பாரதம் வந்தான். பஞ்சாபில் சிறிது எதிர்ப்பு இருந்தும் வெற்றி பெற்றான். தான் ஊருக்குத் திரும்பும் வழியில் சாலையோரத்தில் ஒரு பக்கிரியைக் கண்டான். அவரை நோக்கி நீ யார் என்று அதட்டிக் கேட்டான். அவரோ சிறிதும் அச்சமும், கவலையுமின்றி கம்பீரமாக "நீ யார் என்று கேட்டார்." அரசனோ ஆத்திரமாக நீ யாரென்

பதை முதலில் சொல். பிறகு என்னைப்பற்றி தெரிந்துகொள்வாய் என்றான். பக்கிரியோ கம்பீரமாக "நான் உலகத்தின் சக்கரவர்த்தி" என்று கூறினான். இதைக் கேட்டு அரசன் திகைப்படைந்தான். உலகத்தை ஜெயிக்க நான் இவ்வளவு கஷ்டப்படுகிறேன். நீயோ இவ்வளவு அலட்சியமாக உலகத்தின் சக்கரவர்த்தி என்று கூறுகிறாயே என்றான். பக்கிரி அரசனுக்குப் பதிலளித்தார்: சக்கரவர்த்தியின் லட்சணத்தைக் காணவேண்டுமென்றால் என் முகத்தைப் பார் என்றார். ஆம்! அந்தத் துறவியின் முகத்தில் அமைதி தாண்டவமாடியது. அங்கு அச்சமோ, ஆத்திரமோ, படபடப்போ இல்லை. அரசன் தன் தவறை உணர்ந்தான். ஆண்டிக்குத் தலை வணங்கினான். அறிவுக்கு முன் ஆட்சி பீடம் தலை வணங்கியது. ஆனால் இன்றோ அறிவின் மதிப்பு வீழ்ச்சியுற்று காசுக்கு அடிமையாகி விட்டது, அறிவாளிகளின் காரணமாக உலகம் கலங்கிக்கொண்டிருக்கிறது. அவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றவேண்டி அது ஆண்டவனிடம் முறையிடுகிறது.

## கலைமகள் ஆட்சிபுரிந்த நம் தேசம்

சகோதரர்களே இந்த கும்பகோணத்திற்கு என் விருப்பத்தின் படியே வந்திருக்கிறேன். என் கருத்தை உங்களிடம் சொல்லவே வந்தேன். எந்தவிதமான ஆட்சிக்கும் படிப்பு அடிமையாயிருக்க முடியாது. "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் — அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" (இந்த இடத்தில் "அப்பொருள் காண்பதறிவு" என்பதை "அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று கூறி பாபா திருத்தினார்.) ஆகவே எல்லாவற்றிலும் உண்மையைக் காண்பதே அறிவு. கல்வி காசுக்கு அடிமையானதிலிருந்து அது ராக்ஷஸி ஆகிவிட்டது.' முற்காலத்தில் கல்விக்கு நாம் தேவதை ஸ்தானம் கொடுத்திருந்தோம். கலைமகளை சரஸ்வதி தேவி, வீணா புஸ்தக தாரணி என்றெல்லாம் சிறப்பித்துக் கூறினோம். இன்றைய நிலையிலோ கல்வி அரக்கியாகியிருக்கிறது. அதனை அந்த அரக்க நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவதே நம் கடமையாகும். பழங்காலத்திலிருந்து நம் நாடு அறிவாளிகளின் நாடாயிருந்திருக்கிறது. உலகிலேயே இங்கிருந்து தான் அறிவொளி முதன்முதலாக கதிர் பரப்பத் தொடங்கியது. உலகின் மற்ற பகுதிகள் இருண்டு கிடந்த காலத்தும் இங்கு ஞான ஒளி வீசியது. இங்கு ஞான சர்ச்சைகள் நடந்தன. 6 வித தரிசனங்களை நம் முன்னோர் கண்டனர். சாமவேத தொனி முதன் முதல் தோன்றியது நம் நாட்டிலேயே. ஆகையால் இது ஞான பூமியென அழைக்கப்படுகிறது. பாரதநாட்டின் வைபவம் எல்லைக்குட்பட்டதல்ல. கணக்கற்ற நதிகளும், காடுகளும், நெடிது உயர்ந்த மலைகளும், நேர்த்தியான கனிகளும், தானியங்களும், கிழங்குகளும் நிறைந்து செல்வம் கொழித்த சிறப்புடையது நம் நாடு. இந்த வைபவம் பிற நாடுகளிலும் உண்டு. ஆனால் நம் நாட்டின் சிறந்த வைபவம் ஞான வைபவமே.



## சிரம தேவதையே லக்ஷ்மி

2,000 வருடங்களுக்குமுன் எழுதிய குறளை இங்கு குழந்தைகளும் படிக்கிறார்கள். குழந்தைகள் படிக்குமளவுக்கு குறள் அவ்வளவு எளிதாய் இருக்கிறது. ஆனால் 2,000 வருடங்களுக்கு முன்னரோ ஆங்கில மொழியே இல்லை. 500–600 வருடங்களுக்கு முன் உள்ள ஆங்கிலத்தை தற்கால ஆங்கிலேயர்கள்கூட படிக்க முடியாது. இங்கோ 2,000 வருடங்களுக்கு முற்பட்ட நூலையும் சுலபமாகப் படிக்கிறோம். இத்தகைய ஞானப் பரம்பரை பல தலைமுறைகளாக நடந்து வருகிறது. ஆகவே வித்தையை அரசாங்கத்திலிருந்து லட்சுமியிடமிருந்து விடுவிடுவிப்பதே நமது பொறுப்பாகிறது. மன்னிக்க வேண்டும். நான் இங்கு ஒரு தவறான சொல்லை கையாண்டுவிட்டேன். நான் லட்சுமி என்று கூறியது தவறு. லட்சுமியோ பெரிய தேவதை. லட்சுமியென்று கூறியபோது என் மனதில் பணத்தைப்பற்றிய எண்ணம்தான் இருந்தது. லட்சுமியோ ராஜாக்களிடத்தில் இருப்பதில்லை. பாங்கிலும் இருப்பதில்லை. வியாபாரிகளிடத்திலும் கடை வீதியிலும் அவளைக் காண முடியாது. வயலில் தான் லட்சுமி இருப்பாள். உழைப்பவர்களிடம்தான் அவளைக் காண முடியும். லட்சுமி சிரம தேவதை.

## கல்வியின்பேரில் அரசாங்கத்தின் ஆதிக்கம்

உத்தர பிரதேசத்திலுள்ள 51 ஜில்லாக்களில் $6\frac{1}{4}$ கோடி மக்கள் உள்ளனர். இவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் $\frac{1}{6}$ பங்கு எனக் கொள்ளலாம். ஆகவே 6 கோடி மக்களில் 1 கோடி மக்கள் அரசாங்கம் விதித்த புத்தகத்தையே படிக்க வேண்டும். அரசாங்கம் விதித்துள்ள பாடப் புத்தகத்தை படிக்கும் நிலைமை பலாத்காரமாக மக்கள் மீது திணிக்கப்படுகிறது. இதற்கு முன் எந்த அரசாங்கத்திலும் கல்வியின்மீது இத்தகைய ஆட்சி நடக்கவில்லை. முற்காலத்தில் குழந்தைகள் கல்வி பெறுவதற்காக ஆசிரமத்தில் சேர்க்கப்பட்டனர். அரசகுமாரர்களும்கூட கல்வி பெற வேண்டின் ஆசிரம வாழ்க்கையை ஏற்கவேண்டியிருந்தது. அங்கு அனைவரும் கட்டாயமாக உடலுழைப்பை மேற்கொள்ளவேண்டியிருந்தது. விறகு சேகரித்தல் போன்ற வேலைகளை அரசனின் குழந்தையுட்பட அனைவரும் செய்ய வேண்டியிருந்தது.

## ஜியோமிதிக்கு ராஜபாட்டையில்லை

ஒரு அரசன் கணிதப் பேரறிஞனை யூக்லிட்டிடம் போனான். என் பையனுக்கு ஜியோமிதி கற்றுத் தர வேண்டுமென்றார். யூக்லிட்டோ அந்தப் பையனுக்கு கற்றுத் தருகிறேனென்றார். அரசனோ தன் பையன் எங்கு சேர்க்கவேண்டுமென்று கேட்டார். மற்ற பையன்களுடனேயே அவன் கல்வி பெற வேண்டுமென்று பதில் கிடைத்தது. தன் மகன் மற்றவர்களுடன் சமமான நிலையில் கல்வி பெறுவதை அரசன் விரும்பவில்லை. யூக்லிட்டோ (No Royal Road to Geometry) ஜியோமிதிக்கு ராஜபாட்டை என்று எதுவும் தனியா

யில்லை என்று அரசனிடம் கம்பீரமாகப் பதிலளித்தார். நம் நாட்டிலோ இன்று ராஜகுமாரர்களுக்காகவென்று தனி கல்லூரிகள் இருக்கின்றன. டில்லி, பீஹார் போன்ற இடங்களில் இத்தகைய கல்லூரிகள் இருக்கின்றன. முற்காலத்திலோ ஆண்டி வீட்டுக் குழந்தை, அரச குமாரன் அனைவருக்கும் தமிழிலேயே கல்வி போதனை கிடைத்து வந்தது. இன்றோ 4 வயது குழந்தைகளுக்கும் ஆங்கிலத்தில் கல்வி போதனை கொடுக்கப்படுகிறது. இங்கு மாணவர்களுக்கு நெட்டுரு முறை இல்லை. மாணவர்களுக்குப் பதிலாக ஆசிரியரே நெட்டுரு போடுவார். ஏனெனில் மற்றப் பிள்ளைகளைப் போல இவர்கள் நடத்தப்படக் கூடாது. இவர்களுக்கு தனிச் சலுகைகளும், தனி சௌகர்யங்களும் தேவை. முற்காலத்திலோ அரச குமாரர்கள் கல்வி பெற வேண்டுமாயின் எந்த கஷ்டங்களுக்குட்பட்டு ஏழை மக்கள் கல்வி பெறுவார்களோ அதே கஷ்டங்களுக்குட்பட்டு அவர்களும் கல்வி பெறவேண்டுமென்ற நிலைமை இருந்தது. ஆகவே கருத்தில் சமத்துவம் இருந்தது. ஆனால் இன்றோ கம்யூனிஸம், சாம்ய யோகம் என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆனால் கல்வி முறையிலென்னவோ சமத்துவத்தைக் காணோம். சகோதரர்களே, உலக நிலை எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! ஹிட்லரின் ஆட்சியில் குழந்தைகளுக்கு போலீஸ் முறை கற்பிக்கப்பட்டது. ஹிட்லரின் ஜேகோஷமும் ஹிட்லரின் பாட்டும் எல்லாப் பள்ளிகளிலும் ஒலித்தன. ரஷ்யாவிலோ கம்யூனிஸம் கல்வித் துறையில் புகுத்தப்படுகிறது. ஸ்டாலினின் புகழ் பள்ளிகளில் பாடப்படுகிறது. முதலாளித்துவ அரசாங்கத்திலோ அதற்கேற்ற கல்வியே எல்லாப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகிறது. நம் அரசாங்கத்திலோ எனில் ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி கற்பிப்பார்கள். அது நன்மையா தீமையா என நான் சொல்ல வரவில்லை. நான் சொல்வதெல்லாம் அரசாங்கத்தின் கையில் கல்வி இருக்கும் போது அது ஒரே அச்சில் வார்த்ததாக (Regimentation) ஆகிறது என்பதே. மக்கள் அத்தனைபேரின் மூளையையும் ஒரே அச்சில் வார்க்க முயற்சி நடக்கிறது என்பதே.

## ஆசிரியர்களின் மதிப்பு உயரவேண்டும்

கபிலர் கணாதரை கண்டித்தார். கணாதரோ கபிலரைக் கண்டித்தார். வேதாந்தமோ இவ்விருவரையுமே கண்டித்தது. இன்றைய நிலையில் வேறு கருத்தை பொறுக்கக்கூட முடியவில்லை. எந்த முறையில் கல்வி இருக்கிறதோ அதே முறையில் கால அட்டவணையும்கூட அமைக்கப்படுகிறது. ஆசிரியர்கள் வேலைக்காரர்களைப்போல் ஆகிவிட்டதால் ஆசிரியர்களின் மதிப்பு குறைந்துவிட்டது. அவர்களுக்கு மூளைச் சுதந்திரம் — சுயமாகச் சிந்திக்கும் சுதந்திரம் இல்லை. வயலுக்கு காளைமாடுகளை ஓட்டிச் செல்லும் விவசாயி காளைமாட்டினிடம் விவசாயத்தைப்பற்றி யோசனை கேட்பதில்லை. காளைகளின் உழைப்பு மட்டுமே அவனுக்குத்



தேவை. காளைகளின் ஆலோசனை அவனுக்குத் தேவையில்லை. ஆசிரியர்களின் நிலையும் இத்தகையதே. பிள்ளைகளுக்கு எந்தவிதமான கல்வி கொடுக்கப்படலாம் என்பதைப் பற்றி ஆசிரியர்களின் அபிப்ராயம் கேட்கப்படுவதே இல்லை. அரசாங்கம் வகுத்த திட்டத்தை அமல் நடத்த மட்டுமே ஆசிரியரின் உதவி நாடப்படுகிறது. தாங்கள் வேலைக்காரர்களாக, கூலிக்காரர்களாக நடத்தப்படுவதைப்பற்றி ஆசிரியர்களுக்குக் கவலையில்லை. ஆனால் தங்கள் சம்பளம் இன்னும் சிறிது அதிகரிக்கப்படவேண்டுமென்பதே அவர்களின் குறை. காளை மாட்டிற்கு உள்ள குறை அனைத்தும் அதற்குப் போதிய தீனி கிடைக்கவில்லை என்பதே. விவசாயத்தைப்பற்றி தன்னிடம் ஆலோசனை கேட்கவில்லை என்பதுகுறித்து அதற்குச் சிறிதும் வருத்தமில்லை. இவ்வாறே ஆசிரியர்களுக்கும் தங்கள் சம்பளம் போதாதென்ற குறை இருக்கிறதே தவிர தங்கள் மதிப்பு உயரவேண்டுமென்ற எண்ணமில்லை. ஆனால் பாபாவோ உங்கள் சம்பளம் உயருவதைக்காட்டிலும் உங்கள் மதிப்பு உயருவதையே முக்கியமாய் கருதுகிறார்.

## குரு-சிஷ்யர்கள் தொடர்பற்ற கல்வி

இன்றைய நிலைமையில் ஒரு ஏழை மாணவன் தன் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களையும் பிரச்னைகளையும்பற்றி தன் ஆசிரியரிடம் ஆலோசனை கேட்க முடிவதில்லை. தாய், தந்தையிடமும், நண்பர்களிடமும் யோசனை பெற வாய்ப்பு இருக்கிறதே தவிர அறிவின் வழிகாட்டியாக உள்ள தன் ஆசிரியனை நாடி ஆலோசனை பெறும் நிலைமை இன்று இல்லை. குரு சிஷ்யனின் தொடர்பைப்போன்ற சிறந்த அறிவுத் தொடர்பு வேறு இல்லை. தாய் அறிவில்லாதவளாய் இருப்பாள். ஆனால் அவளிடம் அன்பும், சேவையும் கிடைக்கும். இதற்குப் பதிலாக பையனும் அவளுக்கு அன்புடன் சேவை செய்வான். ஆனால் அபிப்பிராயம் கேட்பதற்கோ அவன் தன் தாயை நாட முடியாது. தாயினுடைய அறிவு அவனுக்கு வாழ்க்கையின் பிரச்னைகளில் ஆலோசனை கூறும் நிலையில் இல்லாது இருக்கிறான். ஆகவே தன்னிலும் உயர்ந்த அறிவுடைய தன் ஆசிரியரையே, ஒருவன் ஆலோசனைக்கு நாடவேண்டியிருக்கிறது. இப்போதோ குரு சிஷ்யர்களிடையே தொடர்பு இல்லை. இதற்கு மாறாகக் கணவனுக்கு மனைவியிடத்தும் அண்ணனுக்கு தம்பியிடத்தும் நண்பர்களிடையும் தொடர்பு காணப்படுகிறது. இன்றைய நிலையில் ஆபத்துக்காலத்தில் அபிப்பிராயம் கேட்கும் ஆசாமியே இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்தனை பாலங்கள், இத்தனை ரயில் தண்டவாளங்கள், இத்தனை மில்கள் அதிகப்படுத்தப் படும், என்ற திட்டம் இருக்கிறது. ஆனால் குரு சிஷ்யர்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்தும் திட்டம் இல்லை. ஐந்தாண்டுத் திட்டத்தால் சுதந்திர அறிவு ஏற்படவே ஏற்படாது. வித்தை அடிமையாக இருக்கும் வரை இது நடக்காது.

ஆசிரியர் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

## உண்மையான எதிர்ப்பு வேண்டும்

கல்வி அரசாங்கப்பிடிப்பிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். இத்தகைய நிலைமையின்றி உலகக் கஷ்டம் தீராது. அரசாங்கத்திற்கு நல்ல எதிர்ப்பு வேண்டுமென்று ராஜாஜிக்கு கவலை. எதிர்ப்பை யார் செய்வது? சுதந்திர அறிவுடையவர்களே எதிர்ப்பை நடத்த முடியும், குரு சுதந்திரமாக இருந்தால் தான் மாணவர்களும் சுதந்திரமாக இருக்க முடியும்.

இந்தக் கல்வி முறையிலேயே ஊறி வளர்ந்திருப்பவர்கள் இருக்கும் வரையில், எதிர்ப்பு இருப்பதால் மட்டுமே இது கைகூடாது. இன்றைய நிலைமையில் ராணுவத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்று யாராவது சொல்வார்களா? அரசாங்க அதிகாரத்திலிருந்து கல்வி வெளியேற வேண்டுமென்று யாராவது சொல்வார்களா? உடைமையை தகர்க்க வேண்டுமென்று யாராவது சொல்வார்களா? கிராமதானத்தின் மூலம் கிராமங்களை ஒன்றாக இணைக்கவேண்டுமென்று யாராவது சொல்வார்களா? ரயில் தண்டவாளத்தை சிறிது அதிகப்படுத்தலாம். அதிகபட்ச நிலவரம்பு முப்பது ஏக்கருக்குப் பதிலாக இருபத்தைந்து ஏக்கராக இருக்கலாம். ராணுவச் செலவையும் இன்னும் சிறிது குறைக்கலாம், என்று கூறப்படுமேதவிர இன்றுள்ள தீமைகளின் அடிப்படையையே மாற்றி அமைக்கலாம் என்று யாரும் கூறுவதில்லை.

இந்து தர்மத்தில் இருபத்தினான்கு வருடங்கள் பிரம்மச்சரியமும், பிறகு இல்லறமும், அதன் பின்னர் வானப்பிரஸ்தமும் என வாழ்க்கை வரையறுக்கப்பட்டிருக்கிறது. தன் குழந்தைகளுக்குப் போதிய வயது வந்தவுடன் அவர்கள் கையில் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்து வெளியேறுவதே வானப்பிரஸ்தம் எனக் கூறப்படுகிறது. இன்றைய நிலையிலோ இல்லறத்திலிருந்து விடுதலையே இல்லை. யமன் வந்து விடுவிக்கும்போது தான் விடுதலை. சுகபோகப் பற்றுதல் நமக்கு வாழ்வின் இறுதி மூச்சு வரை இருந்துகொண்டிருக்கிறது. இதிலிருந்து விடுபட வேண்டுமென்று எதிர்கட்சியாளர் சொல்லவேண்டாமா? ஆகவே மிகப் பெரிய கம்பீரமான விஷயம் இதைச் சொல்வதற்கான மூளைச் சுதந்திரமும், அறிவுச் சுதந்திரமும் வேண்டுமென்பதே. மனித அறிவை ஒரே அச்சில் வார்க்கும் எந்திரம் கூடாது.

உலகில் இரண்டு கட்சிகள் உள்ளன. ஒன்று அதிகம் படித்த கட்சி, மற்றொன்று கல்வியறிவே பெறாதது. யார் உடல் உழைப்பு செய்யாமல் இருக்கிறார்களோ அவர்களுக்கு உழைக்காமல் உணவு கிடைக்காது. ஆகையால் பெருவாரியான மக்கள் கட்டாயமாக உடல் உழைப்பு செய்தே தீரவேண்டும். மக்களுக்கு இலவசக்கல்வி வேண்டுமென்றே விரும்புகிறார்கள். இதனால் வேலை நடக்காது, ஒரு சிலருக்கு படிக்க வசதியிராது. மற்றவர்களோ இதனால் நன்கு படித்து பயன் அடைவர். படிப்



புடன் பணத்தின் தொடர்பு ஏற்பட்டிருப்பதால் ஒரு சிலர் படிக்கவும், மற்றும் பலர் படிக்காது இருக்கவும் ஆகிய நிலைமை ஏற்படும். இதன் பயனாக வகுப்புச் சண்டை தீராது. லட்சக்கணக்கான வருடங்கள் முயன்றும் சமாதானம் கிட்டாது. குறைந்தபட்ச உழைப்பில் அதிகப்பணம் பெறும் முயற்சி நடக்கிறது. சிலருக்கு இதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது. ஆனால் பெருவாரியான மக்களுக்கோ இந்தச் சௌகரியம் கிட்டுவதில்லை. ஆகவே சமூகத்தில் ஒருபுறம் கல்வி, ஆட்சி, செல்வாக்கு, சௌகரியம் குவிய, மறுபுறமோ அஞ்ஞானம், அடிமைத்தனம், வறுமை, துன்பம் முதலியன காணப்படுகின்றன. இந்நிலையில் உலக சமாதானம் எப்படி ஏற்பட முடியும்? பாபா விரும்புவது உலகில் அன்பு தோய்ந்த அமைதி ஆட்சியையே. உலகின் அத்தனை பிரச்னைகளும் அன்பினாலேயே தீரவேண்டும். இது பாபாவின் நம்பிக்கை. ஆனால் அரசாங்கத்தின் போக்கு இதற்கு மாறாக இருக்கிறது. க்ஷேமநல அரசாங்கம் மக்கள் விரும்புவதைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்கே இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அரசாங்கத்தின் கையில் கல்வி இருக்கும்வரை கருத்துச் சுதந்திரம் ஏற்பட முடியாது.

## இடையனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை பெற்ற ஆடுகள்!

பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. பிரதிநிதிகள் மக்கள் விரும்புவதை செய்வார்கள் எனக் கூறப்படுகிறது. இன்றுவரை தங்களுக்கான இடையனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆடுகளுக்கு இல்லாது இருந்தது. ஆனால் இன்றோ ஜனநாயகத்தின் பேரால் இடையனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையே மக்களுக்கு இன்று கிடைத்திருக்கிறது. என்னதான் உரிமை கிடைத்தாலும் ஆடு ஆடே, இடையன் இடையனே! இதிலிருந்து விடுபட்டாலே உலகம் சுதந்திரமாக இருக்க முடியும். யு. என். ஒ.-வில் என்ன நடக்கிறது? அன்பை வளர்க்க விரும்புவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் நடப்பது அதற்கு மாறானது. பாரதத்திலும், பாகிஸ்தானிலும் தற்போது நடைபெறும் முயற்சி சண்டைக்கா? அல்லது சமாதானத்திற்கா? என்பது நாம் அறிந்ததே. இன்றைக்கு உலகம் முழுவதும் அமைதியா? அல்லது தீ மூட்டுதலா? என்ற நிலைமை இருந்து வருகிறது. அதற்கான சக்தி உலகில் நாலைந்து பேரின் கையில் இருக்கிறது. அவர்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரிந்ததே. இவர்களுடைய புத்தி கெட்டுவிட்டால் உலகில் யுத்தம் மூளும். மக்களின் வாழ்வும், விவசாயம் போன்ற ஜீவாதார தொழில்களும் பெரிதும் பாதிக்கப்படும். இத்தகைய உலகம் முழுதும் நெருப்பு வைக்கும் சக்தி இதற்குமுன் உலக சரித்திரத்தில் குறிப்பிட்ட ஒரு சிலரின் கையில் ஒருபோதும் இருந்ததில்லை. ஜனநாயக வாதிகளாகிய இவர்களின் கையில் உள்ள அதிகாரம் பழங்காலத்தில் மிகப்பெரிய சக்ரவர்த்திகளிடம்கூட இருந்ததில்லை. சுல்தான் ஆட்சியில்கூட இத்தகைய

அழிவு சக்தி குறிப்பிட்ட ஒரு சிலரிடம் குவிந்திருந்ததில்லை. சில நாட்களுக்கு முன் அமெரிக்க அரசாங்க தலைவரான ஐசன்ஹோவர் காங்கிரஸிலிருந்து ஒரு உரிமை கேட்டார். மத்திய கிழக்கிற்கு ராணுவம் அனுப்பவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் உடனே அனுப்பவேண்டும் என்ற உரிமையையே அவர் கேட்டது. இல்லாவிட்டால் உலகிற்கு ஆபத்து ஏற்படலாம். அரசாங்கத் தலைவரான ஐக்கே சொல்லும்போது, அது எப்படி தவறாக இருக்கமுடியும்! அதை யார் மறுத்துக் கூற முடியும். அங்கு படித்தவர்கள் அதிகம். ஆயினும் கருத்துச் சுதந்திரம் இல்லை. வெறும் படிப்பினால் மட்டும் சுதந்திரம் ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம் கல்வி அறிவாளிகளின் கையில் இல்லாமல் பணம் உடையோரின் கையில் இருப்பதே.

### அரசாங்கம் அங்கீகாரமில்லாத காங்கிரி குருகுலம்

வெள்ளையர் ஆட்சியில்கூட நம் நாட்டில் சில கல்வி ஸ்தாபனங்கள் அரசாங்கத்தினின்று தனித்து நின்று முற்றிலும் சுதந்திரமாகக் கல்விப்பணி யாற்றின. இவற்றுள் காங்கிரி, குருகுலம் ஒன்றாகும். 25 அல்லது 30 வருடங்களாக அரசாங்க அங்கீகாரம் இன்றியே இது நாட்டிற்கேற்ற நற்கல்வியை மக்களுக்கு வழங்கியிருக்கிறது. அடிமை இந்தியாவில் இது சுதந்திர சர்வகலாசாலையாகத் திகழ்ந்தது. இப்பொழுதோ அரசாங்கம் நம்முடையதாக இருக்கிறது. ஆகவே ரவீந்திரநாதரின் சாந்திநிகேதன் போன்ற உயர்ந்த லட்சியமுள்ள கல்வி ஸ்தாபனங்கள்கூட அரசாங்க உதவியில் மோகம் கொண்டு அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டவையாகி விட்டன. அரசாங்கம் நம்முடையது என்பதே இதற்கான காரணம். ஆனால் அரசாங்கப் பலம் மட்டும் இதற்குப் போதாது. மக்களின் உதவியும், ஆதரவும் அதற்கு வேண்டும். அரசாங்கத்தினின்று பெறும் உதவிக்காக எந்தவிதமான நிபந்தனையும் கட்டுப்பாடும் கல்வி ஸ்தாபனங்களின்மேல் இருக்கக்கூடாது.

### கும்பகோணத்தின் அறிவாளிகளின் கடமை

கும்பகோணத்தின் அறிவாளிகளே, எக்காரியத்தைச் செய்தால் அரசாங்கத்தின் பிடியிலிருந்து கல்வி விடுபடும். பூதானம் என்றால் என்ன? பூதானத்தின் பெயரால் என்ன முயற்சி நடைபெறுகிறது? சட்டத்தின் உதவி, பலவந்தம் இல்லாமல் நாட்டின் பிரச்னைகள் தீர வேண்டுமென்பதே பூதானத்தின் லட்சியம். இன்று மதுரை ஜில்லாவில் மேலும் பதினேழு கிராமங்கள் தானமாகக் கிடைத்திருப்பதாகத் தந்தி கிடைத்திருக்கிறது. இக்கிராமங்களில் உள்ள மக்கள் எத்தகைய சட்டத் திட்டங்களும், பலவந்தமும் இல்லாமல் தங்கள் தனி உடைமையை கைவிட்டு அனைவரின் நல்வாழ்வுக்கு ஏற்றதான அமைப்பை சுதந்திரமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கு சுதந்திர ஜனசக்தி ஏற்பட்டிருக்கிறது. பல காரியங்களை மக்கள் தங்கள் சொந்த சக்தியையும்,

(இதன் தொடர்ச்சி 306-ம் பக்கம்)

134052

# இரண்டு தவறான கருத்துக்கள்

## கடவுள் காரியம் கோவிலிலும் சமூகக் காரியம் அரசாங்கத்திலும்!

ஆச்சார்ய வினோபா

உங்களுடைய இந்தப் பிரதேசத்தில் எட்டு மாதங்களாக என் யாத்திரை நடைபெறுகிறது. இங்கு 3 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் வந்தாரென்று நினைக்கிறேன், அதற்குப் பிறகு 3 வருடங்களாக இங்கே ஒரு காரியமும் நடந்ததாகத் தெரியவில்லை. இது ஏன்? இந்தக் காலத்தில் இங்குள்ளோர் அனைவரும் சாப்பிட்டார்கள். இதர காரியங்களையும் கவனித்தார்கள். இந்தக் காரியத்திற்கு மட்டும் ஊழியர்கள் இல்லை. இதற்குக் காரணம் என்ன? காரணம் ஒன்று உண்டு. நமக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு எந்தக் காரியத்தையும் அரசாங்கத்தின் மூலமே செய்து கொள்ளலாமென மக்கள் நினைக்கிறார்கள். தங்களுக்கு எவ்வகையான பொறுப்பும் இல்லையென்பது அவர்களது கருத்து. தார்மீகக் காரியங்களை கவனிக்க கோவில்களும் இருக்கின்றன! பிள்ளைக் குட்டிகளைக் காப்பாற்றுவதும், உண்டு உறங்குவதுமே மக்கள் செய்ய வேண்டிய காரியங்களாக எஞ்சியிருக்கிறதுபோலும்! சமூக சேவைக்கான காரியங்களைச் செய்ய அதற்கென தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பிரதிநிதிகள் செய்து கொள்வார்கள்! ஆகவே சமூக நலன்களைப்பற்றிய பொறுப்பும், மக்களுக்குக் கிடையாது! காங்கிரஸ் மீண்டும் தேர்தலுக்காக மக்களிடம் ஓட்டுக் கேட்க வருகிறது. 5 ஆண்டுகளாக நாங்கள் நல்ல காரியும் செய்தோம். ஆகவே எங்களுக்கு ஓட் கொடுங்கள் என்று அது கேட்கிறது. மற்ற கட்சிகளோ காங்கிரஸ் அரசாங்கத்தை சரியாக நடத்தவில்லை, நாங்கள் சிறந்த முறையில் நடத்துவோம். ஆகவே எங்களுக்கு ஓட்டு கொடுங்கள் என்று கேட்கின்றனர். இந்நிலையில் நாம் செய்யக்கூடியது என்ன? பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது மட்டும்தான் நம் கடமை. இதைச் செய்தால் நம் காரியம் தீர்ந்துவிட்டதென நினைக்கிறோம்.

இன்று ஜனவரி 26-ம் தேதி. குடியரசு தினம். உங்கள் ஊரில் இன்று ஏதாவது விசேஷம் நடந்ததா? என்ன நடந்தது? (கூட்டத்தில் ஒருவர் "கொடி ஏற்று விழா நடந்தது" என்று சொன்னார்.) வீட்டில் என்ன நடந்தது? "சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டீர்களா?" இல்லையென்று பதில் கிடைத்தது. "சாப்பிடுவதற்குச் சட்டம் ஒன்றுமில்லையா?" (இல்லை

யென்றே மீண்டும் பதில் கிடைத்தது.)

திட்டம் போட்டவர்களின் குறையே இது. இந்தக் குறையை தர்மக் காரியங்களைச் செய்வதற்காக ஏற்பட்டுள்ள மடம் போன்ற ஸ்தாபனங்கள் செய்வதில்லை. உற்சவ நாட்களில் மக்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன சாப்பிட வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். சாப்பாட்டையும் மதச் சடங்குகளுடன் இணைத்திருக்கிறார்கள். சிவராத்திரி, ராமநவமி, கிருஷ்ண ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி ஆகியவை இவைகளுக்கு ஒரு உதாரணம். இப்படி 4, 5 தார்மீகக் காரியங்களை நாம் நடத்தினால் மற்றவைகளை மடங்களும் கோவில்களும் கவனித்துக்கொள்ளுமென நாம் நினைக்கிறோம். இவ்வாறே அக்டோபர் 2-ம் தேதி, ஆகஸ்ட் 15, ஜனவரி 26-ம் தேதி ஆகிய நாலைந்து குறிப்பிட்ட நாட்களை அரசியல் முக்கியத்துவம் உடையதாக கொண்டாடுகிறோம். இதனால் அரசியல் சம்பந்தமான நம் கடமைகளை செய்து முடித்ததாக எண்ணுகிறோம். மற்றவைகளை கோவில்களுக்கும், மசூதிகளுக்கும் விட்டு விடுகிறோம். இத்தகைய திட்டத்தின் காரணமாக பாரதம் இன்று தன் வீரியத்தையும், ஆண்மையையும் இழந்து நிற்கிறது. தார்மீக, சமூகக் காரியங்களில் புதிய தபசுகளையும் காணோம். சிலருக்கு மட்டும் நல்ல சாப்பாடு கிடைக்கிறது. இன்னும் நல்லதாகக் கிடைக்கவில்லையே என்று அதிலும் சிலருக்கு அதிருப்தி. சிலருக்கு சாப்பாடே கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுக்கும் அதிருப்தி. இவ்வாறு அதிருப்தி, திருப்தி இரண்டும் சோற்றிலேயே இருக்கிறது. மற்ற விஷயங்களில் திருப்தியோ, அதிருப்தியோ காணப்படவில்லை. தேவ் வந்தார். மக்கள் அங்குமிங்கும் ஓடி சிறிது நிலம் கொடுத்தார்கள். பாபா வந்தார். அதைவிடச் சிறிது குறைவாக நிலம் கொடுத்து ஆட்டம் காட்டுகிறார்கள்! பாரத நாட்டில் அபிமானம் என்னவோ அதிகம் தான். ஆனால் அபிமானம் இருக்குமிடத்தில் அன்பு இருப்பதில்லை. அன்புள்ள இடத்தில் அபிமானம் இல்லை. தாய் அறுவறுப்பான தன் குழந்தைக்கு சேவை செய்கிறாள். இது அன்பின் விளைவு. அபிமானத்தால் அல்ல.

சிலர் என்னிடம் வந்து "நீங்கள் கோவிலைப்பற்றி எதுவோ சொல்லியிருக்கிறீர்களாமே" என்று கேட்கிறார்கள். தார்மீக சிரத்தை என்னைவிட அவர்களுக்கு அதிகம் போலும்! ஆசையிலேயே மூழ்கியிருப்போரும், இன்ப நுகர்ச்சியே லட்சியமாக உடையோரும், தர்மத்தைப்பற்றி எவ்வாறு சிரத்தை கொள்ள முடியுமென எனக்குத் தெரியவில்லை. ஆழ்வார்கள் 12 பேரும், நாயன்மார்கள் 63 பேரும் ஆக 75 பேர்களுடன் நம்முடைய தர்மம் முடிந்துவிடுகிறதுபோலும்! இதற்குமேல் கணக்கில் இல்லை. இத்தகைய கணக்கு வேறு தேசங்களில் காணப்படுவதில்லை. 12 பேர் 13 பேராகிவிட்டால் நமக்கு அவமானமாச்சே! ஆகவே 12, 13



ஆகமுடியாதல்லவா? சப்தலோகம் போல; 27 நட்சத்திரங்களைப்போல ஆழ்வார்களும் 12 பேருக்குமேல் ஆகக்கூடாதென்று நினைக்கிறோம். ஆனால் நானோ நாட்டிலுள்ள அத்தனை பேரும் ஆழ்வார்களாகவும், நாயன்மார்களாகவும் ஆகவேண்டுமென்று விரும்புகின்றேன். அப்போதுதான் நமது சமூகம் தர்மமயமான சமூகமாகும். எந்தச் சமூகம் ஆழ்வார்களின் வழியில் செல்லாது அவர்களுடைய பெயரில் மட்டும் பெருமை கொள்ளுமோ அதனால் என்ன பயன்? வங்காளத்திலிருந்து ஒருவர் இங்கே வந்து சைதன்யரின் பெருமையைப்பற்றி சொன்னால் என்ன நடக்கும்? எங்கள் ஊரில்தான் 12 ஆழ்வார்களும், 63 நாயன்மார்களும் இருக்கிறார்களே? ஆகவே உங்கள் சைதன்யருக்கு இங்கு வர அவசியமில்லையென்று கூறிவிடுவீர்கள். அவர் சொல்லும் அன்புப்பாதையில் முன்னேறாது ஆழ்வார்கள், நாயன்மார்களின் பெயரைச்சொல்லி சைதன்யரை விரட்டிவிடுவோம். பிறகு ஆழ்வார்கள், நாயன்மார்களின் வழியில்தான் நடங்களேன் என்றால் அவர்கள் பெரிய மனிதர்களாச்சே, நாம் சாதாரண மனிதர்களல்லவா? ஆகையால் அது நமக்குச் சாத்தியமில்லையென்று சொல்வீர்கள். ஆகவே நமக்கு அபிமானம் மட்டும் இருக்கிறதே தவிர அன்பில்லை. ஆனால் கடவுளோ அபிமானத்தைப் பற்றி கவலைப்படமாட்டார். அவர் கொடுத்த மனிதச் சட்டையில், மானிட உடலில் நீ என்ன காரியம் செய்திருக்கிறாய் என்றுதான் கேட்பார்.

ஆகவே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது இறைவனுடைய கணக்கில் வரவு வைக்கப்படமாட்டாது. அதில் அண்ணன் – தங்கை, அப்பா – அம்மா ஆகியவர்கள் செய்த நல்ல காரியங்கள் உங்கள் கணக்கில் சேராது. நீங்கள் என்ன நல்ல காரியங்களைச் செய்தீர்கள் என்றுதான் கேட்கப்படும். நீங்கள் எல்லாம் ஹிந்துக்களும் முஸல்மான்களும் அல்லவா? ஆகவே உங்கள் மதங்களின் தர்மப்படி என்ன செய்தீர்கள் என்று கேட்கப்படும். ஹிந்துவாயிருந்தால் இறந்த என் தகப்பனை ஹிந்து தர்மப்படி எரித்துவிட்டேன் என்பீர்கள். முஸ்லீமாக இருந்தால் இறந்த என் தங்கையை எங்கள் மதக் கோட்பாட்டின்படி புதைத்தேன் என்பீர்கள்! மறுபடியும் ஹிந்துவானவர் என் குழந்தைக்கு ஹரிதாஸ் என்று பெயர் வைத்தேன் என்று சொல்லுவார். முஸல்மானோ என் மகனுக்கு அப்துல்லா என்று பெயர் வைத்திருக்கிறேன் என்பார். ஹிந்துவோ வேதத்திலிருந்து மந்திரம் படித்தேன் என்பார். முஸ்லீமோ குரானிலிருந்து ஹாயத் படித்தேன் என்பார். ஆகவே இத்துடன் உங்களுடைய தர்மக் காரியம் முடிந்துவிட்டது. பிறகு வருடத்தில் 2, 3 நாட்கள் சிவராத்திரி, ஸ்ரீராமநாம நவமி போன்ற விசேஷங்கள். அரசியல் துறையிலோ பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புதல். இத்துடன் வாழ்க்கையின் கடமைகள் அனைத்தும் முடிந்துவிட்டதாக எண்ணம்.

இந்த நிலைமை பாரத நாட்டிற்கு முற்றிலும் பொருந்தாத ஒன்று. அனைவரும் சேர்ந்து வீரியமான காரியத்தைச் செய்வோம் என்று உபநிஷதம் கூறுகிறது. ஒருவருக்காக மற்றவர் செய்யலாமென்று அது கூறவில்லை. ஆகவே அவரவர்களுடைய கடமைகளை அவரவர்களே செய்தாக வேண்டுமென்பதே நமது மக்களின் கோட்பாடு.

## பத்திரிக்கைகளின் போக்கு

பூதானக் கமிட்டி சேவைக்காக ஏற்பட்டது. ஆனால் மக்களோ இயக்கத்தின் பொறுப்பனைத்தும் பூதானக் கமிட்டிக்கே என்று நினைத்தனர். ஆகவேதான் பூதானக் கமிட்டியையும் கலைத்தேன். ஒரு சகோதரர் என்னிடம் ஒரு கதை சொன்னார் ஆக்ராவில் நடைபெற்ற ஆசிரியர்களின் மகாநாடு ஒன்றில் அங்கு வந்திருந்த ஆசிரியர்களுக்கு பூதானமென்றால் என்னவென்றே தெரியாதாம். சுமார் 5 ஆண்டுகளாக இந்த இயக்கம் நடந்துவருகிறது. லட்சக்கணக்கான மக்கள் லட்சக்கணக்கான ஏக்கரா தானம் கொடுத்து தங்கள் தனியுடைமையை ஒழித்திருக்கின்றனர். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்கள் தங்கள் உடைமை அனைத்தையும் ஊருக்குப் பொதுவாக்கி கிராமராஜ்யப் பாதையில் முன் சென்றிருக்கின்றனர். நாடு முழுதும் ஒரு மாபெரும் புரட்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் இவர்களுக்கு இதைப்பற்றிய செய்தி ஒன்றுமே தெரியாதிருக்கிறது.

இதை என்னவென்பது? இதை நான் சவத்தின் லட்சணமென்று கூறுகிறேன். சவத்தின் உடலை ஒரு பக்கம் தொட்டால் அதற்கு மறு பக்கம் உணர்விருப்பதில்லை. இவ்வாறே நாட்டின் ஒரு பாகத்தில் நடக்கும் மகத்தான காரியங்கள் இவர்கள் செவிக்கு எட்டவில்லை. ஆனால் நாலைந்து கிராமங்களில் அங்குள்ள சீமான்கள் பலாத்கார வழியில் கிளர்ச்சி செய்து நிலச்சுவான்தார்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கிக்கொண்டால் அது ஒரு நொடியில் உலகம் முழுவதும் பரவிவிடும். உலகிலுள்ள பத்திரிகைகள் அனைத்தும் அச்செய்தியை கொட்டை எழுத்தில் விளம்பரப்படுத்தும். ஆனால் இன்றோ 2,000 கிராமங்கள் அன்பு முறையில் மாறிய செய்தி ஆக்ராவிலுள்ள ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை.

## உண்டு உறங்கும் தஞ்சை நிலச்சுவான்தார்கள்

ஆக்ரா மட்டும் என்ன? தஞ்சையிலும் இதே நிலையைத்தான் காண்கின்றேன். காவேரியின் கருணைப் பெருக்கால் கவலையின்றி உண்டு உடுத்து உறங்குகிறார்கள். அக்கம் பக்கத்தவர்களுக்கு நிலைமையைக் குறிப்பிட்டால் அது அவர்கள் போன ஜென்மத்தில் செய்த பாபத்தின் பலன் என்றும், அதை அவர்களே அனுபவித்துத் தீரவேண்டுமென்றும் கூறுகிறார்கள். ஆனால் போன ஜென்மத்தில் அவர்கள் பாபம் செய்திருக்க இந்த ஜென்மத்தில் நாம் அவர்களுக்கு உதவ மறுத்த பாவத்தை மறு ஜென்மத்தில் அனுபவிக்க வேண்டுமா?



இந்த கோர உறக்கத்திலிருந்து நம்மை தட்டியெழுப்பும் நாராயணன் மிகவும் சாமர்த்தியசாலி. கிராமம் கிராமமாகச் சென்று தட்டியெழுப்புவதே என் வேலை. நிலம் கேட்பதில் எனக்கு விருப்பமேயில்லை.

பாபாவை வரவேற்று பாலும் தயிரும் கொடுப்பதுபோல் அவருடைய திருப்திக்காக சிறிது நிலமும் கொடுக்கிறார்கள். ஆகவே இந்த வரவேற்புக் காரியம் மட்டும் போதாது. சமூகக் கட்டுக்கோப்பு முழுதுமே மாறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். சமூகத்தில் இன்று காணப்படும் துன்பமும், வறுமையும், கொடுமையும் மாறி கருணையையும், அன்பையும் ஏற்படுத்த விரும்புகின்றேன். இத்தகைய உணர்ச்சியை ஏற்படுத்தினால் மக்கள் தாமாகவே இக்காரியத்திற்கு வந்துவிடுவார்கள். நேற்று கல்லுப்பட்டியில் ஒரு கூட்டம் நடந்தது. திருமங்கலம் தாலூகாவில் 200 கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் அதற்கு வந்திருந்தனர். அவர்களுடைய தாலூகாவில் அதிகபட்ச கிராமங்களை கிராமதானமாக 3 மாதங்களில் பெற்றுக்கொடுப்போமென்று அங்குள்ளோர் சங்கற்பம் எடுத்துக்கொண்டனர். அங்கு நடப்பது இங்கு ஏன் நடப்பதில்லை? பாபா சொல்வது முற்றிலும் பொருத்தமானதே. ஆகவே அதை ஆதாரமாகக்கொண்டே செயலில் இறங்கினால் நிச்சயமாக வெற்றிபெற இயலும். ஒவ்வொரு கிராமமும் தன் காலிலேயே நிற்கவேண்டும்.



கிராமத்தின் தேவைக்கான உணவு முழுதும் கிராமத்திலேயே கிடைக்கவேண்டும். உடைக்கான பருத்தி அங்கு விளைந்து அது அங்கேயே துணியாக தயாரிக்கப்பட வேண்டும். மற்றும் கிராமத்திற்குத் தேவையான பொருள்கள் அனைத்தும் அங்கேயே கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அங்கு ஏற்படும் பிரச்சனைகளை அங்குள்ளோரே தீர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய நிலைமை கிராமங்களில் ஏற்பட்டால்தான் வெளியிலிருந்து வரக்கூடிய ஆபத்தைத் தடுக்க முடியும். பழங்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தோ மெதுவாக வந்து சேரும்.

## ஒவ்வொரு கிராமமும் பலமான கோட்டையாக வேண்டும்

இப்பொழுதோ வெகு விரைவில் கண் இமைக்கும் நேரத்தில் காரியம் முடிந்துவிடுகிறது. இன்றும்கூட எகிப்து, காஷ்மீர், கொரியா, கோவா, இந்தோ-சைனா, ஹங்கேரி ஆகிய பிரதேசங்கள் புகைந்து கொண்டிருக்கின்றன. அங்கு எப்பொழுது என்ன நடக்குமென்று சொல்லமுடியாது. அங்கு ஏதாவது கொந்தளிப்பு ஏற்பட்டால் அதுவே உலகம் முழுவதும் பரவும். திடீரென்று விலைவாசி ஏறும். ஆகவே இதிலிருந்து கிராமங்கள் தப்பவேண்டுமானால் ஒவ்வொரு கிராமமும் ஒரு பலமான கோட்டையாக வேண்டும். இதைப் புரிந்துகொண்டால் நமக்கு அறம், பொருள், இன்பம் மூன்றுமே கிட்டும்.

திருக்குறளில் திருவள்ளுவர் அறத்துக்கே முதலிடம் கொடுத்திருக்கிறார். இதன் பொருள் என்ன? அறத்தை நிலைநாட்டினால் இன்பமும், மோக்ஷமும்தானே கிட்டுமென்பதே. இம்முறையில் நீங்கள் சிந்தியுங்கள். இது சங்கராவ்தேவ் காரியமோ விநோபாஜியின் காரியமோ அல்ல. இது உங்கள் வாழ்வையும், உங்கள் பலத்தையும் பற்றிய காரியம். எங்களுக்கோ 62 வயது ஆகிவிட்டது. எனக்குரிய கடமையை நாங்கள் செய்தே வருகிறோம். ஆகவே எனக்குரிய மோக்ஷம் கிடைக்கவே செய்யும். ஆனால் நாங்கள் விரும்புவது எங்களுக்குரிய மோக்ஷம் மட்டும் அல்ல, எங்களுக்குக் கிடைக்கும் மோக்ஷத்தை அனைவருக்கும் பிரித்துக் கொடுத்து அனைவருக்கும் மோக்ஷம் கிடைக்கவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். ஆகவே நாம் அனைவரும் நமக்கேற்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவோமாக.

(வலங்கைமான்—26-1-57)

★

(300-ம் பக்கத் தொடர்ச்சி)

## கல்வியை பண—அரசாங்கத்திலிருந்தும் விடுவிக்க வேண்டும்

சொந்த அறிவையும் கொண்டே செய்யவேண்டும். பாபா எந்த விஷயத்தை இதுவரை உங்களுக்குச் சொன்னாரோ அதே விஷயத்தையே கிராமதானத்தின் மூலம் செய்து வருகிறார். கிராம மக்கள் விரும்பும் கல்வியும், அவர்கள் விரும்பும் தொழிலும், அவர்கள் விரும்பும் முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட வேண்டும். இவ்வாறே நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் சுதந்திர ஜனசக்தி உருவாகவேண்டும். இங்கு நடக்கும் இம் மாபெரும் மாறுதலைக் காண வெளிநாட்டிலிருந்தும், அன்பர்கள் பலர் அடிக்கடி வந்து செல்கிறார்கள். உலக சரித்திரத்தில் நிலமில்லாத மக்களுக்கு நில விநியோகம் நடத்தி இருப்பது கொலையின் மூலமும், சட்டத்தின் மூலமுமே ஆகும். ஆனால் இப்போதோ அதே காரியம் சட்டத்தின் உதவியின்றி, ரத்தப் புரட்சியின்றி மக்களின் மனமாறுதலால் அன்பு முறையில் நடந்து வருகிறது.

சுதந்திர ஜனசக்தியின் ஒரு அங்கம் கல்வியைப்பற்றியது. அதைப் பற்றி ஏற்கனவே விஸ்தாரமாகச் சொல்லி விட்டேன். அதே காரியத்தைத்தான் நாடு முழுதும் பரவலாகச்செய்வதற்கு கிராம தானத்தின் மூலம் செய்வதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது. கும்பகோண நகர மக்கள் இன் நன்முயற்சிக்குத் தங்கள் பங்கைச் செலுத்தி பணி புரிய வேண்டுகிறேன்.

★

# திராவிட நாட்டின் விசேஷ பக்தி

## கல்லணையில் விநோபாஜியின் பிரசங்கம்

*தஞ்சை ஜில்லாவில் 20-1-57-ல் கல்லணையில் விநோபாஜி பிரவேசித்தார். அங்கு கிராம மக்கள் ஆயிரக்கணக்காக நாள் முழுவதும் வந்து போய்க் கொண்டு விநோபாஜியை தர்சனம் செய்தார்கள். அவர்கள் காட்டிய அன்பும் உற்சாகமும் விநோபாஜியைப் பூரிக்கச் செய்தது. அன்று மாலை பிரசங்கத்தில் திராவிட நாட்டின் விசேஷ பத்தியைப்பற்றி விநோபாஜி குறிப்பிட்டார். கல்லணைப் பேச்சின் சுருக்கம் முந்திய இதழில் வெளிவந்தது. முழு விபரமும் இங்கு தரப்படுகிறது.*

இன்றைக்கு நான் தங்கிய பங்களாவில் ஆயிரக்கணக்கான மக்கள் வந்த வண்ணமிருந்தனர். சகோதரர்கள், சகோதரிகள், வாலிபர்கள், கிழவர்கள், குழந்தைகள் ஆகிய பலரும் வந்தார்கள். வந்தவர்களுடைய முகத்தில் மிக்க நம்பிக்கையும், அன்பையும் கண்டேன். தமிழ் நாட்டில் நான் செல்லும் இடங்களில் எல்லாம் இத்தகைய அன்பையே கண்டு வருகிறேன். இப்போது எட்டு மாத காலமாக தமிழ் நாட்டில் என் யாத்திரை நடைபெறுகிறது. ஆனால் இன்று இங்கு நான் கண்ட காட்சி குறிப்பிடத்தக்கது. அன்பும், உற்சாகமும் இங்கு முற்றிலும் அலைமோதிக் கொண்டிருந்தன. கூட்டத்தை சமாளிப்பதற்கான ஏற்பாடு சிறிதும் இல்லை என்பதையும் கண்டேன். ஒன்று பெரிய குணமாகும், மற்றொரு சிறிய குறை. ஏற்பாடு செய்யும் சக்தியில்லாதது பாரத நாடு முழுவதும் ஒரு பெரும் குறையே. இதில் ஓரளவு தீமையும், நஷ்டமும் இருந்தாலும் இது குறிப்பிடத்தக்க மிகப் பெரிய குறையல்ல. இது உள்ளத்தின் குறையல்ல.

### இங்கு தருமம் விழித்துக்கொள்ளும்

மக்களின் முகத்தில் இன்று நான் கண்ட உற்சாகத்தினால் காவிரிக் கரையில் தருமம் விழித்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது. உலகில் தருமம் குன்றிவிட்டபோதிலும் காவிரி நதிக்கரையிலும், தாமிரபரணி நதிக்கரையிலும் தருமம் நிலைத்திருக்குமென்று பாகவதம் கூறுகிறது. குறுகிய எண்ணத்தால் இதை எழுதியிருக்க முடியாது. தற்காலத்தில் தேசாபிமானமே தங்கள் நாட்டையும், பிரதேசத்தையும் பற்றி இப்படி வாயாரப் புகழ்வார்கள். பாரத நாடு உலகம் முழுவதிலும் சிறந்தது என்பார்கள். பிற நாட்டினரும் அவ்வாறே கூறுவார்கள். இப்படிச்சொல்வது வேறு ஒரு முறை. உலகிலேயே தருமம் மறைந்தபோதிலும், திராவிட நாட்டில் அந்த தருமம் நிலைத்திருக்குமென்றால் அது குறுகிய அபிமானத்தால் அல்ல. ஏனெனில் பாகவத கர்த்தா அகங்காரியல்ல. மிகுந்த பக்தர். அவருக்கு அகங்காரம் எந்த அளவுக்கு இல்லையென்றால் அதை எழுதியவர் யார் என்றுகூட இன்றைக்குத் தெரியாது. அப்பேர்ப்பட்டவர் திராவிட நாட்டில் பக்தி நிலைத்திருக்குமென்றால் அதை நாம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆகையால்தான் நான் தமிழ் நாட்டில் மிகவும் பணிவுடன் நுழைந்தேன். பல விஷயங்களை கற்றுக்கொள்ள விரும்பினேன்.

### சரிநிகர் சமான வாழ்வின் தோற்றம்

ஒரு விஷயம் இப்பேர்ப்பட்ட கூட்டத்தை உத்திரபிரதேசத்திலோ, பீஹார், ராஜஸ்தானத்திலோ நான் காணவில்லை, லட்சக்கணக்கான மக்

கள் கூடியிருந்தது உண்டு. ஆனால் இங்கு ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானமாக கிடைத்த இடத்தில் அமர்ந்திருப்பது போன்று நான் வேறெங்கும் பார்க்கவில்லை. "சரிநிகர் சமானமாக வாழும் இந்த நாட்டிலே" என்று பாரதியார் பாடியிருக்கிறார். இதுவும் பக்தியின் ஒரு லட்சணமே. உள்ளத்தில் பக்தி இருக்கும்போது ஆண், பெண் வித்யாசம் அழிந்துவிடுகிறது. பாகவதத்தில் "அங்குனா மங்கனா" என்று ஆண்டவன் பல உருவங்களிலும் காணப்படுகிறான். கிருஷ்ண பரமாத்மா வசித்துவந்த வ்ரஜபூமி என்ற இடத்தில் ஒவ்வொரு பெண்ணுக்குப் பக்கத்திலும் இறைவன் காணப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால் இன்று இத்தகைய நிலைமையில்லை. எந்த மாகாணத்தில் இந்த நிலைமை இருக்கிறதோ அங்கு எஜமானன் தொழிலாளி என்ற வேற்றுமை இருக்கமுடியுமா? வடக்கில் 25 வருட போராட்டம் ஏற்பட்டபிறகே இந்த நிலைமை ஏற்பட முடியும். ஆனால் காவிரி நதி தீரம் இத்தகைய வித்தியாசத்தை நிலைத்து வைத்திருக்காது. அத்தகைய காட்சியை இன்று நான் இக்கூட்டத்தில் என்னை தரிசிக்க வந்தோரின் முகத்தில் பார்க்கிறேன்.

## அர்ஜுனன் கிருஷ்ணன் தோழமை

எனக்கு இதன் பெருமைக்கான யோக்கியதை இல்லை. எஜமானன் தொழிலாளி என்ற வேற்றுமை மறையும் வரையில் இந்த இயக்கம் நடக்க வேண்டியதே. மக்களிடையே 'சக்ய பாவம்' அல்லது தோழமையை ஏற்படுத்தவே நான் விரும்புகிறேன். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாவனை இல்லை. அண்ணன் தம்பிகளுக்கு இடையிலும் இத்தகைய பாவனையைக் காண முடியாது. அண்ணன் தம்பி என்பதிலும் வேற்றுமை இருக்கவே செய்யும். ஆனால் எல்லோரும் சகோதரர்களாக வாழவேண்டும் என்பதே என் கருத்து. தோழமையில் இத்தகைய பேதமில்லை. அர்ச்சுனனும், கிருஷ்ணனும் தோழர்களே. கிருஷ்ணனை விட அர்ச்சுனன் 19 வயது குறைந்தவனாக இருந்தான். அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் வேலை வாங்கினான். அர்ச்சுனனுக்கு தேர் சாரதியாய் இருந்தான். அவனுடைய குதிரையைத் தேய்த்துக் கொள் வைத்தான். அர்ச்சுனனுக்கான குற்றேவல்கள் பலவும் கிருஷ்ணன் மேற்கொண்டான். இருவருக்குமிடையிலிருந்த வித்தியாசத்தைக் யோசியுங்கள். கிருஷ்ணனே அறிவிற் சிறந்த ஞானி. அர்ஜுனனோ மகா மூர்க்கன். ஆயினும் சிநேகபாவத்தில் வேற்றுமை இல்லை. இந்தத் தோழமை பாவத்தில் உள்ள சிறப்பு வேறெதிலும் இல்லை. ஆகவே பாரதநாட்டில் இந்த சக்யபாவம் விழிப்புற வேண்டும்.

வேதத்தில் இந்தத் தோழமையை அதிகமாகக் காண்கிறேன். ஏ, அக்னியே! சகோதரனே! ஏ ஆண்டவனே, என் சகோதரனே! என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஜீவ, பரமாத்மாக்களை சரிநிகர் சமானமான சகோதரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த நாட்டில் ஆண்டவனைத் தோழனென்று உறவு பாராட்டுகிறார்களோ அந்த நாட்டில் எஜமானன் தொழிலாளி வேற்றுமை நிலைக்க முடியுமா? மேலை நாடுகளில் இறைவனை தாய் தந்தையர்களாகவே பாவித்து பக்தி செய்கிறார்கள். எந்த நாட்டு பக்தர்கள் ஆண்டவனுக்கும் பக்தனுக்கும்கூட வித்யாசம் தெரியாத நிலையில் அளவளாவி உறவு கொண்டாடுகிறார்களோ அவர்கள் முதலாளி, தொழிலாளி வேற்றுமை கொண்டாடுவார்களா? இத்தகைய சிரத்தையுடனேயே நான் தமிழ்நாட்டில் நுழைந்தேன். தமிழ்நாட்டில் இத்தகைய தோழமை ஏற்படும்வரை நாம் ஓய்ந்திருக்கக் கூடாது. இன்று இங்கு வந்தவர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் வந்தார்கள்.



நம் சகோதரர்களில் சிலர் பிரச்னையைத் தீர்ப்பதில் பகை வந்தால் வரட்டுமென்கிறார்கள். ஆனால் யாரும் அன்பு வேண்டாமென்பதில்லை. அன்பின் மூலம் பிரச்னை தீருவதானால் அவர்களும் இணங்கவே செய்வார்கள். தஞ்சையில் எல்லா நிலமுள்ளவர்களும் என் பக்கம் சேருவார்களென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. சட்டத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள பயத்தினாலேயே மிராசுதார்களின் சங்கம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் உள்ளத்திலும் "சக்யபாவம்" (தோழமையுணர்வு) இல்லாததை நான் காணவில்லை.

## மிராசுதார்களுக்கு என் அழைப்பு

ஒருவர் பிடுங்கிக் கொள்வேன் என்கிறார். மற்றவரோ கொடுக்க மாட்டேன், போ என்கிறார். இது உயிரிருப்பதின் லட்சணமாகும். இதிலும் தேஜஸ் காணப்படுகிறது. ஒரு சூரியன் கிழக்கிலும் மற்றொன்று மேற்கிலும் தோன்றினால் நாம் அழிவோம். சந்திரன் 50 தோன்றினாலும் கவலை இல்லை. ஆனால் சூரியன் இரண்டாக இருந்தால்தான் ஆபத்து. இந்நிலைமையில் தேஜஸ் இருந்தாலும் லாபகரமில்லை. பிராமணர், பிராமணரல்லாதவர்; ஹரிஜன், ஜாதி ஹிந்துக்கள், ஆசிரியர், மாணவர்; தொழிலாளர், முதலாளி, கிராமத்தினர், நகரத்தினர், இந்து, முஸ்லிம் இம்மாதிரி சண்டைகள் இருப்பதால் தேஜஸ் இருக்கும். ஆனால் அமைதி இருக்காது. தேஜஸ் நமக்குத் தேவையே. ஆனால் அது நெருப்பாக இராமல் குளிர்ச்சியாக இருக்க வேண்டும். அமைதியான தேஜஸ் வேண்டும். ஆகையால் மிராஸ்தார்களும் நம் பக்கம் வரவேண்டும்.

## அறிவும் உழைப்பும் இணையவேண்டும்

எந்தத் தகப்பன் தன் சொத்தைத் தன் குழந்தையினுடையது என்று கூறுகிறானோ அவனே உண்மையான தந்தை. மிராசுதார், தொழிலாளி, தகப்பன், பிள்ளை ஒன்றானால் அறிவும் உழைப்பும் இணைந்து பலமுண்டாகும். இதை யார் செய்வது? நாம்தான். ஆகவே மிராசுதார்கள் சர்வோதய குடும்பத்தின் அங்கத்தினர்களாக வேண்டும். இதை விட்டுத் தனித்து நின்றால் பலமின்மையும் அழிவுமே. பிள்ளை இறந்தால் தகப்பனும் இறந்தவனே. பிள்ளை இறந்த பின்னர் அவனைத் தந்தையென அழைப்பவர் யார்? மிராசுதார் என்னும் சொல்லுக்குப் பாதுகாவலன் என்பதே அடிப்படையான பொருள், காப்பாற்றுகிறவர் எப்படிப் பிரிந்திருக்க முடியும்? பிள்ளைப் பிரிந்திருக்க விரும்பினாலும் தகப்பன் விடான். சொத்தில் பிள்ளை உரிமை கோரினால் "உன்னுடையது தானே! எடுத்துக்கொள்" என்பான். இப்படி இருந்தால் தான் ஜயிக்க முடியும்.

## மதுரை காட்டும் வழி

சர்வோதயமோ இருபாலாருக்கும் நன்மை இருக்கும் வழியைக் காட்டுகிறது. கிராமத்தில் அத்தனைபேரும்—முதலாளி தொழிலாளி—அனைவரும் இணைந்து வேலை செய்ததால் மதுரையில் 127க்கு மேலும் அதிகமாக இன்று வரை கிராமதானம் கிடைத்துள்ளது. மதுரையோ நஞ்சை நிலம் மிகுந்த ஊரல்ல. ஆனால் தஞ்சை ஜில்லா நஞ்சை நிலங்கள் மிகுந்த இடம். அங்கும்கூட கிராமதான கிராமங்களில் நஞ்சை நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. குடும்பத்திற்குத் தேவையான நிலம் கிடைத்தால் ஒவ்வொருவரின் மதிப்பும் உயரும், கிராமத்தின் 2000

எக்கரும் என்னுடையதல்ல. நம்முடையது என்ற எண்ணம் வேண்டும். நான் என்று கூறுகிறவனைவிட நாங்கள் என்று கூறுகிறவன் பெரியவனே. ஆகவே "நானை" விட்டு "நாம்" ஆவோம்.

## மாணிக்கவாசகரின் உபதேசம்

"நான் எனதென்றுரை மாய்த்து"—என மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். ஆனால் இதை எப்படி மாய்ப்பது? "நான்" என்பதை மாய்ப்பது சந்நியாசமல்ல. சந்நியாசியின் கோவணத்தால் 'நான், எனது' என்பது போகாது. 'எனது' என்பதை விடுத்து 'நமது' என்னும் நிலை ஏற்படும்போதுதான் இந்த 'நான்' போகும். இந்த சிசுப்புக் குழந்தை என்னுடையது என்பதற்குப் பதிலாக இந்த கருப்புக் குழந்தைகள் நம்முடையவை என்ற நிலை ஏற்பட வேண்டும். சிறிய குடும்பத்தில் எத்தகைய சிறப்பும் இல்லை. பெரிய குடும்பத்தில்தான் சிறப்பு. ஆகவே கிராம முழுவதும் ஒரே பெரிய குடும்பமாகும் போதுதான் கிராமத்திற்குச் சிறப்பு.

## கிராமதானத்தின் இரண்டு உரைகல்

கிராமதானம் ஏற்பட்டால் மக்களின் அச்சம் நீங்கும், சண்டை இராது. வக்கீலுக்காக கொடுக்கும் பணம் மீதமாகும். இதனால் வக்கீலுக்கு நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடாது. அவர் கிராமத்தினருடன் சேர்ந்து விவசாயம் செய்ய முன்வந்தால் அவருக்கும் நிலம் கிடைக்கும். பாரத நாட்டு வக்கீல்கள் அனைவரும் விவசாயம் செய்வதற்காக நிலம் கோரும் நாளே நல்ல நாள். அன்றுதான் பாபாவின் இந்த இயக்கம் வெற்றி அடைந்ததாக ஆகும்.

பாபாவுக்கு நிறைய நிலம் கிடைத்திருக்கிறது. ஆனால் பாபா இதையெல்லாம் மதிப்பதில்லை. ஆனால் எத்தனை வக்கீல்களின் தொழில் போயிற்று என்பதே பாபாவுக்கு இந்த இயக்கத்தின் வெற்றிக்கான உரைகல் ஆகும்.

அதன் மற்றொரு உரைகல் அமெரிக்கா, ரஷ்யாக்காரர்கள் தங்கள் வெடி குண்டுகளனைத்தையும் சமுத்திரத்தில் எறிவதாகும். இதன் மூலம் உலக சமாதானமும் அனைவருக்கும் நல்வாழ்வும் கிட்டும்போது தான் இந்த இயக்கம் வெற்றிபெற்றதாகும். ஜபம், தபம் இரண்டும் இணைய வேண்டும். நம்முடையது அல்ல அனைவரினுடையது என்ற கருத்து எங்கும் எடுத்துச் சொல்லப்பட்டது. இது பிடித்திருந்தது. மக்கள் ஏற்றார்கள்; அமல் நடத்தினர். இது ஜன சக்தியின் காரியம். ஆகவே அரசாங்கத்தைப்பற்றி சொல்லவில்லை. அரசாங்கம் மாறும். ஆனால் ஊழியர்களோ உங்களுடையவர்கள். இதற்குப் பின்னர் கிராமதான வேலை அரசாங்க காரியமாகும். உங்களுக்கு வேலை இராது. சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் பிறகு தேவையிராது. அதற்கு மாறாக கல்விக்காக ஏற்பாடு நடக்கும். கிராமம் முழுவதும் கிராமதானமாகக் கிடைக்கும். முன்னேற்றத் திட்டம் அனைத்தும் என்னிடம் கொடுங்கள். இன்றோ போலீஸ் பயமிருக்கிறது. கிராமதானத்திற்குப் பிறகு முதன் மந்திரியும்கூட உங்கள் சேவகர் என்ற மனப்பான்மை ஏற்படும் தஞ்சாவூரில் இங்கு சிறிதும் அங்கு சிறிதுமாக நிலமில்லை. ஆகவே 25 செ. 50 செ. 2 ஏ. என்பதற்குப் பதிலாக 2, 4, 6, 8. 10, 50 என்னும் கணக்கில் கிராமதானம் கொடுங்கள். உங்கள் நாவிலிருந்து இந்த வார்த்தை வரவேண்டும். பாரத நாட்டில் இந்தக் காரியம் நடக்க வேண்டும். சுயராஜ்யம் என்பது என்ன? லண்டனுக்குப் பதில் டில்லி, சென்னையின் ஆட்சி என்பதல்ல. மக்களின் பெயரில் அனுப்பிய பார்சல் டில்லி சென்னையிலிருந்து என்ன பயன்? இங்கு கிராமத்தினருக்கல்லவா கிடைக்க வேண்டும்.

# காலத்திற்கேற்ப பக்திவழிபாடு

## மாணிக்கவாசகர் க்ஷேத்திரத்தில்

### வினோபாஜி அருள்வாக்கு (12–2–57)

*சென்ற மூன்று மாதமாக வினோபாஜி மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் மூழ்கி அனுபவித்து வருகிறார். மாணிக்கவாசகர் பிறந்த ஸ்தலமாகிய திருவாதவூரில் மூன்றில் ஒரு பாகம் கிராமதானமாகக் கிடைத்தது. பலஹீனமான உடலுடன் அன்று 9 மைல் நடந்து சென்றார் வினோபாஜி. அன்று மகாத்மாவின் அஸ்தி கரைத்த புனித தினம். மாலைக் கூட்டம் கோவில் உட்பிரகாரத்தில் நடந்தது. பக்தியைக் கருணை வடிவமாக உபாசிக்கும் வினோபாஜியின் அன்றைய பேச்சு. தமிழ் நாட்டிற்கே கொடுத்த அருள்வாக்காகும்.*

---

நேற்று உடல்நிலை சிறிது அசௌகர்யமாயிருந்தது. இன்றும்கூட அப்படியே. ஆகவே இங்கேவர முடியுமோ, முடியாதோ என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் ஆண்டவன் கிருபை இருந்தால் முடவனுக்கும் மலையைத் தாண்டும் கிருபை கிடைக்கிறது. ஆண்டவன் அருள் இருந்தது. ஆகவே இங்கே வர முடிந்தது. உயர்ந்த இடம் தாழ்ந்த இடமென்று நான் எதையும் கருதுவதில்லை. அப்படியிருந்தும் சில குறிப்பிட்ட இடங்களில் பக்தர்களின் தவத்தின் காரணமாக உயர்ந்த சூழ்நிலை ஏற்படுகிறது. மக்களின் நல்லெண்ணமும் அத்துடன் இணைந்திருக்கிறது.

## பக்தர்களின் குணங்களை நாம் ஆசரிக்க வேண்டும்

இன்று நான் இங்கு வந்தபோது மாணிக்கவாசகரின் பாக்களால் என்னை வரவேற்றனர். அவர் ஆயிரம் வருடம் ஆனவர். ஆயினும் மக்களின் உள்ளத்தில் அவரிடம் மங்காத அன்பு உள்ளது. ஏனெனில் அவர் தன் உடல்பற்றை விட்டுவிட்டார். இந்த உடல் வாழ்வு இழிந்ததென அவர் அறிந்திருந்தார். ஆகவேதான் அனைவரின் அன்பும் அவருக் கிடைத்தது. தன்னிடம் மட்டும் அன்புள்ளவன். மற்றவர்களின் அன்பைக் கவர்வதில்லை. மிருகங்களுக்குக் கூட தன்னிடம் அன்பு இருக்கிறது. எப்படி பண்டிதனுக்கு உடற்பற்று இருக்கிறதோ அதுபோலவே இடையனுக்கும் அவனுடைய ஆட்டுக்கும் இருக்கிறது. ஆகவே இதில் விசேஷம் எதுவுமில்லை. ஆனால் எந்த மனிதன் உடலுக்கு வெளியில் உலகம் முழுவதும் அன்பு செலுத்துகிறானோ அவனே குறிப்பிடத்தக்கவன். அதற்காக அவர்களின் புகழைப் பாடினால் போதுமா? போதாது அவர்களின் குணங்களை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். அவர் பெரிய மனிதர்; ஆகையால்தான் அவர் அவ்வாறு வாழ்ந்தார். என்று கருதக்கூடாது. இங்கே பாமரர் மகாத்மாக்கள் என்று எவருமில்லை. நாமனைவரும் கடவுளின் குழந்தைகள். நம்மனைவரின் உள்ளத்திலும் ஜோதியுள்ளது. ஆகவேதான் மாணிக்கவாசகர் "ஜோதியே", சுடரே—சுடரொளி விளக்கே" என்று பாடியிருக்கிறார்.

இன்று கோவிலில் ஜோதி தரிசனம் பார்த்தேன். ஆனால் இதைவிட இன்னும் நல்ல தரிசனம் இரவில் கிடைக்கிறது. உள்ளத்தில் காணும் ஜோதி தரிசனத்தைவிட அதிகம் பெறும் கோவில் ஜோதிக்கு நான் கொடுப்பதில்லை. அனைத்திலும் சிறந்தது ஆன்ம ஜோதியே. மாணிக்கவாசகர் போன்ற பக்தர்கள் அந்த உள்ளொளியையே உபாசித்தார்கள். ஆகையால் தான் அவர் தன் மந்திரி பதவியை விட்டு

கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்குத் தொண்டு செய்தார். நானும் அதற்காகவே ஊர் சுற்றுகிறேன்.

## காலத்திற்கேற்ப உபாசனை மாறவேண்டும்

காலத்திற்கேற்ப உபாசனை முறையும் மாறுகிறது. இனிமேல் இத்தகைய கோவில்கள் கட்டுவதில் மக்களுக்கு சிரத்தையிராது. அவ்வாறு எனில் பக்தி குறையுமா என்றால் அதுவும் குறையாது. ஆனால் பக்தியின் உருவம் மட்டும் சிறிது மாறும். அதைக்கூட மாணிக்கவாசகர் காட்டியிருக்கிறார். அத்தகைய மாறுபட்ட உருவை எங்கும் பார்க்கும் சக்தி நமக்கு ஏற்பட வேண்டும். இதைக் குறித்தே "வானாகி, மண்ணாகி, வெளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி........" என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார்.

இதைப்பற்றி ராமசாமி நாயக்கரிடம் குறிப்பிட்டேன். ஒரே ஈஸ்வரனை ஒப்புக்கொள்வதாக அவர் கூறியதால் நான் மாணிக்கவாசகரின் இந்தக் கருத்தை கூறினேன். "மாணிக்கவாசகர் ஒரு ஈஸ்வரனை ஒப்புக்கொண்டிருக்கலாம். ஆனால் இதர தேவதைகளையும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார் அல்லவா, ஆகவே அவரையும் நான் ஏற்கமாட்டேன்" என்று அவர் கூறினார். நூற்றுக்கணக்கான கடவுள்கள் இருப்பது அவருக்கு விளங்கவில்லையாம்! எங்கும் நிறைந்துள்ள இறைவன் சிலையில்மட்டும் ஏன் இருக்க முடியாது என எனக்கு விளங்கவில்லை. ஆகவே உலகில் உள்ள இறைவன் சிலையிலும், சிலையில் உள்ள இறைவன் உலகிலும் இருக்கிறார் என்பதே நாமறியும் உண்மை.

ஆண்டவன் சிலையிலும் விளக்கிலும் மட்டுமே இருக்கிறார் என்று கூறுவோர் சிலர் இருப்பதால்தான் அதற்கு நேர் மாறானவர்கள் தோன்றுகிறார்கள். ஒரு சாராரோ இந்தச் சிலைகளிலும் அந்தக் கோயில்களிலும் மட்டுமே ஆண்டவன் இருப்பதாகக் கூறுகின்றனர், மற்றொரு சாராரோ கோவில்களிலும் சிலைகளிலும் கடவுள் இருப்பதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. இவை இரண்டுமே தவறாகும். இனி இவ்வாறு இருக்க முடியாது, இதுவே மாதா கோவில், மசூதிகளின் நிலைமையும் ஆகும். எனக்கென்னவோ இதனால் நாஸ்திகம் ஏற்படுவதாகத் தோன்றவில்லை.

## நிலதானமே பக்தி வழிபாடு

ஆறு லக்ஷம் பேர் ஐம்பது லக்ஷம் ஏக்கர் நிலத்தைக் கொடுத்தது பக்தி இல்லாமல் வேறு எதுவாக இருக்கமுடியும்? பழங்காலத்தில் கோவில்களுக்கு நிலம் கொடுத்தது பக்தியாகக் கருதப்பட்டது. பழனியில் இவ்வாறு கொடுத்த ஒரு மில்காரரின் தானம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் ஆறு லக்ஷம் பேர் கொடுத்த தானம் பக்தியில் அடங்குமா; அடங்காதா?

மதுரையில் தனியுடைமையை விட்டு விட்டு கிராமம் கிராமமாகப் பொதுவுடைமை ஏற்பட்டு வருகிறது. "ஜாதி குல பிறப்பென்னும் அனைத்தும் பட்டு" என்று மாணிக்கவாசகர் பாடியிருக்கிறார். இங்கு 'நான்' 'எனது' என்பது விடப்படுகிறது அல்லவா? "என்னுடையது' என்பதை விடுவது பக்தி அல்லவா? ஆகவே இதுவும் பக்தியின் ஒரு உருவமே ஆகும். சிலையைக் கும்பிடுவோரில் சிலரின் கல் நெஞ்சத்தையும் கொடுமையையும் காணும்போது கல்லை பூஜை செய்து இவர்களின் மனமும் கல்லாகிவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. விக்கிரஹ ஆராதனை தவறு என்று நான் கூற வரவில்லை, அதுவும் உபாசனையே ஆகும். ஆனால் அந்த சிலை பூஜையின் மூலம் நம் உள்ளத்தில் கருணை நிறைந்து அனைத்தும் ஆண்டவன் உருவென்ற பாவனை ஏற்படுவதே பக்தி ஆகும். மணிவாசகர் 'என் அன்பே' என்று இறைவனை அழைக்கிறார். இந்த அன்பு என்பது என்ன? அன்பே பக்தியும் கடவுளுமாகும். 'உள்ளமே கோவில்' என்கிறார். ஆகவே சொற்களில் குறை இல்லை. கோவிலுக்குப் போகிறவர் மட்டுமே பக்தர் என்ற கருத்து தவறானது என்று இதன்மூலம் தெரிகிறது.



இது பரிசோதனைச் சாலையில் நடைபெறும் பரிசோதனையே ஆகும். ஒரு பரிசோதனைச்சாலையில் சிறிய அளவிலேயே பரிசோதனை நடக்கும். பிறகு சமூக முழுவதும் அது பரவும். ஆகவே கோவில்களில் நடைபெற்ற இந்தப் பரிசோதனை பெரும் அளவில் நாடு முழுதும் பரவவே ஏற்பட்டது; இது உலக முழுதும் பாவவேண்டும்.

## கருணையே இக்காலத்தின் பக்தி வழியாகும்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு முதன்முதல் சமாதி கிடைத்த இடத்திற்குச் சென்றிருந்தேன். நான் சிறு வயது முதலே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் மாணிக்கவாசகரைப்பற்றி யாத்திரையின்போது 3 மாதங்கள் தொடர்ந்து படித்தேன். இராமகிருஷ்ணருக்கு எந்த தனிப்பட்ட சமாதி கிடைத்ததோ அது சமூக முழுதும் கிடைக்கவேண்டும்.

காற்று, நீர், சூரிய ஒளி முதலியன அனைவருக்கும் பொதுவாகும். அப்படி இருந்தும் சமாதி, பக்தி, அஹிம்சை முதலியன அனைவருக்கும் ஏற்படாது. நாட்டிற்கு ஒருவரே பிரதமராக முடியும். ஆனால் "ஸ்திதப்பிரக்ஞர்" (நிலைமதியுடையோர்) ஆவது அனைவராலும் இயலும். ஆத்ம வித்தைக்குரிய அழகு அதை ஒவ்வொருவரும் அடைய முடியும் என்பதே. இன்று மச்சாவதாரமும், கூர்மாவதாரமும், வராகாவதாரமும் வணங்கப்படுவதில்லை. இவை ஒரே கடவுளின் (விஷ்ணுவின்) அவதாரங்களாயினும் இராமாவதாரத்தையும், கிருஷ்ணாவதாரத்தையும் தவிர இதர அவதாரங்கள் இன்று வணங்கப்படவில்லை. ஆனால் இவற்றை வணங்கிய காலமும் ஒன்று இருந்ததென்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் காலத்திற்கேற்ப மக்கள் தங்கள் உபாசனை முறையை மாற்றிக்கொள்கிறார்கள் என்பதே இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் பாடம். இன்னும் சில ஆண்டுகள் கழித்து இராமனையும் கிருஷ்ணனையும் வழிபடுவதை மக்கள் விட்டுவிட்டால் நாம் ஆச்சர்யப்படுவதற்கில்லை. புத்த அவதாரம் கருணையின் அவதாரமாகும். இன்று பாரதத்தில் நடைபெறும் அத்தனை காரியங்களும் கருணை அவதாரமான புத்தாவதாரத்தின் பலனே ஆகும். மக்கள் மற்ற அவதாரங்களை மறந்து புத்தாவதாரத்தை மட்டும் நினைவில் வைத்துக்கொண்டால் எனக்கு அதனால் கவலையில்லை. இராமனும் கிருஷ்ணனும்கூட இதைப்பற்றி கவலைப்படமாட்டார்கள்.

கிருஷ்ணனின் பெயருக்காக இராமனும், புத்தரின் பெயருக்காக கிருஷ்ணனும், மக்களின் பெயருக்காக புத்தரும் தங்கள் தங்கள் பெயர் மறந்துவிடப்படுவதையே விரும்புவார்கள். ஆகவே இதற்கு அடுத்தபடியில் பக்தி அதிதீவிர நிலையை அடையப்போகிறது. பூஜையில் மக்கள் அதிக காலம் செலவிடுவதை விடுத்து அதற்கு மாறாக மக்கள் சேவையில் ஈடுபடுவார்கள். மாணிக்கவாசகர் பிறந்த ஊரான திருவாதவூர் தானமாகக் கிடைக்க முயற்சி செய்தேன். முழு ஊரும் கிடைக்காவிட்டாலும் மாணிக்கவாசகரின் பெயருடன் தொடர்புடைய மாணிக்கபட்டி தானமாகக் கிடைத்தது. ஒவ்வொரு

மனிதரும் மாணிக்கவாசகராகவும் ஒவ்வொரு கிராமமும் மாணிக்கம்பட்டியாகவும் ஆகவேண்டுமென்பதே என் விருப்பம். ஆகவே இந்தக்காலத்துக்கு ஏற்ற பக்தி எது? காருண்யமே இக்காலத்துக்கு பொருத்தமான பக்தியாகும். நாம் தனியுடைமையையும் அகங்காரத்தையும் துறந்துவிடவேண்டும். பூமிதானம் கிராமதானத்தின் மூலம் சமூகத்தில் இத்தகைய பக்தி ஏற்பட்டு வருகிறது.

### லட்சுமணன்—ஹனுமான்போன்ற ஊழியர்கள் வேண்டும்

இன்று இந்த ஜில்லாவின் ஊழியர்கள் தாங்கள் இனிமேல் நல்ல முறையில் காரியம் செய்வதாக பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள். ஆனால் இது சுக்ரீவனின் பிரதிக்ஞையைப்போல் ஆகக்கூடாதென்பதே என் விருப்பம். இராமருக்கு உதவி புரிவதாக சுக்ரீவன் வாக்குக் கொடுத்திருந்தான். இராமன் 4 மாதங்கள் காத்திருந்தும் சுக்ரீவன் தன் வாக்குறுதியின்படி காரியம் செய்யவில்லை. சுக்ரீவன் காரியத்தை இராமர் முதலில் முடித்துக் கொடுத்தார். ஆனால் சுக்ரீவனோ தன் வாக்குறுதியை மறந்து அரச போகத்தில் மூழ்கிக்கிடந்தான். லட்சுமணனோ சுக்ரீவனின் இந்த அலட்சிய புத்தியைக் கண்டு வெகுண்டு அவனை தண்டிக்கப் புறப்பட்டான். இராமரோ இலட்சுமணனைத் தடுத்து "அவனை விரட்டாதே, அவன் வேலைசெய்வான்" என்று சாந்தப்படுத்தி அனுப்பினார். இலட்சுமணனின் வருகை தெரிந்து அனுமாரின் ஆலோசனையினால் சுக்ரீவன் இலங்கைக்குச் சேனை அனுப்பிவிட்டான். லட்சுமணன் சுக்ரீவனை தாமதத்திற்குக் காரணம் வினவினார். சுக்ரீவன் கூறியதாவது: "லட்சுமணா உலகில் எங்கும் ஆசையும், பற்றுமே அதிகம். என்னைமட்டும் ஏன் கேட்கிறாய்? நான் மட்டும் அதற்கு விதிவிலக்கா? இராமன் என்னைப்பற்றி நினைத்ததே எனக்கு நன்மையாயிற்றே"

இதுதான் உலக இன்பத்தில் உழல்பவர் பலரின் நிலைமை. நான் லட்சுமணனையும் அனுமானையும் போன்ற ஊழியர்களையே எதிர்பார்க்கிறேன். சுக்ரீவன் போன்றவர்களை அல்ல. பக்தி இருந்தால் காரியம் தொடர்ந்து நடக்கும். தினந்தோறும் குளித்தலும் உணவருந்துதலும் தவறாது நடப்பதுபோல பக்தி காரியமும் தவறாது தொடர்ந்து நடைபெற வேண்டும். காரியத்தைத் தொடர்ந்து செய்வதே பக்தி முறையாகும். புரட்சியும் சாதத்தியமும் இல்லாமல் பக்தி ஏற்படாது. நான் தொடர்ந்து 6 வருடங்களாக நடப்பதே இதற்கான உதாரணமாகும். 'தானே வந்து எனதுள்ளம் புகுந்து எனையாட்கொண்டான்.'' இவ்வாறு தொடர்ந்து பக்தியுடன் பணியாற்றும்போது இறைவன் தானே வந்து நம்முள் புகுந்து நம்மை ஆட்கொள்வது உறுதி. "நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும், எப்போதும்"—நமக்கு பக்தி தேவை. எப்போதும் நாம் விழிப்புடன் தொடர்ந்து காரியம் செய்துகொண்டே இருக்கவேண்டும். ஒருபோதும் பக்தியிலிருந்து பிரியக்கூடாது. சூரியனின்றி ஒளியில்லை—சமுத்திரமின்றி நீரில்லை, ஊழியமின்றி ஊழியரில்லை. துணியை நாம் அடிக்கடி உடலைவிட்டு மாற்றமுடியும். ஆனால் நம் உடலை நாம் அவ்வாறு மாற்ற முடியாது. உடலைப்போன்ற பக்தியோ நமக்குத் தேவை. நான் எதிர்பார்ப்பது அவர்கள் எப்போதும் தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட வேண்டும். எண்ணிக்கை அல்ல நம் லட்சியம். உலகில் தனிப்பட்டவர்களாலேயே பெரும் புரட்சிகள் நடந்திருக்கின்றன. மனிதனின் உள்ளத்தின் தன்மையைப் பொறுத்தே புரட்சி அமையும். காலம் நமக்கு அனுகூலமாயிருக்கிறது.

# பிறருக்குக் கொடுக்கவே கைகள்

## பிறரிடமிருந்து பிடுங்கவல்ல

ஆச்சார்ய வினோபா

[பாபாவின் பிரார்த்தனைப் பிரசங்கத்திற்கு முன்னர் பாபா மேடைக்கு வந்ததும் அவருக்கு ஒரு நெல் மாலை அணிவிக்கப்பட்டது. அதையே பொருளாகக்கொண்டு அவர் பேசியதின் சாரம் கீழ்வருமாறு:]

இந்த அழகான நெல் மாலையை எனக்கு இவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இது அடையாளப் பூர்வமான ஒரு தானமாகும். இதன் பொருள் என்னவெனில் இங்குள்ள அத்தனை கிராமங்களும் கிராமதானமாக கொடுக்கப்பட்டிருப்பதாக அடையாளம். எத்தனை கிராமங்கள் உண்டோ அத்தனை கிராமங்களும் கிராமதானமாகக் கொடுக்கப்பட வேண்டும். அத்தனை பேருக்கும் நிலமும் உழைக்கும் வாய்ப்பும் தேவையென்ற கருத்து எங்கும் பரவிவருகிறது. இதுவரை பழங்கள், பூக்கள் தானமாகக் கிடைத்ததற்குப் பதிலாக இன்று நெல் மாலை கிடைத்திருக்கிறது. கிராமதானத்தின் அவசியத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

இன்று இங்கு ஒரு கிராமதான அறிவிப்பு செய்யப்பட்டது. கொடுக்கும் சமூகமே பலமாகவும், இன்பமாகவும் இருக்கும். நம்முடைய கை இறைவன் நமக்களித்த வரப்பிரசாதமாகும். கைகள் அதற்கு உழைக்கவும், தொண்டு செய்யவும், கொடுக்கவும், உதவி செய்யவும், வீழ்ந்தவர்களை தூக்கவுமேயாகும். ஆனால் இதே கைகளைக்கொண்டு மற்றவர்களின் உழைப்பின் பலன்களைப் பிடுங்கவும், அடித்துத் துன்புறுத்தவும், கீழே வீழ்த்தவும் இயலும். ஆனால் நாம் இவ்வாறு செய்தால் இறைவன் நம்மிடம் என்னசொல்வார். அடே, நான் உனக்கு கைகளை கொடுத்தும், நீ மிருகமாக இருக்கிறாயே. ஆனால் மிருகங்களுக்கோ கைகள் இல்லாத காரணத்தால் உன் அளவு கொடுமை புரிய முடியவில்லை.

குரங்குகள்கூட மிருகங்கள்தானே. முற்காலத்திய குரங்குகள் ராமருக்கு உதவி செய்தன. ஆனால் இன்றோ குரங்குகள் மரம் நடுவதில்லை. வயலில் விதைப்பதில்லை. ஆனால் மற்றவர்கள் உழைப்பின் பயனை பறித்து நுகர்கின்றன. அதிலும் ஒரு பகுதியை உண்டு நான்கு பகுதியை பறித்து பிய்த்து நாசம் செய்கின்றன. ஆகவே, குரங்குக்கு உழைக்கத் தெரியாது. பிடுங்கவே தெரியும். ஆனால் நாமோ இறைவன் கொடுத்துள்ள கைகளால் மற்றவர்களுக்கு கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு கொடுத்துக் கொண்டே இருக்கும் சமூகத்தில்தான் தருமம் வளரும். மக்கள் சந்தோஷமாய் இருப்பார்கள்.

மதுரையில் 150 கிராமங்களில், கிராம நிலம் பொதுவாகி யிருக்கிறது. ஆனால் இன்று கிடைத்த கிராமதானமோ வேறு வகையைச் சேர்ந்தது. இங்கு ஒருவர் மட்டுமே தனக்குரிய நிலமனைத்தையும் கிராமத்திற்குப் பொதுவாகக் கொடுத்திருக்கிறார். அந்த கிராமத்தில் நிலமில்லாத கிராமவாசிகளிடம் நான் கூறியதாவது, நீங்கள் இப்போது வேறு ஒருவர் கொடுத்த நிலத்தைப் பெற்று அனுபவிக்கப் போகிறீர்கள். உங்கள் பிள்ளை குட்டிகள் இனி நன்றாக இருக்கும். ஆனால் உங்களுடைய பலம் எப்படி வளரும்? கொடுப்பதால் மட்டுமே ஒருவருடைய பலம் வளர முடியும். கொடுக்க முன்வரும்போதுதான் பலமும் வளர்ச்சியும் உண்டு. உங்களுக்குக் கொடுக்கப்படும் நிலம் நிபர்த்தனை எதுவு

யில்லாமல் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரே ஒரு நிபந்தனையுண்டு. இந்த நிலத்தை நீங்கள் விற்கவோ, அடகு வைக்கவோ முடியாது. உழைக்கும் வரையில்தான் அதை வைத்திருக்க முடியும்.

## நம் கைகளே ஆண்டவன்

இந்த நிலம் உங்களுக்கு அன்போடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களும் மற்றவர்களுக்கு அன்போடு கொடுங்கள் கம்யூனிஸ்ட்டுகள் பணக்காரர்கள் மட்டுமே பறிக்கப்படவேண்டுமென்று கூறுகிறார்களே தவிர ஏழைகளும் கொடுக்க வேண்டுமென்று கூறுவதில்லை. செல்வமனைத்தும் இரு கைகளின் உழைப்பே. செல்வம் எங்கே யிருக்கிறது? இந்த இரு கைகளில் லக்ஷ்மி எங்கே? இந்த விரல்களில் ''பிராபாதே கர தரிசனம்'' காலையில் எழுந்தவுடன் கைகளைப் பார்க்கவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. ஏன்? இறைவன் கொடுத்த இந்த கைகள் தங்கள் கடமையைச் செய்து உறுதியாய் இருக்கின்றனவா? அல்லது வேலையின்றி மிருதுவாய் இருக்கின்றனவா? என்று ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையை பரிசீலனை செய்வதற்கே ''அயம் மே ஹஸ்தோ பகவான்'' என் இந்த கைகளே ஆண்டவன் ''அயம் மே பகவத் த்ரக'' இந்த கை ஆண்டவனை விடச் சிறந்தது. ஆண்டவனுக்கும் உயர்ந்த ஸ்தானத்தை கைகளுக்கு அளித்துள்ள இந்த இனிய கற்பனையைவிட உயர்ந்ததாக நாஸ்திகன் வேறு என்ன செய்ய முடியும்?

## கையில்லையேல் கலைகள் எங்கே?

சமுத்திரம் பெரியதா மேகம் பெரியதா? (கூட்டத்திலிருந்த பெண்களில் ஒருவர் மேகம் என்று கூறுகிறார்) ஆம் சமுத்திரத்தையும் விட மேகமே சிறந்தது. ஏனெனில் மேகமே நமக்கு நேரிடையாக உதவுகிறது. சமுத்திரத்திலிருந்து தோன்றிய போதிலும் நமக்கு நேரிடையாக பயன் தரும் காரணத்தால் மேகமே சிறந்தது ஆகும். அது போன்றே இறைவனின் இன்னருளை நமக்குத் தினந்தோறும் வழங்கி வரும் இந்த கைகள் அவற்றைப் படைத்த ஆண்டவனை விட உயர்ந்தவையாகின்றன. கைகளே பொருள்களை உற்பத்திசெய்கின்றன. உற்பத்தியான பொருள்களை மற்றவர்களுக்கு அன்புடன் வழங்குவதும் அதுவே. ஆகவே இது ஆண்டவனைவிடச் சிறந்தது ஆகிறது. என்னுடைய இந்த கைகளில் உலகில் உள்ள அத்தனை கலைகளும் அடங்கியிருக்கின்றன. உலகில் உள்ள அத்தனை செல்வங்களும் புதைந்து இருக்கின்றன. உலகில் உள்ள அத்தனை மூலிகைகளும், மருந்துகளும் அடங்கியிருக்கின்றன. இந்த கைகளால் தொடுவதால் அத்தனை புண்ய காரியங்களும் நடைபெறுகின்றன. சிஷ்யனின் தலைமீது தீண்டும் குருவின் அந்த புனித கை ஸ்பரிசத்தால் சிஷ்யன் ஞானம் பெறுகிறான். இத்தகைய பேராற்றல் வாய்ந்தவை இக்கைகள்.

நிலத்தின் சொத்துடைமை அனைவருக்கும் பொதுவாகும். ஆகவே, மக்களுடையது, மக்களுக்குக் கிடைத்து விட்டது. ஆனால் அவர் அன்போடு கொடுத்தார் என்பதை ஒப்புக்கொள்ளத் தானே வேண்டும். ஆகவே நீங்களும் உங்கள் விளைவின் ஒரு பகுதியை சம்பத்தானமாகக் கொடுத்து வரவேண்டும். அதைக்கொண்டு மற்றவர்களின் துன்பத்தைத் துடைக்க வேண்டும்.

## சமூக பிரசாதத்தை ஏற்று வாழ்வோம்

இங்கு ஒருவரே நிலம் கொடுத்தார். வேறிடங்களில் 10, 12 பேர் நிலம் கொடுப்பார்கள். வேறு சில இடங்களிலோ இன்னும் அதிகமாக கொடுப்பார்கள். யாருக்குக் கிடைக்கிறதோ அவர்களும் கொடுக்க வேண்டும்.



கிடைப்பவர் எவ்வாறு கொடுப்பது? அவர்கள் தங்களுக்கு கிடைத்துள்ள நிலத்தில் நன்கு உழைத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இவ்வாறு உழைப்பு செல்வம் உடையோர் ஒவ்வொருவரும் தங்கள் உழைப்பை பரிபூரணமாக சமூகத்திற்கு அர்ப்பணித்து தங்களுக்குத் தேவையானதை மட்டும் சமூகத்திலிருந்து பிரசாதமாக பெற்று மகிழ வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்திலிருந்து பெறுவதைவிட கொடுப்பது அதிகமாக இருக்க வேண்டும். இத்தகைய நிலைமை ஏற்பட்டால் சமூகத்தில் போட்டியும், பொறாமையும் பூசலும் ஒழிந்து அன்பும், அறமும், அமைதியும் பெருகும். வட இந்தியாவில் கிராமதானமாக கிடைத்துள்ள ஒரு கிராமத்தில் அங்குள்ள மக்களால் சாப்பிட்டுத் தீர்க்க முடியாத அளவிற்கு தானியங்கள் உற்பத்தியாகி யிருப்பதாக செய்தி கிடைத்துள்ளது. இவ்வாறு தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் தானியத்தை அடுத்த இரண்டு ஆண்டுகளின் தேவைக்காக சேமித்து வைக்கலாம். அதற்கு மிஞ்சி உற்பத்தியாகுவதை அக்கம் பக்கத்திலுள்ள விளைவு குறைந்த கிராமங்களுக்கு கொடுத்து உதவலாம். ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்ப அதிகமாக உழைத்து உற்பத்தி பெருக்க வேண்டும். இங்குள்ள நிலைமையை உழைப்பாளிகள் எஜமானன் சொல்படி வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. எஜமானர்களோ தொழிலாளரிடமிருந்து அதிக வேலை வாங்கிக்கொண்டு குறைந்த கூலி கொடுக்க நினைக்கின்றனர். உழைப்பாளிகளோ குறைந்த வேலை செய்து அதிக கூலிபெற விரும்புகின்றனர். இவ்வித நிலைமையில் தொழிலாளர்களுக்கு வேலையில் அக்கறையிருப்பதில்லை. எஜமானனே நேர்ப்பார்வையிருக்கும் அளவுக்கே வேலை நடைபெறுகிறது. இதனால் ஏமாற்றுதல் நடைபெறுகிறது. சமூகத்தின் ஒவ்வொரு துறையிலும் இதைக் காணலாம். இது தொழிலாளிகளின் குறை மட்டுமல்ல. பாரத நாட்டு முழுவதின் குறையே ஆகும்.

## மேற்பார்வையில்லாத திறமையான உழைப்பு அவசியம்

தென்னாப்பிரிக்காவில் 40 வருடங்களுக்கு முன் நிகழ்ந்தது இது. அங்கு இந்தியத் தொழிலாளர்களும், ஜப்பானியத் தொழிலாளர்களும் வேலைசெய்து வந்தனர். ஆனால் அங்குள்ள முதலாளிகள் ஜப்பானியத் தொழிலாளர்களையே விரும்பி வேலைக்கமர்த்திக் கொண்டனர். இந்தியத் தொழிலாளர்களைவிட ஜப்பானியர்களுக்கு 3 மடங்கு அதிகக் கூலி கொடுக்கவேண்டியிருந்தது. ஆயினும் அவர்களை விரும்பி வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்டனர். இதற்குக் காரணம் என்னவெனில் மேற்பார்வையில்லாமல் இந்தியர்களின் வேலை நடக்காது. ஜப்பானியர்களோ மேற்பார்வையில்லாமலே தங்கள் சக்திக்கு இயன்ற அளவு பொறுப்புடன் வேலை செய்தார்கள். தொழிற்சங்க பிரதிநிதிகளும்கூட தொழிலாளர் செய்யும் இந்த தவறை திருத்த முற்படுவதில்லை. எஜமானர்கள் செய்யும் தவறை, தொழிலாளர்கள் செய்யும் தவறினால் சரி செய்ய முடியாது. எஜமானர்களோ குறைந்த கூலி கொடுத்து அதிக வேலை பெற விரும்புகின்றனர். தொழிலாளர்களின் பிரதிநிதிகளோ குறைந்த வேலைக்கு அதிக கூலி பெற விரும்புகின்றனர். தொழிலாளர்கள் முழுமனதுடன் தங்கள் முழுச் சக்தியையும் உபயோகித்து வேலை செய்ய வேண்டும் என்பதையும், எஜமானர்கள் அவர்களின் தேவைக்கான முழு ஊதியமும் தரவேண்டுமென்பதையும் யாரும் வற்புறுத்துவதில்லை. மூர்திய மனோ

நிலையுடன் உழைத்தால் நீங்கள் தானத்தின் பலனை அனுபவிக்கமாட்டீர்கள்.

## கொடுப்பது பாரதத்தின் விசேஷ பண்பு

முன்பெல்லாம் நிலம் கொடுத்தால் உற்பத்தி பெருகுமா என்று கேட்கப்பட்டது. இப்போது அவ்வாறு கேட்பதில்லை. ஏனெனில் கிராமதானப்பேச்சில் வாயடைத்துவிட்டது. ஏனெனில் கிராமதானம், பூதானத்தின் மூலம் நிலம் பெறுவோரின் கடமை உற்பத்தியைப் பெருக்குவதே, கொடுப்பது அனைவரின் தர்மமும் ஆகும். கிராமத்திலுள்ள பரம ஏழையும்கூட தன் வீட்டுக்கு பிச்சைக்கு வந்த ஒருவனை அன்புடன் அழைத்து தன்னிடமுள்ளதில் ஒரு பகுதியை கொடுப்பான். தன்னிடம் எதுவும் இல்லையென்று அவன் கூறமாட்டான். இதுதான் பாரதத்தின் பண்பு. இவ்வாறு பரம ஏழைகளும் தங்களிடம் இன்று இருப்பதில் ஒரு பகுதியைக் கொடுக்க முன்வந்தால் நிலச்சுவான்தார்கள் தங்களிடம் உள்ளதில் ஒரு பகுதியை கொடுக்காமல் இருக்க முடியாது. சிறிய நிலச்சுவான்தார்களைக் கண்டு பெரிய நிலச்சுவான்தார்களும் நிச்சயமாகக் கொடுக்கவே செய்வார்கள். கிராம மக்களுக்கு நிலம் கொடுக்கப்படுவதைக்கண்டு அங்குள்ள அத்தனைபேருடைய முகத்திலும் மகிழ்ச்சியையும், மலர்ச்சியையும் கண்டேன்.

## ஈரமுடைய தானம்

தஞ்சை நிலம் ஈரமாயிற்றே (நஞ்சை ஆயிற்றே.) அதை கொடுப்பார்களா என்று கேட்கப்படுகிறது. பிராமணர்களுக்கு தட்சணை வழங்கும்போது பணத்தில் நீர்விட்டு ஈரமாக்கியே கொடுக்கிறோம். ஈரத்தால் நனைந்த பொருளே தானத்திற்கு ஏற்றதாகத் தெரிகிறது. அவ்வாறே நிலத்தையும் ஈரமாக்கிக் கொடுக்க வேண்டும். பணம் என்னவோ வறண்டு இருக்கிறது, ஆகவே அதில் நீரைவிட்டுக் கொடுக்கிறோம். ஆனால் நிலம் அவ்வாறில்லை. இது இயற்கையாகவே ஈரமாக இருக்கிறது. ஆகவே இதை நனைக்கவேண்டிய அவசியமில்லை. தஞ்சை நிலம் நஞ்செய் நிலமாயிருப்பதால் இங்கு நிலம் பெறுவது கடினம் எனக் கூறப்படுகிறது. எங்கு அதிகமாகக் கிடைத்துக்கொண்டிருக்கிறதோ அங்குதான் அதிகமாக வழங்க வேண்டும்; வழங்கமுடியும். காவிரியின் கருணை பெருகும் இடத்தில்தான் தான வெள்ளமும் பெருகமுடியும்.

சிவபெருமான் இடையில் உடுத்துவதற்கு முழுத்துணி இல்லாதிருக்கிறார். படுப்பதற்கு சரியான இடமில்லை. பூசுவதற்குக்கூட முகப்பவுடர் (pomade) இல்லாமல் சாம்பலை பூசிக்கொள்ளுகிறார். அவருக்கு உறுதுணையாக காளைமாடுகளும் கட்டுவதற்குக் கோடரியும் உள்ளன. அவருடைய தலையிலும் கழுத்திலும், பாம்பு மாலைகள் பின்னிக் கிடக்கின்றன. பிரெஞ்சு நாட்டின் தேசிய கீதத்தில் உலக நாடுகள் அனைத்தையும்விட பிரான்ஸே சிறந்ததெனக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் கூறும்போது உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் குறைகளும் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவற்றில் இந்தியாவைப் பற்றி குறைகூறும்போது இந்தியா பாம்புகள் நிறைந்த இடமெனவும், பிரான்சில் பாம்புகளே இல்லையென்றும் பெருமையாகக் கூறப்படுகிறது. ஆனால் நம் கருத்தின்படியோ இது முற்றிலும் தவறானது.

## சிவனைப் போன்ற விவசாயிகள்

சிவபெருமான் இருக்குமிடத்திலேலேயே பாம்புகள் வாசம் செய்யும், வயல்களில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளாகிய சிவபெருமான்களைச் சுற்றிலும் பாம்புகள் காணப்படுகின்றன. அவர்களுக்கோ சிவபெருமானைப்போலவே உடுத்துவதற்கும் போதிய உடை இல்லை. காளைமாடுகளே அவர்களைவிட்டு என்றும் பிரிவதில்லை. ஆகையால்தான் 'தென்னாடுடைய' சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என மாணிக்கவாசகர் கூறியுள்ளார். நாகப்பட்டணம் என்று பாம்பின் பெயரில் ஊர் இருக்கிறது. சிவன் இருக்குமிடத்தில்தான் பாம்புகள் இருக்க முடியும். சிவன் இல்லாத இடத்தில் பாம்புகளுக்குவேலை ஏது? ஆகையால்தான் பிரான்ஸ் நாட்டில் பாம்புகள் இல்லைபோலும்! ஆகவே இந்தியாவில் பாம்புகள் அதிகமாகக் காணப்படுவது நம் குறை அல்ல; பெருமையே ஆகும். முற்காலத்தில் கோவிலில் உள்ள சிவனுக்கு நிலம் கொடுத்தோர் தற்போது வயலில் பாம்புகளுக்கு இடையில் வேலை செய்யும் சிவனுக்கு நிலம் கொடுக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

உடலைப் போன்ற சிறந்த ஆலயம் வேறில்லை; ஆகவே உடற்கோவிலில் உறையும் ஜீவர்களுக்கு தானம் வழங்குவது இன்றைய கடமையாகும். இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வோர் உங்கள் சம்மதத்தை வாயினால் தெரிவியுங்கள் பார்க்கலாம். (கூட்டத்தில் அமைதி நிலவுகிறது. யாரும் பேச முன்வரவில்லை) கொடுக்கத் தயங்குவோர், பேசுவதற்கும் தயங்குகின்றனர்! எண்ணம் இருந்தால்தானே, அதைத் தொடர்ந்து வார்த்தையும், செயலும் ஏற்பட முடியும்.

## அரசியல் போகத்தில் யோகம்

தஞ்சை ஜில்லாவின் கஷ்டம்தான் என்ன? பெரிய ஆசாமிகளின் மூளையில் அரசியல் புகுந்துவிட்டது. சுயராஜ்யத்திற்கு முன்பு அரசியலில் சக்தி இருந்தது. அரசியலில் அன்று தியாகம் இருந்ததால் சக்தியும் இருந்தது. சுயராஜ்யத்திற்கு முன்பு காங்கிரஸில் சேருவதுகூட பெரும் தியாகமாயிருந்தது. ஏனெனில் காங்கிரஸில் சேர்ந்த காரணத்தாலேயே தடியடியும் சிறைவாசமும் கிடைத்தன. இன்றோ காங்கிரஸில் 4 அணா மெம்பரானால் குறைந்தது ஒரு லைசென்ஸாவது கிடைக்குமென்ற நிலைமை இருக்கிறது. இப்போது தியாகம் அரசியலை விட்டு சமூக கேந்திரத்துக்கு மாறிவிட்டது.

அரசியல் போக பூமியாகவும் சமூகம் தியாக பூமியாகவும் விளங்குகிறது. அரசியலில் என்னதான் இருக்கிறது? ஒரே பொறாமையும் போட்டியுமே அங்கு காணப்படுகின்றன. அங்கு வேலை செய்வோர் ஜனகரைப்போல் வைராக்கியத்துடன் உழைக்க வேண்டும். ஆனால் அத்தகையோர் அரசியலில் வெகு சிலரே. அரசியலின் நடைமுறையோ தியாகத்திற்கு இடமில்லாததாயிருக்கிறது. இதற்கு மாறாக சமூக கேந்திரத்திலோ தியாகத்திற்கு நிறைய இடமிருக்கிறது. உதாரணமாக ஒரு ஹரிஜனச் சிறுவனை நம் சொந்தக் குழந்தையைப் போல் வளர்த்து அவனுக்கு கல்யாணம் செய்துவைக்க முற்படும்போது சமூகத்தின் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. இதில் தியாகம் தேவைப்படுகிறது. சுயராஜ்யத்தில் பெறும் உரிமையிருந்தது. பூதானத்திலோ கொடுக்கும் கடமை வற்புறுத்தப் படுகிறது. நாம் சிறைக்குச் சென்றிருந்த காலத்தில் சிறை அதிகாரிகள் நம்மைக்கண்டு அஞ்சினர். ஏனெனில் நம்மை அவர்கள் கொடுமைப் படுத்தினால் நாம் ஆட்சிக்கு வரும்போது அவர்கள் நம் கீழ் வேலைசெய்யவேண்டியிருக்குமென்பதே. எஜமானனிடம் வேலைக்காரன்போல் அவர்கள் நடந்து கொண்டனர். காரணம் என்னவெனில் அது பெறும் இயக்கம். அதற்கும் சிறிது பராக்கிரமம் தேவையாயினும் அதில்

முன்னேற்றமும் ஆன்ம வளர்ச்சியும் கிடையாது: ஆகவேதான் கதர் வேலை, ஹரிஜனத்தொண்டு கிராமக் கைத் தொழில் முதலிய நிர்மாணத் திட்டங்களை இத்துடன் காந்தியடிகள் இணைத் தார்.

காந்தியடிகள் என்ன கூறினார்? இம் மாதிரி ஜனத் தொடர்பினால் உங்கள் சக்தி வளருமென்றார். அதைப்புரிந்து கொண்டனர் மக்கள். வெள்ளைக்கார ஆட்சியின் பயனாக இழந்த நம் உரிமையைப்பெறவேண்டியிருந்தது. ஆகவே அதில் தியாகம் குறைவாயிருந்தது. இதுவோ கொடுக்கும் இயக்கமாயிருப்பதால் சக்தி அதிகரிக்கிறது இன்றைய நிலையிலும்கூட கிடைத்த சுயாராஜ்யத்தை நிர்வகிக்க ஒருசிலர் ஆட்சிபீடத்திற்குப் போகத்தான் வேண்டியிருக்கும். ஆனால் அவர்கள் மக்களின் சேவைக்குத் துடித்துக்கொண்டிருப்பார்கள். இந்த நிலைமை ஏற்படும்போது தஞ்சை 'ஜில்லாதான' மாவது நிச்சயம்.

(கரியாப்பட்டணம்—3-2-'57)

★

## புலர்ந்தது காலை புனிதன் அருளால்

(சு. மு. சொக்கலிங்கம், குருகுலம், கீரனூர்)

உயர்ந்தது உயர்ந்தது உழைப்போர் கைகள்
உலகம் காணு வழியினிலே
அயர்ந்தது அயர்ந்தது அன்பில்லாரின்
அழுக்குடை நெஞ்சம் அத்தனையும்
வளர்ந்தது வளர்ந்தது வழங்கும் கைகள்
வறுமையும் சிறுமையும் அகன்றிடவே
தளர்ந்தது தளர்ந்தது கட்டுகள் யாவும்
தன்னருள் அந்தோ ஊன்றியதே

பொழிந்தது பொழிந்தது புத்தமெஞ் ஞானம்
புனிதன் பாவே வழியினிலே
அழிந்தது அழிந்தது ஆசைப் பேயின்
ஆட்டம் யாவும் அவ்வழியால்
மலர்ந்தது மலர்ந்தது சர்வோ தயமே
மாண்புடை வாழ்வு வாய்த்ததுவே
புலர்ந்தது புலர்ந்தது புதியநற் காலை
புனிதன் பாவே அருள் வழியால்

## தமிழ் நாட்டில் சர்வோதய மேளா

### சென்னை

காலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி படேல் இளைஞர் காங்கிரஸிலிருந்து காந்திஜியின் உருவப்படத்துடன் ஊர்வலம் ஒன்று திரு. K. M. நாகரத்தினம் தலைமையில் புறப்பட்டு மேளா கட்டமான மயிலாப்பூர் கடற்கரையில் வந்து சேர்ந்தது. கடலில் நீராடிய பிறகு பிரார்த்தனையும் நூற்பு யக்ஞமும் நடைபெற்றது.

மாலை 3 மணிக்கு கதர் வஸ்திராலயத்திலிருந்து பெண்கள் ஊர்வலம் திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் தலைமையில் காந்திஜி விநோபாஜி படங்களுடன் புறப்பட்டு மேளா கட்டத்திற்கு வந்து சேர்ந்தது. இதில் கன்னியா குருகுலமாணவிகளும் பல மாதர் காங்கிரஸ் அங்கத்தினர்களும் கலந்துகொண்டனர்.

இரண்டாவது மாணவர்கள் ஊர்வலம் மாலை 3 மணிக்கு டக்கர் பாபா வித்தியாலயத்திலிருந்து லோக சேவக் திரு. சு. வீரப்பன் தலைமையில் காந்திஜியின் உருவப்படத்துடன் புறப்பட்டு மேளா கட்டத்திற்கு வந்து சேர்ந்தது.

காந்திஜியின் அஸ்தி கரைத்த இடமான மெரினா கடற்கரையில் திரு. இளவழகனார் அவர்கள் (ஆசிரியர், முல்லைக் கொடி, மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்) தலைமையில் கீழ்கண்ட முறைப்படி மேளா கூட்டம் ஆரம்பமாகியது.

4-30 முதல் 5-0 வரையில் நூல் காணிக்கை செலுத்துதல்.

5-0 முதல் 5 30 வரையில் பொது நூற்பு யக்ஞம் (200 பேர்கள்).

5-30 முதல் 6-0 வரையில் மயிலை ஸ்ரீனிவாச காந்தி நிலயத்தாரால் பிரார்த்தனை கீதங்கள் பாடப்பட்டது.

6-0 முதல் 6-10 வரையில் S.D. செல்லப்பா அய்யர் குமாரத்திகள் இறைவழிபாடு நிகழ்த்தினார்கள்.

6-10 முதல் பொதுக்கூட்டம்.

திரு. சு. வீரப்பன் எல்லோரையும் வரவேற்று பேசி தலைமை வகித்து கூட்டத்தை நடத்திக் கொடுக்குமாறு தலைவரையும் கேட்டுக்கொண்டார். தலைவரின் தலைமைப் பிரசங்கத்திற்குப் பிறகு சர்வோதயத்தைப்பற்றி திருவாளர்கள் ஆக்கூர் அனந்தாச்சாரி, L. N. கோபால்சாமி, சங்கு கணேசன், மதுசூதன பிரசாத், திருமதிகள் ஜெயலக்ஷ்மி, சரஸ்வதி பாண்டுரங்கம் முதலானோர்கள் பேசினர். சுமார் 500 பேர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தலைவரின் முடிவுரைக்குப் பின் காணிக்கை சிட்டங்களின் வசூல் விபரங்களை திரு. W. கெங்காதரன் படித்து நன்றி கூறினார்.

நூல் காணிக்கை.

| | | சிட்டங்கள் |
|---|---|---|
| 1. | சர்விஸ் ஹோம், இராயபுரம் | 103 |
| 2. | டக்கர் பாபா வித்தியாலயம், ஸ்ரீநகர் | ... 153 |
| 3. | ஸ்ரீ சதனு விஜிலியன்ஸ் ஹோம், மயிலாப்பூர் | ... 102 |
| 4. | ஔவை இல்லம், அடையாறு | 119 |
| 5. | லேடி விலிங்டன் லைப்ரரி செனடோரியம், திருமணி | 70 |
| 6. | கிருஷ்டோபர் டிரெயினிங் காலேஜ், ராயபேட்டை | ... 52 |
| 7. | ஜூனியர் சர்ட்டிபிகேட் ஸ்கூல் | ... 11 |
| 8. | வயலூர் சர்வோதய கிராமம் | 38 |
| 9. | ஸ்ரீனிவாச காந்தி நிலயம், மயிலாப்பூர் | ... 100 |
| 10. | ஹிந்து சேவா சங்கம், முத்தியாலுபேட்டை | ... 22 |
| 11. | படேல் இளைஞர் காங்கிரஸ், திருவல்லிக்கேணி | ... 27 |
| 12. | லேடி விலிங்டன் டிரெயினிங் காலேஜ், திருவல்லிக்கேணி | 137 |

13. குஜராத்தி பாலமந்திர், பார்க் டவுன் ... 32
14. ஆகாரக்கல்வி ஆரம்ப பாடசாலை, திருவூணுபுரம் ... 3
15. சென்னை மார்வர் காங்கிரஸ், மதராஸ் ... 4
16. முராடீஸ் கபே, திருவல்லிக் கேணி ... 23
17. தனி நபர்களாக காணிக்கை செலுத்தியது ... 201

மொத்தம் ... 1197

ஊ. கங்காதரன்,
சஞ்சாலக்.

## ஸ்ரீரங்கம்

மகாத்மா காந்தியின் அஸ்தி கரைத்த தினமாகிய 12—2—57 தேதியன்று காலை 10-மணிக்கு ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறையில் சர்வோதய மேளா வழக்கம்போல் இவ்வருடமும் கொண்டாடப்பட்டது.

அன்று காலை 8மணிக்கு திருவானைக் கோவிலிலிருந்து காந்தியடிகளின் படங்களை யானைகள்மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. ஊர்வலத்தில் ஏராளமான பொது மக்களும், சர்வ சேவா சங்க தொண்டர்களும், தஞ்சை சர்க்கார் ஆதாரப்பயிற்சிப்பள்ளி மாணவிகளும், திருச்சி சர்வசேவா சங்க மாணவிகளும் கலந்துகொண்டனர். பூமி தான பிரசாரம் செய்துகொண்டு, ஷை ஊர்வலம் அம்மாமண்டபம் படித்துறையை அடைந்தன. நூற்பு யக்ஞம், பொதுப் பிரார்த்தனையுடன், ஸ்ரீமதி தஞ்சம்மாள் அவர்கள் தலைமையில் சர்வோதய மேளா ஆரம்பமாயிற்று. சர்வோதய தத்துவங்களைப்பற்றி ஸ்ரீ ஈ வி. ஸ்ரீனிவாசாச்சாரியார், ஸ்ரீ ஏ. எஸ். ராமஸ்வாமி அய்யர், ஸ்ரீப. சங்கிலியாபிள்ளை ஸ்ரீமதி தஞ்சம்மாள் ஆகியோர் விரிவாக சொற்பொழிவாற்றினர்கள். காந்தியடிகள் ஞாபகார்த்தமாக பொது மக்கள் நூல்சிட்டங்கள் காணிக்கையாக செலுத்தினர்கள். ஸ்ரீ ப. சங்கிலியாபிள்ளை வந்தனோபசாரத்துடன் மேளா இனிது முடிவடைந்தது.

ப. சங்கிலியா பிள்ளை,
விபாக் நிர்வாகி.

## பேரூர் :

சர்வோதய மேளா கோவைக்கடுத்த பேரூரில் நடந்தது. ஸ்ரீ B. S. சுந்தரம் தலைமையில் ஸ்ரீ V. ராமச்சந்திரன், ஸ்ரீ S. வஜ்தாசலம், திருநஞ்சய்யக்கவுண்டர் ஸ்ரீ S. D. ராமச்சந்திரன் முதலியவர்கள் பேசினர்கள். நாயக்கன் பாளயத்தில் நில வினியோகம் செய்துவிட்டு ஸ்ரீ T. S, அவினாசிலிங்கம் வர சிறிது தாமதமேற்பட்டது. நிர்மாணத்திட்டங்களால் தான் நாடு முன்னேற முடியும் என்று தன் பேச்சில் கூறினர். தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி திரு, M. சின்னையன் மேளாவிற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார்,

## சிதம்பரம் :

சர்வோதய மேளா தினம் சிதம்பரம் ராஜா டூரிங் டாக்கீஸில் நடைபெற்றது. மன்னார்குடி டாக்டர் பி. வி. ருத்த கிருஷ்ண அய்யர் விழாவைத் துவக்கி வைத்தார். திருவாளர்கள் ஜி. வாகீசம் பிள்ளை எம். எல். ஏ., சிதம்பரம் நகர சபைத் தலைவர் எம். சுப்பராய பிள்ளை பி. எஸ் சி. பி. எல்., தென்னார்காடு ஜில்லா லோக் சேவக் எஸ். ஆர். சுப்பிரமணியம், ஆத்திப்பாக்கம் மு. ராமகிருஷ்ண ரெட்டியார், அண்ணாமலை பல்கலைக் கழக பௌதிகப் போாசிரியர், ஆர். கே. விஸ்வநாதன் எம். ஏ., மெய்ப்பொருளியல் துறை சி. இராமலிங்கம் எம். ஏ., சமூக நல விஸ்தரிப்புத்திட்ட அதிகாரி திருமதி ராஜலட்சுமி எம். ஏ. எல். டி., ஆகியோரும் மற்றும் பலரும் சர்வோதயத் தத்துவங்களைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்.

சர்வ சேவா சங்கத் தொண்டர் திரு. கே. எஸ். கோவிந்தசாமி நன்றி கூறினர்.



## ராஜபாளையம் :

ராஜபாளையம் விபாக்கைச்சேர்ந்த சர்வ சேவா சங்கத் தொண்டர்கள் பல கிராமங்களில் பிரசாரம் செய்து ராஜபாளையத்திற்கு மேற்கேயுள்ள அய்யனார் கோவிலில் சர்வோதய மேளா கொண்டாடினர்கள். சம்பத்து தானம், பூமி தானம், சாதன தானம், முதலியவைகளும் கிடைத்தன.

R. வெங்கிடகிருஷ்ணன்,
நிர்வாகி,
ராஜபாளையம் விபாக்.

## குண்டடம் :


30—1—1957 முதல் 12—2—57 முடிய சர்வோதய பட்சத்தில் ஸ்ரீ C.R. சுப்பிரமணியம் R. நடேசன், மறவாபாளையம் N. அரங்கநாதன் முதலியவர்கள் கால் நடையாக பல கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள். கஸ்தூரிபா நிகேதன், கிராம சேவிகைகளும் சில தினங்கள் கூட்டங்களில் கலந்துகொண்டார்கள். 12—2—57-ந்தேதி மேளாவன்று (சூரிய நல்லூர்) காஞ்சிபுரம் கிராமம் மாமாங்கம் என்னும் புண்ணிய ஸ்தலத்தில் மேற்படி ஊர் கிராமோதய கதர் சங்கத்தாரால் செய்யப்பட்ட விசேஷ ஏற்பாட்டில் காலை பிரார்த்தனை, நூற்பு வேள்வி, பஜனை, பொதுக்கூட்டம் முதலியவைகள் நடைபெற்றன. மறவாபாளையத்திலிருந்து கஸ்தூரிபா கிராம சேவிகைகள் 20 பேர்கள் 9 மைல் கால் நடையாக வந்து மேளாவில் கலந்து கொண்டார்கள், யாத்திரைக் குழுவினர்கள் 112 மைல் நடந்து 34 கிராமங்களில் பிரசாரம் செய்தார்கள். 196 சிட்டம் நூற்பு காணிக்கையாகக் கிடைத்தது.

## கொடுவாய் :

கொடுவாய் வஸ்திராலயமும், அதைச் சேர்ந்த கிராமோதய கதர் சங்கங்களும் சர்வோதயபட்சத்தில் 23 கிராமங்களில் யாத்திரை செய்து பேரூரில் சர்வோதய மேளாவில் கலந்து கொண்டார்கள் ரூ. 2–10–0க்கு மட்டுமே பிரசுரங்கள் விற்றார்கள். கிடைத்த நூல் சிட்டம் 473.

K. N. ராமஸ்வாமி,
நிர்வாகி.


பணத்தின் மோகத்திலிருந்தும்
அரசாங்கத்தின் பிடிப்பிலிருந்தும்
கல்வியை விடுவிக்கும்




300 பக்கம்
விலை ரூ. 1—8—0
மணியார்டருடன் எழுதவும்

சர்வோதய பிரசுராலயம், தஞ்சை.

## ★ இலங்கையில் சர்வோதய தினம் ★

மகாத்மா காந்தியடிகள் அமரத்துவ மெய்திய சர்வோதய தினம் இலங்கையின் பல பாகங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத்தினதும், சைவ மங்கையர் கழகத்தினதும் ஆதரவில் கொழும்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு நியாய துரந்தரர் திரு ச. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மகாத்மா மறைந்த தினத்தை இந்தியா வெங்கும் சர்வோதய கருத்துக்கள் பரவுவதற்குச் சர்வோதய தினத்தைக் கொண்டாடுத லவசிய மெனத் தலைவர் குறிப்பிட்டார்.

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் கொழும்புக் கிளையின் காரியதரிசி திரு, சோ. க. தம்பிப்பிள்ளை அவர்கள் சர்வோதயம் என்பது எல்லோருடைய நன்மையையும் விரும்புவது. இத்தத்துவம் உலகெங்கும் பரவினால்தான் நிரந்தர சமாதானம் ஏற்படுமெனக் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

சர்வோதய இயக்கத்திற்குத் தலைமை தாங்கிவரும் பூஜ்ய விநோபாஜியின் சேவை இந்தியாவிற்கு மாத்திரமல்ல உலகிற்கே உரிமையானது. விநோபாஜி சர்வோதய தத்துவங்களைப் பரப்புவதற்கு ஜப்பானுக்குப் போவதாக அறிகிறோம். அவரை இலங்கைக்கு அழைத்து சர்வோதயக் கருத்துக்களைப் பரப்ப செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இவரது வேண்டுகோளைச் சபையோர் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றது குறிப்பிடத்தக்கது. உணவு இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி திரு. கோ. ஆள்வாப்பிள்ளை, அருணந்தியார் சங்க இரத்மலானைக் கிளைக் காரியதரிசி திரு. சோ. சித்திரன் ஆகியவர்களும் பேசினார்கள். கூட்ட முடிவில் மகாத்மா காந்தியடிகளின் ஒலிய சரித்திரத் திரைபடம் காட்டப்பட்டதோடு பிரசாதமும் வழங்கப்பட்டது.

சோ. க. தம்பிப்பிள்ளை,
காரியதரிசி.

### அஹிம்சா புரட்சிக்கு பூதான பிரசாரர்களின் லட்சணம்

★ ராட்டை அல்லது தக்ளி
★ கீதைப் பேருரைகள்
★ கல்விச் சிந்தனைகள்
★ பூதான இலக்கியம்
★ கிராமோதயம் வாரப் பத்திரிக்கை
★ சர்வோதயம் மாதப் பத்திரிக்கை

பின் ஜந்தும் உங்கள் படிப்பிற்கும் பிறருக்கு விற்பனை செய்யவும் போதுமானதாக இருத்தல் நலம்

சர்வோதயம், தஞ்சாவூர்.

Edited & Published by N. Ramaswami for Sarvodaya Prachuralayam of Akhila Bharat Sarva Seva Sangh, Tanjore.
Printed by Pulayar R. Ekambaranathan, at the Co-operative Press, Tanjore Ltd., Tanjore.


## எமது காந்திய-சர்வோதய இலக்கியம்

(பொது வாசகசாலைக்கும் பள்ளிக்கூட லைப்ரரிகளுக்கும் உபயோகிக்க சென்னை D. P. I. அங்கீகாரம் பெற்றவை.)

### மகாத்மா காந்தி எழுதியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| சர்வோதயம்: (ரஸ்கினின் "Unto This Last"-இன் சாரம்) | 0 | 4 |
| ஆசிரம வாழ்க்கை* | 1 | 4 |
| ராம நாமம் | 0 | 12 |
| நீதி தர்மம் | 0 | 4 |
| சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் | 0 | 4 |
| சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | 1 | 0 |
| ராட்டை தத்துவ விளக்கம்* | 1 | 4 |
| ஆசிரம பஜனாவளி | 0 | 8 |
| காந்திஜியின் சுயசரிதம்—சுருக்கம்* | 2 | 0 |
| கீதாபோதனை | 0 | 12 |

### காந்திஜி–கஸ்தூரிபா பற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| எமது பா: வனமாலா பரீக் | 1 | 4 |
| எமது பா: சுசீலா நய்யர் | 1 | 4 |
| காந்திக் காட்சிகள்: காகா காலேல்கர் | 1 | 4 |
| பாபு என் தாய்: மனுகாந்தி | 0 | 12 |
| பாப்பாவின் காந்தி: ஜுகத்ராம் தவே | 0 | 12 |

### தத்துவ நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| கீதைப் பேருரைகள்: விநோபா — சாதா பைண்டு | 1 | 0 |
| காலிகோ பைண்டு | 2 | 8 |
| சுயராஜ்ய சாஸ்திரம்—விநோபா | 1 | 4 |
| காந்தியும் மார்க்ஸும்: மஷ்ருவாலா: விநோபாஜியின் முன்னுரையுடன் | 1 | 4 |
| காந்திய நவநீதம்: கிஷோர்லால் மஷ்ருவாலா | 1 | 8 |

| காந்தீயப் பொருளாதாரம்: | ரூ. | அ. |
|---|---|---|
| ஜே. சி. குமரப்பா | 1 | 4 |
| ஐரோப்பாவின் படிப்பினைகள்: ஜே. சி. குமரப்பா | 0 | 6 |
| சர்வோதயமும் உலக அமைதியும் ஜே. சி. குமரப்பா | 0 | 2 |
| கிராமந்தோறும் சுயராஜ்யம் | 0 | 2 |
| புக்கர் வாஷிங்டன்: வ. வே. சு. ஐயர் | 0 | 8 |
| தன்னம்பிக்கை: எமர்சன்: வ. வே. சு. ஐயர் மொழி பெயர்ப்பு | 0 | 12 |
| மலஜல சுத்தி: வல்லபஸ்வாமி | 0 | 8 |
| துப்புரவு விஞ்ஞானம்: தீரேந்திர மஜும்தார் | 0 | 8 |

### கதர் சாஸ்திரம்

| நூற்புக் கணிதம்: (கிருஷ்ணதாஸ் காந்தி) | ரூ. | அ. |
|---|---|---|
| முதல் பாகம் 3-ம் பதிப்பு | 0 | 6 |
| இரண்டாம் பாகம் 3-ம் பதிப்பு | 0 | 8 |
| மூன்றாம் பாகம் | 0 | 14 |
| நான்காம் பாகம் | 1 | 0 |
| நூற்புக்கலையின் நுணுக்கங்கள் | 1 | 4 |
| தக்ளியால் நூற்பதெப்படி? | 0 | 10 |
| கைராட்டை: அதன் சரித்திரமும் புத்துயிரும் | 1 | 8 |
| கிஸான்-பெட்டி-ஈரிழை ராட்டை* | 1 | 0 |
| பட்டை போட சுலப வழி | 0 | 4 |
| நரம்பு செய்தல் | 0 | 8 |
| பருத்திப் பிரசினை* | 0 | 6 |
| கதர் நெசவு | 0 | 8 |

* இவைகள் கைவசம் இல்லை.

சர்வோதய பிரசுராலயம், சீனிவாசபுரம், தஞ்சாவூர்.

Regd. No. M. 4955 SARVODAYAM MARCH '57
(*Registered as a Newspaper in Ceylon*)

இதுவரை 7 பதிப்புகளில்
ஒரு லக்ஷம் பிரதிகள் வெளிவந்துள்ள




320 பக்கம் ] ✶ [ விலை ஒரு ரூபாய்.

எல்லா காதி வஸ்திராலயங்களிலும், ஒரிக்கின் பாதம்,
சுதேசமித்திரன் ஸ்டால்களிலும்,
பூதான பிரசாரகர்களிடமும் கிடைக்கும்.
பிரசாரகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கமிஷன் உண்டு.

இதர விபரங்களுக்கு:

★ சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர். ★